ஸ்ரீ

# ஸ்ரீமத்கம்பராமாயணம்.

# கம்பநாட்டாழ்வார்

அருளிச்செய்தது.

மூன்றாவது

## ஆரணியகாண்டம்.

இஃது

சென்னைக்கல்விச்சங்கத்துத்தமிழ்ப்புலவர்.

திரு-வேங்கடாசலமுதலியார்

பிரதிக்கினைங்க

க-பு-ஸ்ரீமாந்-தேவராசகவிராயரவர்களால்

பரிசோதித்து

சி - இராகவலுநாயுடவர்கள்

கேட்டுக்கொண்டபடி

சித்தூர்;

வீராசாமிநாயுடவர்களது

வித்தியாவிநோதவச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1884-வருடம்

# அறிவிப்பு,

இப்புத்தகம் வேண்டுபவர்கள் சென்னப்பட்டணம்புரசைப் பாக்கம் நாராயணபாளயம் வடமலைப்பிள்ளை வீதியில் - 2 - வது கதவிலக்கமுள்ளவீட்டிலும், கோயமுத்தூர் பெரியகடைவீதியில் என்னது புஸ்தகஷாப்பிலும், விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கி.

சி - வீராசாமிநாயுடு


# ஆரணியகாண்டத்திற்குப்பிழைபாடும்

# திருத்தமும்.

| பக்கம். | பாட்டு | வரி | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௧ | ௧ | ௨ | தொரு | தொறு |
| ௨௧ | ௨௩ | ௨ | கேகி | கோகி |
| ௨௭ | ௧௩ | ௩ | பொடு | பொடி |
| ௨௮ | ௨௧ | ௧ | பண் | பண்பு |
| ௩௰ | ௩௩ | ௧ | சணை | சனை |
| ௩௫ | ௨௮ | ௪ | வார் | வாள் |
| ௩௭ | ௪௮ | ௨ | செம் | செய் |
| ௩௮ | ௪௯ | ௩ | தரி | தரீ |
| ௪௩ | ௯௪ | ௪ | பம் | கம் |
| ௪௩ | ௯௬ | ௪ | தாழ் | தாள் |
| ௪௫ | ௱௫ | ௩ | வாய் | வாய |
| ௪௬ | ௱௰௮ | ௧ | சய | கய |
| ௪௮ | ௱௩௰ | ௨ | வத | மத |
| ௬௭ | ௱௪௧ | ௨ | வெருவன் | வெருன் |
| ௬௭ | ௱௪௪ | ௨ | இங் | உங் |
| ௬௮ | ௱௪௬ | ௨ | ரும் | கும் |
| ௭௩ | ௱௮௯ | ௪ | ோர் | ோரா |
| ௭௪ | ௧ | ௪ | மன்றெ | மன்றே |
| ௭௫ | ௧௨ | ௪ | தவ | தவே |
| ௮௰ | ௫௪ | ௨ | கயர் | கலையர் |
| ௮௭ | ௱௭ | ௨ | ய்வ | ப்வு |
| ௯௧ | ௱௩௯ | ௩ | மண் | கண் |
| ௯௭ | ௱௮௭ | ௪ | விளி | விணி |
| ௱௰௩ | ௬௪ | ௩ | வயி | வெயி |
| ௱௰௩ | ௬௭ | ௪ | ஞரி | ஞயிரி |
| ௱௰௭ | ௯௪ | ௧ | வால் | வாழ் |
| ௱௨௬ | ௱௬௮ | ௨ | தார | தார் |
| ௱௨௯ | ௱௯௰ | ௨ | கிளை | கினை |
| ௱௩௩ | ௨௨௩ | ௪ | அணி | அளி |

# படல அட்டவணை,


| படலம். | படலங்களின் பெயர் | பக்கம் | பாடற்றொகை |
|---|---|---|---|
| ௧-வது | விராதன்வதைப்படலம். | ௧ | ௭௧ |
| ௨-வது | சரபங்கர்பிறப்புநீங்குபடலம் | ௧௨ | ௪௪ |
| ௩-வது | அகத்தியப்படலம் | ௰௮ | ௫௯ |
| ௪ வது | சடாயுகாண்படலம் | ௨௫ | ௪௮ |
| ௫-வது | சூர்ப்பநகைப்படலம் | ௩௨ | ௧௪௨ |
| ௬-வது | கரன்வதைப்படலம் | ௪௯ | ௧௯௨ |
| ௭ வது | மாரீசன்வதைப்படலம் | ௭௰௪ | ௨௫௧ |
| ௮ வது | சடாயுஉயிர்நீத்தப்படலம். | ௧௦௫ | ௨௨௫ |
| ௯-வது | அயோமுகிப்படலம். | ௱௩௩ | ௧௦௧ |
| ௰-வது | கவந்தன்படலம். | ௱௪௬ | ௫௮ |
| ௰௧-வது | சவரிபிறப்புநீங்குபடலம். | ௧௫௫ | ௯ |




நன்றாக.   குருவாழ்க   குருவே   துணை.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

# ஸ்ரீமத்கம்பராமாயணம்*

மூன்றாவது

## ஆரணியகாண்டம்.

### முதலாவது-விராதன்வதைப்படலம்.

காப்பு.

பேதியாதுநிமிர்பேதவுருவம்பிறழ்கிலா
ஓதியோதியுணருந்தொறுமுணர்ச்சியுதவும்
வேதம்வேதியர்விரிஞ்சன்முதலோர்தெரிகிலா
ஆதிதேவரவரெம்மறிவினுக்கறிவரோ. (௧)

---

முத்திருத்தியவ்விருந்தனையமொய்நகையொடும்
சித்திரக்குனிசிலைக்குமரர்சென்றணுகினார்
அத்திரிப்பெயரருந்தவனிருந்தவமைதி
பத்திரப்பழுமரப்பொழிறுவன்றபழுவம்.

திக்குறுஞ்செறிபரந்தெரியநின்றதிரள்பொற்
கைக்குறுங்கண்மலைபோல்குமரர்காமமுதலாம்
முக்குறும்பறவெறிந்தவினைவாண்முனிவனைப்
புக்கிறைஞ்சினாருந்தவனுவந்துபுகலும்.

குமரர்நீரிவணடைந்துதவுகொள்கையெளிதோ
அமரர்யாவரொடுமெவ்வுலகும்வந்தவளவே
எமரின்யார்தவமுயன்றவர்களென்றுருகினன்
தமரொலாம்வரவுகந்தனையதானமுனிவன். (௪)

அன்னமாமுனியொடன்றவணுறைந்தவனரும்
பன்னிகற்பினநுசூயைபணியாலணிகலன்
துன்னுதூசினொடுசந்திவைசுமந்தசனகன்
பொன்னொடேகியுயர்தண்டகவனம்புகுதலும்: (௫)

எட்டொடெட்டுமதமாகரியிரட்டியரிமா
வட்டவெங்கண்வரையாளிபதினாறுவகையின்
இட்டவிட்டிடைகிடந்தனசெறிந்தவொருகை
தொட்டமுத்தலையிற்றொங்கமிடற்கழுவொடே— (௬)

செஞ்சுடர்ச்செறிமயிர்ச்சுருள்செறிந்தசெனியன்
நஞ்சுதட்டுருவுபெற்றிடைநடந்ததெனமா
மஞ்சுசுற்றியவயங்குகிரிபாதவிசையின்
பஞ்சுபட்டதுபடப்படியின்மேன்முடுகியே. (௭)

புண்டுளங்கியனகண்கள்கனல்பொங்கமழைசூழ்
விண்டுளங்கிடவிலங்கல்கள்குலுங்கவெயிலும்
கண்டுளங்கதிர்குறைந்திடநெடுங்கடல்சுலாம்
மண்டுளங்கவயவந்தகன்மனந்தளரவே. (௮)

புக்குவாளரிமுழங்குசெவியின்பொறியுறப்
பக்கமின்னுமணிமேருசிகரங்குழைபடச்
செக்கர்வான்மழைநிகர்த்தவெதிருற்றசெருவத்
துக்கவீரருதிரத்தினொளிர்செச்சையினொடே. (௯)

படையொடாடவர்கள்பாய்புரவிமால்களிறுதேர்
நடையவாளரிகள்கோளுழுவைநண்ணியவெலாம்
அடையவாரிவரவாலசையநேகவிதவந்
தொடையன்மாலைதுயல்வந்துலவுதோள்பொலியவே. (௰)

குன்றுதுன்றினவெனக் குமுறுகோபமதமா
ஒன்றினொன்றிடையடுக்கினதடக்கையுதவப்
பின்றுகின்றபிலனிற்பெரியவாயினொருபால்
மென்றுதின்றுவிளியாதுவிரியும்பசியொடே. (௰௧)

பன்னகாதிபர்பணாமணிபறித்தவைபகுத்
தென்னவிண்ணவர்விமானமிசையிட்டவிடைத்
துன்னுகோளினொடுதாரகைதொடுத்ததுழனிச்
சன்னவீரமிடைமின்னுதடமார்பினொடுமே. (௧௨)

பம்புசெக்கரெரியொக்குமயிர்பக்கமெரியக்
கும்பமுற்றவுயர்நெற்றியின்விசித்தொளிகுலாம்
உம்பருக்கரசன்மால்கரியினோடையெயிறின்
கிம்புரிப்பெரியதோள்வளையொடுங்கிளரவே. (௧௩)

தங்குதிண்கரியகாளிமைதழைந்துதவழப்
பொங்குவெங்கொடுமையென்பதுபுழுங்கியெழமா
மங்குபாதகம்விடங்கனல்வயங்கிதிமிரக்
கங்குல்பூசிவருகின்றகலிகாலமெனவே. (௧௪)

செற்றவாளுழுவைவன்செறியதட்டிருகுறச்
சுற்றிவாரணவுரித்தொகுதிநீவிதொடரக்
கொற்றமேவுதிசையானையின்மணிக்குலமுடைக்
கற்றைமாசுணம்விரித்துவரிகச்சொளிரவே. (௧௫)

செங்கணங்கவரவின்பொருவில்செம்மணிவிராய்
வெங்கணங்கவலயங்களும்விலங்கவிரவிச்
சங்கணங்கியசலஞ்சலமலம்புதவளக்
கங்கணங்களுமிலங்கியகரம்பிறழவே. (௧௬)

முந்துவெள்ளிமலைபொன்னின்மலையோடுமுரணப்
பந்துமுந்துகழல்பாடுபடவூடுபடர்வோன்
வந்துமண்ணினிடையோனெனினும்வானினிமையோர்
சிந்தையுள்ளும்விழியுள்ளுமுளனென்றதிறலோன். (௧௭)

பூதமத்தனையுமோர்வடிவுகொண்டுபுதிதென்
றோதவொத்தவுருவத்தனுருமொத்தகுரலன்
காதவித்தயனளித்தகடையிட்டகணிதப்
பாதலக்கமதவெற்பிடைபடைத்தவலியான். (௧௮)

சாரவந்தயல்விலங்கினன்மரங்கடறையில்
பேரவன்கிரிபிளந்துகவளர்ந்திகல்பெறா
வீரவெஞ்சிலையினோடெதிர்விராதனெனுமக்
கோரவெங்கணுருமேறனகொடுந்தொழிலினான். (௧௯)

நில்லுநில்லுமெனவந்து நிணமுண்டநெடுவெண்
பல்லும்வல்லெயிறுமின்னுபகுவாய்முழைதிறந்
தல்லிபுல்லுமலரன்னமனையாளையொருகைச்
சொல்லுமெல்லையின்முகந்துயர்விசும்புதொடர. (௨௰)

காளைமைந்தரதுகண்டுகதம்வந்துகதுவத்
தோளின்வெஞ்சிலையிடங்கொடுதொடர்ந்துசுடர்வாய்
வாளிதங்கியவலங்கையவர்வந்தனையடா
* மீளுகெங்ககறியென்பதுவிளம்பவவனும். (௨௧)

ஆதிநான்முகன்வரத்தினொதாவியகலேன்
ஏதியாவதுவுமின்றியுலகியாவுமிகலின்
சாதியாதனவுமில்லையுயிர்தந்தனனடா
போதிர்மாறிவளையுந்தியினிதென்றுபுகல. (௨௨)

வீரனுஞ்சிறிதுவெண்முறுவல்வெண்ணிலவுகப்
போரறிந்திலனிவன்றனதுபேர்ற்புமுரணும்
தீருமெஞ்சியெனநெஞ்சினுறுசிந்தைதெரியாப்
பாரவெஞ்சிலையினாணொலிபடைந்தபொழுதே. (௨௩)

இலைகொள்வேலடவிராமனெழுமேகவுருவன்
சிலைகொணாணெடியகோணடியொலியேறுதிசைநீர்
மலைகள்நீடுதலநாகர்பிலம்வானமுதலாம்
உலகமேழுமுருமேறெனவொலித்துரறவே. (௨௪)

வஞ்சகக்கொடியபூசைநெடுவாயின்மறுகும்
பஞ்சரக்கிளியெனக்கதறுபாவையைவிடா
நெஞ்சுருக்கினனெனச்சிறிதுநின்றுநினையா
அஞ்சனக்கிரியனானைதிராக்கனழலா. (௨௫)

பேய்முகப்பிணியறப்பகைஞர்பெட்பினுதிரம்
தோய்முகத்ததுகனத்ததுசுடர்க்குநிரையின்
வாய்முகத்திடைநிமிர்ந்துவடவேலைபருகும்
தீமுகத்திரிசிகைப்படைதிரித்தெறியவே. (௨௬)

திசையும்வானவருநின்றதிசைமாவுமுலகும்
அசையுமாலமெனவன்னவயின்மின்னிவரலும்
வசையின்மேருமுதன்மால்வரைகளேழின்வலிசால்
விசையவார்சிலையிராமனொருவாளிவிடவே. (௨௭)

* மீடியெங்ககறி எனவும் பாடமுண்டு.

இற்றதின்றொடிவ்வரக்கர்குலமென்றுபகலே
வெற்றவிண்ணினிடைநின்றுநெடுமீன்விழுவபோல்
சுற்றமைந்தசுடரொஃகமதிரண்டுதுணியா
அற்றகண்டமவையாசையினதந்தமுறவே. (௨௮)

கூரொடுங்கயிறுணிந்திறுதல்கண்டுசிறிதும்
போரொடுங்கிலன்மறங்கொடுபுழுங்கிநிருதன்
பாரொடுங்குறுகரங்கொடுபெருப்பதமெலாம்
வேரொடுங்கடிதெடுத்தெதிர்விசைத்துவிடலும். (௨௯)

வட்டமிட்டகிரியற்றுகவயங்குவயிரக்
கட்டமைத்தகதிர்வாளியெதிரேகடவலான்
விட்டவிட்டமலைமீளவவன்மெய்யின்விசையால்.
பட்டபட்டவிடமெங்குமுடலூறுபடலும். (௩௰)

ஓமராமனையொருங்குமுணர்வோருணர்வுறும்
நாமராமவனைநல்லறநிறுத்தநணுகித்
தாமராவணைதுறந்துதனைநின்றவனையோர்
மாமராமரமிறுத்ததுகொடெற்றவனும். (௩௧)

ஏறுசேவகனிரண்டொடிரண்டுகணையால்
வேறுவேறுதுணிசெய்ததுவிழுத்துவிசையால்
மாறுமாறுநிமிர்தோளிடையுமார்பினிடையும்
ஆறுமாறுமயில்வெங்கணையழுத்தவவனும். (௩௨)

மொய்த்தமுட்டனதுடற்றலைதொளைப்பமுடுகிக்
கைத்தலத்தினிமிரக்கடிதுகன்றிவிசிறும்
மெய்த்தமெய்ப்பெரியகேழலெனவெங்கும்விசையின்
தைத்தவக்கணைதெறிப்பமெய்சிலிர்த்துதறவே. (௩௩)

எரியின்வார்கணையிராமன்விடவெங்குநிலையா
துருவியோடமறமோடுதல்செயாவுணர்வினன்
அருவிபாயும்வரைபோல்குருதியாறுபெருகிச்
சொரியவேகவலிகெட்டுணர்வுசோர்வுறுதலும் (௩௪)

மெய்வரத்தினன்மிடற்படைவிடப்படுகிலன்
செய்யுமற்றுமிகலென்றுசினவாளுருவிவன்
கய்துணித்துமெனமுந்துகடுகிப்படர்புயத்
தெய்வின்மற்பொருவுதோளிருவரோறநிருதன். (௩௫)

உண்டெழுந்தவுணர்வவ்வயினுணர்ந்துமுடுகித்
தண்டெழுந்தனையதோள்கொடுசுமந்துதழுவிப்
பண்டெழுந்தனதுவன்கதிப்திற்றின்முடுகிக்
கொண்டெழுந்தனன்விழுந்தழிகொழுங்குருதியான். (௩௬)

முந்துவான்முகடுறக்கடிதுமுட்டிமுடுகிச்
சிந்துசோரியொடுசாரிகைதிரிந்தனனரோ
வந்துமேருவினைநாடொறும்வலஞ்செய்துழல்வோர்
இந்துசூரியரையொத்திருவரும்பொலியவே. (௩௭)

சுவணவண்ணனெடுகண்ணனுறைதோளன்விசைதோய்
அவணவிண்ணிடைநிமிர்ந்துபடர்கின்றவனறம்
சிவணதன்னசிறைமுன்னவரோடேகுசெலவத்
துவணனென்னுநெடுமன்னவனுமொத்தனனரோ. (௩௮)

மாதயாவுடையதன்கணவன்வஞ்சன்வினையில்
போதலோடுமலமந்தனள்புலர்ந்துபொடியில்
கோதையோடுமொசிகொம்பெனவிழுந்தனள்குலச்
சீதைசேவல்பிடியுண்டசிறையன்னமனையாள். (௩௯)

பின்னையேதுமுதவுந்துணைபெறுஞாபெறுள்
மின்னையேயிடைநுடங்கிடவிரைந்துதொடர்வாள்
அன்னையேயனையவன்பினறவோர்கடமைவிட்
டென்னையேநுகர்தியென்றனளெழுந்துவிழுவாள். (௪௰)

அழுதுவாய்குழறியாருயிரழுங்கியலையா
எழுதுபாவையனையாணிலையுணர்ந்திளையவன்
தொழுதுதேவிதுயர்கூரவிளையாடெறுழிலோ
பழுதுவாழியெனவூழிமுதல்வன்பகர்வுறும். (௪௧)

ஏகநின்றநெறியெல்லைகடிதேறியினிநின்
போகனன்றெனநினைந்தனனிலன்பொருவிலோய்
சாகவின்றுபொருளன்றெனநகுந்தகைமையோன்
வேகவெங்கழலினுந்தலும்விராதன்விழவே. (௪௨)

தோளிரண்டும்வடிவாள்கொடுதுணித்துவிசையால்
மீளிமொய்ம்பினர்குதித்தலும்வெகுண்டுபுருவத்
தேளிரண்டுநெரியச்சினவுசெங்கணரவக்
கோளிரண்டுசுடருந்தொடர்வதிற்குறுகலும். (௪௩)

புண்ணிடைப்பொழியுயிர்ப்புனல்பொலிந்துவரலும்
விண்ணிடைப்படர்தல்விட்டெழுவிகற்பநிலையா
எண்ணுடைக்குரிசிலெண்ணியிளையோயிவனையிம்
மண்ணிடைக்கடிதுபொத்துதல்வழக்கெனலுமே. (சச)

மதநல்யானையனையானிலம்வகிர்ந்தகுழிவாய்
நதமுலாவுநளிநீர்வயினமுந்தநவைதீர்
அதவமாய்நறுநெயுண்டுலகிலன்பர்கருதிற்
றுதவுசேவடியினாலமலனுந்துதலுமே. (சரு)

பட்டதன்மையுமுணர்ந்துபடர்சாபமிடமுன்
கட்டவன்பிறவிதந்தகண்டயானவுடறான்
விட்டுவிண்ணிடைவிளங்கினன்விரிஞ்சனெனவோர்
முட்டைதந்ததனில்வந்தமுதன்முன்னவனினே. (சசு)

பொறியினொன்றியயல்சென்றுதிரிபுந்தியுணரான்
நெறியினொன்றிநிலைநின்றநினைவுண்டதனினும்
பிறிவிலன்புதனிபண்டுடையபெற்றிதனினும்
அறிவுவந்துதவநம்பனையறிந்துபகர்வான். (சஎ)

(வேறு.)

வேதங்களறைகின்றவுலகெங்கும்விரிந்தனவுன்
பாதங்களிவையென்னிற்படிவங்களெப்படியோ
ஓதங்கொள்கடலன்றியொன்றினொடொன்றுறவ்வாப்
பூதங்கடொறுமுறைந்தால்வையுன்னைப்பொறுக்குமோ. (சஅ)

கடுத்தகராங்கதுவநிமிர்கையெடுத்துமெய்கலங்கி
உடுத்ததிசையனைத்தினுஞ்சென்றொலிகொள்ளவுறுதுயரால்
அடுத்தபெருந்தனிமூலத்தரும்பரமேபரமேயென்
றெடுத்தொருவாரணமழைப்பநீயோவன்றேனென்றாய். (சகூ)

புறங்காணவகங்காணப் பொதுமுகத்தினருணோக்கம்
இறங்காததாமரைக்கணெம்பெருமாஅணியம்புதியால்
அறங்காத்தற்குனக்கொருவராருமொருதுணையின்றிக்
கறங்காகுமெனத்திரியநீயேயோகடவாய்தான். (ருய)

துறப்பதேதொழிலாகத்தோன்றினோர்தோன்றியக்கால்
மறப்பரோதம்மையதுவன்றாகின்மற்றவர்போல்
பிறப்பரோவெவர்க்குந்தாம்பெற்றபதம்பெறலரிதே
இறப்பதேபிறப்பதேயெனும்வினையாட்டினிதுகந்தோய். (ருக)

பனிநின்றபெரும்பிறவிக்கடல்கடக்கும்படிபற்றி
நனிநின்றசமயத்தோரெல்லாருநன்றென்னத்
தனிநின்றதத்துவத்தின்றகைமூர்த்திநீயாகின்
இனிநின்றமுதற்றேவரென்கொண்டென்செய்வாரே. (ருஉ)

ஓயாதமலரயனேமுதலாகவுளராகி
மாயாதவானவர்க்குமற்றொழிந்தமன்னுயிர்க்கும்
நீயாகின்முதற்றாதைநெறிமுறையாலீன்றெடுத்த
தாயாவார்யாவரோதருமத்தின்றனிமூர்த்தி. (ருங)

நீயாதிபரம்பரமுநின்னவேயுலகங்கள்
ஆயாதசமயமுநின்னடியவேயயலில்லை
தியாரினொளித்தியால்வெளிநின்றாற்றீங்குண்டோ
வீயாதபெருமாயை விளையாட்டும்வேண்டுமோ. (ருச)

தாய்தன்னையறியாதகன்றில்லைநன்கன்றை
ஆயுமறியும்முலகின்றாயாகினைய
நீயறிதியெப்பொருளுமவையுன்னைநிலையறியா
மாயையிதுவென்கொலோவாராதேவரவல்லாய். (ருரு)

பன்னலாமென்றுலகம் பலபலவுநினையுமால்
உன்னலாற்பெருந்தெய்வமுயர்ந்துளோரொழுக்கன்றே
அன்னவூர்தியைமுதலாமந்தணர்மாட்டருந்தெய்வம்
நின்னலாவில்லாமைநெறிநின்றார்நினையாரே. (ருசா)

பொருவரியசமயங்கள் புகல்கின்றபுத்தேளிர்
இருவினையுமுடையார்போலருந்தவநின்றியற்றுவார்
திருவுறையுமணிமார்பநினக்கென்னைசெயற்பால
ஒருவினையுமில்லார்போலுறங்குதியாலுறங்காதாய். (ருஎ)

அரவாகிச்சுமத்தியாலயிலெயிற்றினேந்துதியால்
ஒருவாயின்விழுங்குதியாலோரடியாலொளித்தியால்
திருவானநிலமகளையிஃதறிந்தாற்சீறாளோ
மருவாருந்துழாயலங்கன் மணிமார்பின்வைகுவாள். (ருஅ)

மெய்யைத்தான்சிறிதுணர்ந்துநீவிதித்தமன்னுயிர்கள்
உய்யத்தானாகாதோவுனக்கென்னகுறையுண்டோ
வய்யத்தார்வானத்தார்மூவாளிக்கன்றளித்த
அய்யத்தாற்சிறிதையந்தவிர்ந்தாருமுளரையா. (ருகூ)

அன்னமாயருமறைகளறைந்தாய்நீயவையுன்னை
முன்னமாரோர்த்துவித்தாரெல்லாருமுடிந்தாரே
பின்னமாயொன்றாதல்பிறிந்தேயேபிறியாதோ
எவ்வமாமாயமிவையேனமாய்மண்ணிடந்தாய். (௬௰)

ஒப்பிறையும்பெறலரியவொருவாமுன்னுவந்துறையும்
அப்புறையுமிறந்தடியேனருந்தவத்தாலணுகுறலால்
இப்பிறவிக்கடல்கடந்தே னினிப்பிறவேனிருவினையும்
துப்புறழுநீர்த்தசுடர்த்திருவடியாற்றுடைத்தாய்நீ. (௬௧)

(வேறு.)

இற்றெலாமியம்பினான்
நிற்றலோடுநீயிவ்வா
றற்றவாறுணர்த்தெனா
வெற்றியான்விளம்பினான். (௬௨)

கள்ளமாயவாழ்வெலாம்
விள்ளஞானம்வீசுதாள்
வள்ளல்வாழிகெளனா
உள்ளவாறுணர்த்தினான். (௬௩)

இம்பருற்றிதெய்தினேன்
வெம்புவிற்கைவீரபேர்
தும்புருத்தனதன்சூழ்
அம்பரத்துளேனரோ. (௬௪)

கரக்கவந்தகாமநோய்
துரக்கவந்ததோமினால்
இரக்கமின்றியேவினான்
அரக்கன்மைந்தனாயினேன். (௬௫)

அன்னயக்கன்ஆதியாய்
இன்னதீருமீகையான்
கின்னதாளினீங்குமென்
றன்னுமெற்குணர்த்தினான். ()

அன்றுமூலமாதியாய்
இன்றுகாறுமேழையேன்
நன்றுதீதுநாடலேன்
நின்றுநீயதேடினேன். (௬௭)

தூண்டநின்றதொன்மைதான்
வேண்டநின்றவேதநூல்
பூண்டநின்பொலங்கொடாள்
தீண்டவின்றுதேறினேன். (௬௮)

தெறுத்துவந்ததீதெலாம்
அறுத்தவுன்னையாதனேன்
ஒறுத்ததன்மையூழியாய்
பொறுத்தியென்றுபோயினான். ()

தேவுகாதல்சீரியோன்
ஆவிபோயினானெனா
பூவுலர்வுபூவையோ
டேவலாருமேகினார். (௭௰)

கய்கொள்காலவேலினார்
மெய்கொள்வேதமெய்யர்வாழ்
மொய்கொள்சோலைமுன்னினார்
வய்கல்தானும்வைகினார். (௭௧)

முதலாவது - விராதன்வதைப்படலம் முற்றிற்று,

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்,

—※—

எல்லாவுலகிற்குமுயர்ந்தமையான்
சொல்லாவகைநீயுணர்தொன்மையயால்
நல்லாயுடனோநடநீயெனலும்
அல்லேனெனவாலறிவானறைவான். (௧௭)

சொற்பொங்குபெரும்புகழோய்தொழின்மாய்
சிற்பங்களின்வீவனசேர்குவெனே
அற்பங்கருதேனெனருந்தவமோ
கற்பம்பலசென்றதுகாணுதியால். (௧௮)

சொற்றுந்தரமன்றிதுசூழ்கழலாய்
பெற்றும்பெறுகில்லதொர்பெற்றியதே
மற்றென்பலசொல்லிவண்வந்துதவம்
முற்றும்பகனுமுடித்தனனால். (௧௯)

சிறுகாலையிலாநிலையோதிரியா
குறுகாநெடுகாகுணம்வேறுபடா
உறுகால்கிளர்பூதமெலாமுகினும்
மறுகாநெறியெய்துவென்வானுடையாய். (௨௰)

என்றின்னவிளம்பிடுமெல்லையின்வாய்
வன்றிண்சிலைவீரரும்வந்தணுகா
ஒன்றுங்கிளரோதையினாலுணர்வார்
நின்றென்னைகொலின்னதெனாநினைவார். (௨௧)

கொம்பொத்தனநாலொளிர்கோள்வயிரக்
கம்பக்கரிநின்றதுகண்டனமால்
இம்பர்த்தலைமாதவர்பாலிவனும்
உம்பர்க்கரசெய்தினனென்றுணரா. (௨௨)

மானேயனையாளொடுமைந்தனையும்
பூநேர்பொழிலின்புறமேநிறுவா
ஆனேறெனவாளறியேறிதெனத்
தானேயவ்வகன்பொழில்சாருதலும். (௨௩)

கண்டாமவையாயிரமுங்கதுவக்
கண்டாமணைபோல்கருஞாயிறெனக்
கண்டானிமையோரிறைகாசினியின்
கண்டானருநான்மறையின்கனியை. (௨௪)

காணாமனநொந்துகவன்றனனால்
ஆணாதனையந்தணர்நாயகனை
நாணாளும்வணங்கியநன்முடியால்
தாணாகியதோள்கொடவற்றொழுவான், (உரு)

வேறு.

துவசமார்தொல்லமருட்டுன்னைச்செற்றுஞ்
சுருதிப்பெருங்கடலின்சொற்பொருள்கற்பித்தும்
திவசமாநல்லறத்தின்செந்நெறியினுய்த்துந்
திருவளித்தும்வீடளித்துஞ்சிங்காஸமத்தங்கள்
கவசமாயாருயிராய்த்தவமாய்க்கண்ணாய்க்
கடையிலாஞானமாய்க்காப்பானைக்காணா
அவசமாய்ச்சிந்தையழிந்தயலேநின்று
னறியாதான்போலவறிந்தவெலாஞ்சொல்வான். (உசா)

தோய்ந்தும்பொருளனைத்துந்தோயாதுநின்ற
சுடரோதொடக்கறுத்தோர்சுற்றமேபற்றி
நீந்தவரியநெடுங்கருணைக்கெல்லா
நிலயமேவேதநெறிமுறையினேடி
ஆய்ந்தவுணர்வினுணர்வேபகையினா
லலைப்புண்டடியேமடிபோற்றவந்நாள்
ஈந்தவாமுதவவெய்தினையேயெந்தா
யிருநிலத்தவோநின்னிணையடித்தாமரைதாம். (உஎ)

மேவாதவரில்லைமேவினருமில்லை
வெளியோடிருளில்லைமேல்கீழுமில்லை
மூவாமையில்லைமூத்தன்மையுமில்லை
முதலிடையோடீறில்லைமுன்னொடுபின்னில்லை
தேவாவிங்கிவ்வோநீசென்றநிலையென்றால்
சிலையேந்திவந்தெம்மைச்சேவடிகணோவக்
காவாதொழியிற்பழிபெரிதோவன்றேற்
கருங்கடலிற்கண்வளராய்கைம்மாறுமுண்டோ. (உஅ)

நாழிநவைதீருலகெலாமாக
நளினத்துநீதந்தநான்முகனார்தாமே
ஊழிபலபலவுநின்றளந்தாலொன்று
முலவாப்பெருங்குணத்தவுத்தமனேமேனாள்

தாழிதனையாகத்தண்டயிர்நீராகத்
தடவரையேமத்தாகத்தாமரைக்கைநோவ
ஆழிகடைந்தமுதமெங்களுக்கேயீந்தா
யவுணர்கடாநின்னடிமையல்லாமையுண்டோ, (௨௯)

ஒன்றாகிமூலத்தொருவம்பலவாகி
யுணர்வுமுயிரும்பிறிதாகியூழி
சென்றாசறுங்காலத்தந்நிலையனாகித்
திறத்துலகந்தானாகிச்செஞ்செவேநின்ற
நன்றாயஞானத்தனிக்கொழுந்தேயெங்கள்
நவைதீர்க்குநாயகமேநல்வினையேநோக்கி
நின்றாரைக்காத்தியயற்பேரைக்காய்தி
நிலையில்லாத்தீவினையுநீதந்ததன்றே. (௩௰)

வல்லைவரம்பில்லாதமாயவினைதன்னான்
மயங்கினரோடெய்திம்மயங்கிமேனான்
அல்லாயிறைவனீயாதியெனப்பேதுற்
றலமருவேமுன்னையறப்பயனுண்டாக
எல்லைவலயங்கணின்னுழையென்றந்நா
ளெரியோனைத்தீண்டியெழுவொனநின்ற
தொல்லைமுதன்முனிவர்சூழ்ந்றபோதே
தொகைநின்றவையந்துடைத்திலையோவெந்தாய். (௩௧)

வேறு.

இன்னனபலநினைந்தேத்தினனியம்பாத்
துன்னுதலிடையுளதெனநனிதுணிவான்
தன்னிகர்முனிவனைத்தரவிடையென்றாழ்
பொன்னொளிர்நெடுமுடிப்புரந்தரன்போனான். (௩௨)

போனவனகநிலைபுலமையினுணர்வான்
வானவர்தலைவனைவரவெதிர்கொண்டான்
ஆனவனடிதொழவருள்வரவழுதான்
தானடவிடவகைதழுவினனுழைவான். (௩௩)

ஏழையுமிளவலும்வருகெனவிளிதா
வாழியவவரொடும்வந்தனன்மகிழ்வால்
ஊழியின்முதன்முனியுறையுளையணுகா
ஆழியில்விழிதுயிலவனெனமகிழ்வான். (௩௪)

அவ்வயினழகனும்வைகினனறிஞன்
செவ்வியவறவுரைசெவிவயினுதவ
நவ்வியின்விழியவளொடுநனியிருளைக்
கவ்வியநிசியொருகடையுறுமளவின். (௩௫)

விலகிடுநிழலினன்வெயில்விரியயில்வாள்
இலகிடுசுடரவனிசையனதிசைதோய்
அலகிடலரியதனவிர்கரநிரையால்
உலகிடுநிறையிருளுறையினையுரிவான். (௩௬)

ஆயிடையறிஞனுமவனெதிரழுவத்
தீயினைநுழைவதொர்தெளிவினையுடையான்
நீவிடைதருகெனநிறுவினனெறியால்
காயெரிவரன்முறைகடிதினினிடுவான். (௩௭)

வரிசிலையுழவனுமறையுழவனைநீ
புரிதொழிலெனையதுபுகலுதியெனலும்
திருமகடலைவசெய்திருவினையுறயான்
எரிபுகநினைகுவெனருள்கெனவிறைவன். (௩௮)

யான்வருமமைதியினிதுசெயலெவனோ
மான்வருதனியுரிமார்பினையெனலும்
மீன்வருகொடியவன்விறலடுமறவோன்
ஊன்வருமுவகையினுரைநனிபுரிவான். (௩௯)

ஆயிரமுகமுளதவமயர்குவெனான்
நீயிவண்வருதிகொலெனுநிலையுடையேன்
போயினவிருவினைபுகலுறுவிதியால்
மேயினையினியொருவினையிலைவிறலோய். (௪௰)

இந்திரனருளினனிறுதிசெய்பகலா
வந்தனன்மருவுதிமலரயனுலகம்
தந்தனனெனவதுசாரலெனுரவோய்
அந்தமிலுயர்பதமடைதலைமுயல்வேன். (௪௧)

ஆதலினிதுபெறவருளெனவுரையாக்
காதலியவளொடுகதழெரிமுழுகிப்
போதலைமருவினனொருநெறிபுகலா
வேதமுமறிவருமிகுபொருளுணர்வோன். (௪௨)

தேவருமுனிவருமுறுவதுதெரிவோர்
மாவருநறுவிரைமலரயன்முதலோர்
ஏவருமறிவினிலிருவினையொருவிப்
போவதுகருதுமவ்வருநெறிபுக்கான். (௪௩)

அண்டமுமகிலமுமறிவருநெறியால்
உண்டவனொருபெயருணர்குநருறுபே
றெண்டகுநெடிதெனினிறுதியிலவனைக்
கண்டவருறுபொருள்கருதுவதெளிதே. (௪௪)

௨-வது. சரபங்கர்பிறப்புநீங்குபடலமுற்றிற்று. ஆக-திருவிருத்தம்-௧௧௫

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

---

## ௩-வது. அகத்தியப்படலம்.

அனையமணிநதியினையவ்வேகலின்
இனியவரின்னவினிரங்குநெஞ்சினர்
குனிவருதிண்சிலைக்குமரர்கொம்பொடும்
புனிதனதுறையுணின்றரிதிற்போயினர். (௧)

மலைகளுமரங்களுமணிக்கற்பாறையும்
அலைபுனனதிகளுமருவிச்சாரலும்
இலைசெறிபழுவமுமினியசூழலும்
நிலைமிகுதடங்களுமினிதுநீங்கினர். (௨)

பண்டையவயன்றருபாலகில்லரும்
முண்டருமோனருமுதலினோர்களைத்
தண்டகவனத்துறைதவத்துளோர்கடாம்
கண்டனரிராமனைக்களிக்குஞ்சிந்தையார். (௩)

கனைவருகடுஞ்சினத்தரக்கர்காயவோர்
வினைபிறிதின்மையின்வெதும்புகின்றனர்
அனைவருகானகத்தமுதளாவிய
புனைவரவுயிர்வருமுலனைவபோல்கின்றார். (௪)

ஆய்வரும்பெருவலியரக்கர்நாமமே
வாய்வெரீஇயலமருமறுக்கநீங்கினார்
தீவருவனத்திடையிட்டுத்தீர்ந்ததோர்
தாய்வரநோக்கியகன்றின்றன்மையார். (௫)

கரக்கருங்கடுந்தொழிலரக்கர்காய்தலின்
பொரற்கிடமின்மையிற்புழுங்கிச்சோருநர்
அரக்கனொன்கடலிடையாழ்கின்றாரொரு
மரக்கலம்பெற்றெனமறுக்கநீங்கினார். (௬)

தெரிஞ்சுறநோக்கினர்செய்தசெய்தவம்
அருஞ்சிறப்புதவநல்லறிவுகைதர
விரிஞ்சுறப்பற்றியபிறவிவெந்துயர்ப்
பெருஞ்சிறைவீடுபெற்றனையபெற்றியார். (௭)

வேண்டினவேண்டினர்க்களிக்குமெய்த்தவம்
பூண்டுளராயினும்பொறையினாற்றலால்
மூண்டெழுவெகுளியைமுதலினீக்கினார்
ஆண்டுறையரக்கராலலைப்புண்டாரரோ. (௮)

எழுந்தனவொய்தினரிருண்டமேகத்தின்
கொழுந்தெனநின்றவக்குரிசில்வீரனைப்
பொழிந்தெழுகாதலிற்பொருந்தினாரவன்
தொழுந்தொறுந்தொழுந்தொறுமாசிசொல்லுவார். (௯)

இனியதோர்சாலைகொண்டேகியிவ்வயின்
நனியுறையென்றவற்கமையநல்கித்தாம்
தனியிடஞ்சார்ந்தனர்தங்கிமாதவர்
அனைவருமெய்தினரல்லல்சொல்லுவான். (௧௰)

எய்தியமுனிவரையிறைஞ்சியேத்துவந்
தையனுமிருந்தனனருளென்னென்றலும்
வையகங்காவலன்மதலைவந்ததோர்
வெய்யவெங்கொடுந்தொழில்விளைவுகேளெனா. (௧௧)

இரக்கமென்றொருபொருளிலாதநெஞ்சினர்
அரக்கரொன்றுளர்சிலரறத்தினீங்கினார்
நெருக்கவும்யாம்படர்நெறியலாநெறி
துரக்கவுமருந்தவத்துறையுநீங்கினேம். (௧௨)

வல்லியம்பலதிரிவனத்துமானென
எல்லியும்பகலுநொந்திரங்கியாற்றலெம்
சொல்லியவறநெறித்துறையுநீங்கினேம்
வில்லியன்மொய்ம்பினாய்வீடுகாண்குமோ. (௧௩)

மாதவத்தொழுகலெமறைகள்யாவையும்
ஓதலெமோதுவார்க்குதவலாற்றலெம்
மூதெரிவளர்க்கிலெமுறையினீங்கினேம்
ஆதலினந்தணரேயுமாகிலேம். (கச)

இந்திரனெனினவனரக்கரேயின
சிந்தையிற்சென்னியிற்கொள்ளுஞ்செய்கையான்
எந்தமற்றியாருளரிடுக்கணீக்குவார்
வந்தனையாஞ்செய்ததவத்தின்மாட்சியால். (கரு)

உருளுடைநேமியாலுலகையோம்பிய
பொருளுடைமன்னவன்புதல்வபோக்கிலா
இருளுடைவைகலேம்இரவிதோன்றினாய்
அருளுடைவீரநின்னபயம்யாமென்றார். (கசு)

(வேறு.)

புகல்புகுந்திலரோற்புறத்தண்டத்தின்
அகல்வரோனுமென்னம்பொடும்வீழ்வரால்
தகவிறுன்பந்தவிருதிர்நீரெனாப்
பகலவன்குலமைந்தன்பணிக்கின்றான். (கஎ)

வேந்தன்வீயவும்யாய்வரமேவவும்
ஏந்தலெம்பிவருந்தவுமென்னகர்
மாந்தர்வன்றுயர்கூரவும்யான்வனம்
போந்ததென்னுடைப்புண்ணியத்தாலென்றான். (கஅ)

அறந்தவாநெறியந்தணர்தன்மையை
மறந்தபுல்லர்வலிதொலையேனெனின்
இறந்துபோகினுநன்றிதுவல்லது
பிறந்தியான்பெறும்பேறென்பதியாவதோ. (க௯)

நிவந்தவேதியர்நீவிருந்தியவர்
கவந்தபந்தக்களிநடங்கண்டிட
அமைந்தவில்லுமருங்கணைத்தூணியும்
சுமந்ததோளும்பொறைத்துயர்தீருமால். (உ0)

ஆவுக்காயினுமந்தணர்க்காயினும்
யாவர்க்காயினுமெளியவர்க்காயினும்
சாவப்பெற்றவரேதகைவானுறை
தேவர்க்குந்தொழுந்தேவர்களாகுவார். (உக)

சூரறுத்தவனுஞ்சுடர்நேமியும்
ஊரறுத்தவொருவனுமோம்பினும்
ஆரறத்திணொட்டூன்றிநின்றுரவர்
வேரறுப்பென்வருவன்மினீரொன்றான். (உ௨)

உரைத்தவாசகங்கேட்டுவந்தோங்கிட
இரைத்தகாதலகேகியவின்னலர்
திரித்தகோலினர்தேமறைபாடினர்
நிருத்தமாடினர்நின்றுவிளம்புவார். (உ௩)

தோன்றனீமுனியிற்புவனத்தொகை
மூன்றுபோல்வனமுப்பதுகோடிவந்
தேன்றபோதுமெதிரலவென்றலின்
சான்றுவேதந்தவம்பெருஞானமே. (உ௪)

அன்னதாகலினேயினவாண்டெலாம்
இன்னல்காத்திங்கினிதுறைவாயெனச்
சொன்னமாதவர்பாதந்தொழுதுயர்
மன்னர்மன்னவன்மைந்தனும்வைகினான். (உ௫)

ஐந்துமைந்துமமைதியினண்டவண்
மைந்தர்தீதிலர்வைகினர்மாதவர்
சிந்தையெண்ணியகத்தியற்சேர்கென
இந்துநன்னுதறன்னொடுமேகினார். (உ௬)

விடரகங்களும்வேய்செறிகானமும்
படருஞ்சின்னெறிபைப்பையநீங்கினார்
சுடருமேனிச்சுதீக்கணனென்னுமவ்
விடரிலானுறைசோலைசென்றெய்தினார் (உ௭)

அருக்கனன்னமுனிவனையவ்வழிச்
செருக்கில்சிந்தையர்சேவடிதாழ்தலும்
இருக்கவீண்டென்றினியனகூறினான்
மருக்கொள்சோலையின்மைந்தரும்வைகினார் (உ௮)

வைகும்வைகலின்மாதவன்மைந்தன்பால்
செய்கையாவையுஞ்செய்திவட்செல்வநீ
எய்தயான்செய்ததெத்தவமென்றனன்
ஐயனும்மவற்கன்பினன்கூறுவான். (உ௯)

சொன்னநான்முகன்றன்வழித்தோன்றினர்
முன்னையோருளுயர்தவமுற்றினார்
உன்னின்யாருளாருன்னருளெய்திய
என்னின்யாருளரிற்[illegible]
[illegible]றநதாவென்றான். (௩௰)

உவனை[illegible]
[illegible]ந்திர[illegible]ங்கியதோன்றலுக்கெதிர்
ஒருவமைநீங்கியநற்றவன்சொல்லுவான்
அவமிலாவிருந்தாகியென்னால்மை
தவமெலாங்கொள்கதக்கணையாவென்றான். (௩௧)

மறைவலானெதிர்வள்ளலுங்கூறுவான்
இறைவநின்னருளொத்தவத்திற்கெனி
தறைவதீண்டொன்றகத்தியற்காண்பதோர்
குறைகிடந்ததினியெனக்கூறினான். (௩௨)

நல்லதேகநினைந்தாயதுநானுமுன்
சொல்லுவான்றுணிகின்றதுதோன்றனீ
செல்லுகாண்டவற்சேருதிசேர்ந்தபின்
இல்லைநின்வயினெய்தவில்லாதவே. (௩௩)

அன்றியுநின்வரவினையாதரித்
தின்றுகாறுநின்றேமுறுமாலவற்
சென்றுசேருதிசேருதல்செவ்வியோய்
நன்றுதேவர்க்கும்யாவர்க்குநன்றெனா. (௩௪)

வழியுங்கூறிவரம்பகலாசிகள்
மொழியுமாதவன்மொய்ம்மலர்த்தாடொழாப்
பிழியுந்தேனிற்பிறங்கருவித்திரள்
பொழியுஞ்சோலைவிரைவினிற்போயினார். (௩௫)

வேறு,

ஆண்டகையரவ்வயினடைந்தமையறிந்தான்
ஈண்டுவகைவேலைதுணையேழுலகமெய்த
மாண்டவுரதன்சரண்வழங்கவெதிர்வந்தான்
நீண்டதமிழாலுலகைநேமியினளந்தான், (௩௬)

பண்டவுணர்மூழ்கினர்படார்களெனவானோர்
எண்டவவெமக்கருள்கெனக்குறையிரந்தார்
கண்டொருகைவாரினன்முகந்தகடலெல்லாம்
உண்டவர்கள்பின்னுமிழ்கவென்றலுமுமிழ்ந்தான். (௩௭)

தூயகடனீரடிசிலுண்டதுதுரந்தான்
ஆயவதலாலமருமெய்யுடையவனான்.
மாயவினைவாளவுணன்மாயவவன்வன்மைக்
காயமினிதுண்டுலகினாரிடர்களைந்தான். (௩௮)

யோகமுறு பேருயிர்கடாமுலைவுறாமல்
ஏகுநெறியாதெனமிதித்தடியினேறி
மேகநெடுமாலைதவழ்விந்தையெனும்விண்டோய்
நாகமதுநாகமுறநாகமெனநின்றான். (௩௯)

மூசரவுசூடுமுதலோனுரையின்மூவா
மாசிறவவேகெனவடாதுதிசைமேனாள்
நீசமுறவானினெடுமாமலயநேரா
ஈசனிகராயுலகுசீர்பெறவிருந்தான். (௪௰)

உழக்குமறைநாவினுமுயர்ந்துலகமோதும்
வழக்கினுமதிக்கவினினும்மரபினாடி
நிழற்பொலிகணிச்சிமணிநெற்றியுமிழ்செங்கட்
டழற்புரைசுடர்க்கடவுடந்ததமிழ்தந்தான். (௪௧)

விண்ணினிலத்தினில்விகற்பவுலகிற்பேர்
எண்ணினிலிருக்கினிலிருக்குமெனயாரும்
உண்ணினைகருத்தினையுறப்பெறுவெனாலென்
கண்ணினிலெனக்கொடுகளிப்புறுமனத்தான். (௪௨)

இரைத்தமறைநான்கினொடியைந்தபிறயாவும்
நிரைத்தநெடுஞானநிமிர்கல்விநெடுநாளிட்
டரைத்துமயனாலுமறியாதபொருணேர்நின்
றுரைக்குதவுமாலெனுமுணர்ச்சியினுவப்பான். (௪௩)

உய்ந்தனரிமைப்பிலருயிர்த்தனர்தவத்தோர்
அந்தணரறத்தினெறிநின்றனர்களானா
வெந்திறலரக்கர்விட வேர்முதலறுப்பான்
வந்தனன்மருத்துவனெனத்தனிவலிப்பான். (௪௪)

ஏனையுயிராமுதலயாவுமிடைவேவித்
தூனுகரரக்கருருமைச்சுடுசினத்தின்
ஆனவனலைக்கடிதவித்துலகளிப்பான்
வானமழைவந்ததெனமுந்துறுமனத்தான். (௪௫)

கண்டனனிராமனைவரக்கருணைகூரப்
புண்டரிகவாணயனநீர்பொழியநின்றான்
எண்டிசையுமேழுலகுமெவ்வுயிருமுய்யக்
குண்டிகையினிற்பொருவில்காவிரிகொணர்ந்தான். (௪௬)

நின்றவனைவந்தநெடியோனடிபணிந்தான்
அன்றவனுமன்பொடுதழீஇயழுதகண்ணான்
நன்றுவரவென்றுபலநல்லுரைபகர்ந்தான்
என்றுமுளதென்றமிழியம்பியிசைகொண்டான். (௪௭)

வேதியர்கள்வேதமொழிவேறுபலகூறிக்
காதன்மிகநின்றெழில்கமண்டலுவினன்னீர்
மாதவர்கள்வீசிநெடுமாமலர்கடூவப்
போதுமணநாறுகுளிர்சோலைகொடுபுக்கான். (௪௮)

பொருந்தவமலன்பொழிலகத்தினிதுபுக்கான்
விருந்தவனமைத்தபின்விரும்பினன்விரும்பி
இருந்தவமிழைத்தவெனதில்லிடையின்வந்தென்
அருந்தவமுடித்தனையருட்கரசவென்றான். (௪௯)

என்றமுனிவைத்தொழுதிராமனிமையோரும்
நின்றதவமுற்றுநெடியோரினெடியோரும்
உன்றனருள்பெற்றிலர்களுன்னருள்சுமந்தேன்
வென்றனனனைத்துலகுமேலினிதெனென்றான். (௫௰)

தண்டகவனத்துறைதியென்றுரைதரக்கொண்
டுண்டுவரவித்திசையெனப்பெரிதுவந்தேன்
எண்டகுகுணத்தினையெனக்கொடுயர்சென்னி
துண்டமதிவைத்தவனையொத்தமுனிசொல்லும். (௫௧)

ஈண்டுறைதியையவினியிவ்வயினிருந்தால்
வேண்டியனமாதவம்விரும்பினமுடிப்பாய்
தூண்டுசினவாணிருதர்தோன்றியுளரொன்றால்
மாண்டுகமலைந்தெமர்மனத்துயர்துடைப்பாய். (௫௨)

வாழுமறைவாழுமனுநீதியறம்வாழும்
தாழுமிமையோருயவர்தானவர்கடாழ்வார்
ஆழியுழவன்புதல்வவையமிலைமெய்யே
ஏழுலகும்வாழுமினியிங்குறைதியென்றான். (௫௩)

செருக்கடையரக்கர்புரிதீமைசிதைவெய்தித்
தருக்கழிதரக்கடிதுகொல்வதுசமைந்தேன்
வருக்கமறையோயவர்வருந்திசையின்முந்துற்
றிருக்கைநலநிற்கருளெனென்றனனிராமன். (௫௪)

விழுமியதுசொற்றனையிவ்வில்லிதிவண்மேனாள்
முழுமுதல்வன்வைத்துளதுமூவுலகும்யானும்
வழிபடவிருப்பதிதுதன்னைவடிவாளிக்
குழுவழுவில்புட்டிலொடுகோடியெனநல்கி. (௫௫)

இப்புவனமுற்றுமொருதட்டினிடையிட்டால்
ஒப்புவரவிற்றெனவுரைப்பரியவாளும்
வெப்புருவுபெற்றவரன்மேருவரைவில்லாய்
முப்புரமெரித்ததனிமொய்கணையுநல்கா. (௫௬)

ஓங்குமரனோங்கிமலையோங்கிமணலோங்கிப்
பூங்குலைகுலாவுகுளிர்சோலைபுடைவிம்மித்
தூங்குதிரையாறுதவழ்சூழலதொர்குன்றின்
பாங்குருவதாலுறையுள் பஞ்சவடிமஞ்ச. (௫௭)

கன்னியிளவாழைகனிவீவகதிர்வாலின்
செந்நெலுளதேனொழுகுபோதுமுளதெய்வப்
பொன்னியெனலாயபுனலாறுமுளபோதா
அன்னமுளபொன்னிவளொடன்பின்விளையாட. (௫௮)

ஏகியினியவ்வயினிருந்துறைமினென்றான்
மேகநிறவண்ணனும்வணங்கிவிடைகொண்டான்
பாகனையசொல்லியொடுதம்பிபரிவிற்பின்
போகமுனிசிந்தைதொடரக்கடிதுபோனான். (௫௯)

௩-ஆவது. அகத்தியப்படலம்முற்றிற்று. ஆக-திருவிருத்தம்-௧௭௪.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

## ௪-ஆவது-சடாயுகாண்படலம்.

நடந்தனர்காவதம்பலவுநன்னதி
கிடந்தனநின்றனகிரிகள்கேண்மையின்
தொடந்தனதுவன்றினசூழல்யாவையும்
கடந்தனர்கண்டனர்கழுகின்வேந்தையே. (௧)

உருக்கியசுவணமொத்துதயத்துச்சிசேர்
அருக்கனிவ்வகவிடத்தலங்குதிக்கெலாம்
தெரிப்புறுசெறிசுடர்ச்சிகையினாற்சிறை
விரித்திருந்தனனெனவிளங்குவான்றனை. (௨)

முந்தொருகருமலைமுகட்டுமுன்றிலின்
சந்திரனொளியொடுதழுவச்சாத்திய
அந்தமில்கனைகடலமரர்காட்டிய
மந்தரகிரியெனவயங்குவான்றனை. (௩)

மாணிறவிசும்பெழின்மறையத்தன்மணிக்
காணிறச்சேயொளிகதுவக்கண்ணகல்
நீணிறவரையினிற்பவளநீள்கொடி
போணிறம்பொலிந்தெனப்பொலிகின்றான்றனை. (௪)

தூய்மையனிருங்கலைதுணிந்தகேள்வியன்
வாய்மையன்மறுவிலன்மதியின்கூர்மையன்
ஆய்மையின்மந்திரத்தறிஞனுமெனச்
சேய்மையினோக்குறுசிறுகணான்றனை. (௫)

வீட்டிவாளவுணரைவிருந்துகூற்றினை
ஊட்டிவீழ்மிச்சிலானுண்டுநாடொறும்
தீட்டிமேலிந்திரன்சிறுகண்யானையின்
தோட்டிபோற்றேய்ந்தொளிர்துண்டத்தான்றனை. (௬)

கோளிருநான்கினோடொன்றுகூடின
ஆளுறுதிகிரிபோலாரத்தான்றனை
நீளுறுமேருவினெற்றிமுற்றிய
வாளிரவியிற்பொலிமௌலியான்றனை. (௭)

சொற்பங்கமுறநிமிரிஞ்சயின்சும்மையை
அற்பங்கமுறவருமருணன்செம்மலைச்
சிற்பங்கொள்பகலெனக்கடிதுசென்றுதீர்
கற்பங்களனைப்பலகண்டுளான்றனை. (௮)

ஓங்குயர்நெடுவரையொன்றினின்றது
தாங்கலதிருநிலந்தாழ்ந்துதாழ்வுற
வீங்கியவலியினிலிருந்தவீரனை
ஆங்கவணுகினரயிர்க்குஞ்சிந்தையார். (௯)

இறுதியைத்தன்வயினியற்றவெய்தினான்
அறிவிலியரக்கனாமல்லனாமெனின்
எறுழ்வலிக்கலுழனேயென்னவுன்னியச்
செறிகழல்வீரருஞ்செயிர்த்துநோக்கினார். (க0)

வனைகழல்வரிசிலைமதுகைமைந்தரை
அனையவன்றானுங்கண்டயிர்த்துநோக்கினான்
வினையறுநோன்பினரல்லர்வில்லினர்
புனைசடைமுடியினர்புலவரோவெனா. (கக)

புரந்தரன்முதலியபுலவர்யாரையும்
நிரந்தரநோக்குவெனேயியானுமவ்
வரந்தருமிறைவனுமழுவலாளனும்
கரந்திலவென்னையானென்றுங்காண்பெனால், (க௨)

காமனென்பவனையுங்கண்ணினோக்கினேன்
தாமரைச்செங்கணித்தடக்கைவீரர்கள்
பூமருபொலன்கழற்பொடியினோடுமொப்
பாமெனவறிகிலனார்கொலாமிவர். (க௩)

உலகொருமூன்றுந்தம்முடைமையாக்குறும்
அலகறுமிலக்கணமமைந்தமெய்யினர்
மலர்மகட்குவமையாளோடும்வந்தவிச்
சிலைவலிவீரரைத்தெரிகிலேனெனா. (க௪)

கருமலைசெம்மலையனையகாட்சியர்
திருமகிழ்மார்பினர்செங்கண்வீரர்தாம்
அருமைசெய்குணத்தினென்றுணைவனாழியான்
ஒருவனையிருவருமொத்துளாரரோ. (க௫)

எனப்பலநினைப்பினமனத்துளெண்ணுவான்
சினப்படைவீரர்மேற்செல்லுமன்பினான்
கனப்படைவரிசிலைக்காளைநீர்கள்யார்
மனப்படவெனக்குரைவழங்குவீரென்றான். (க௬)

வினவியகாலையின்மெய்ம்மையல்லது
புனைமலர்த்தாரவர்புகல்கிலாமையால்
கனைகடனெடுநிலங்காவலாழியான்
வனைகழற்றயரதன்மைந்தர்யாமென்றார். (க௭)

உரைத்தலும்பொங்கியவுவகைவேலையன்
தரைத்தலையிழிந்தவர்த்தழுவுங்காதலன்
விரைத்தடந்தாரினிர்வேந்தர்வேந்தன்றன்
வரைத்தடந்தோளிணைவலியவோவென்றான். (கஅ)

மறக்கமுற்றாதனவாய்மைகாத்தவன்
துறக்கமுற்றானெனமுன்னஞ்சொல்லலும்
இறக்கமுற்றானெனவேக்கமெய்தினான்
உறக்கமுற்றானெனவுணர்வுநீங்கினான். (க௯)

தழுவினரொடுத்தனர்தடக்கையான்முகம்
கழுவினரிருவருங்கண்ணினீரினால்
வழுவியவின்னுயிர்வந்தமன்னனும்
அழிவுறுநெஞ்சினனரற்றினானரோ. (உ0)

(வேறு.)

பரவலருங்கொடைக்குநின்றன் பணிக்குடைக்கும்பொறைக்குநெடும்பண்டோற்ற, கரவலருங்கற்பகமுமுடிபதியுங்கடவிடமுங் களித்து வாழப், புரவலர்தம்புரவலனேபொய்ப்பகையேமெய்க்கணியேபுகழின் வாழ்வே, இரவலருநல்லறமும்யானுமினியென்படநீத்தேகினையே. ()

அலங்காரமெனவுலகுக்கமுதளிக்குந்தனிக்குடையாயாழிசூழ்ந்த, நிலங்காவலதுகிடக்கநிலையாதநிலையுடையேனைநெஞ்சின், நலங்காண நடந்தனையோநாயகனேதீவினையேனன்பினின்றும், விலங்கானேனாக வினால்விலங்கினேனின்னுமுயிர்விட்டிலேனால். (உஉ)

தயிருடைக்குமத்தெனவுலகைக்கவிசம்ப்ரனைத்தடிந்தவந்நாள், அயிர்கிடக்குங்கடல்வலயத்தயலறியநீயுடனானையென்று, செயிர்கிடத்தல்செய்யாததிருமனத்தாய்செப்பினாய்திறம்பாநின்சொல், உயிர்கிடக்கவுடலைவிசும்பேற்றினானுணர்விறந்தகூற்றினானோ. (உ௩)

எழுவதோரிசைபெருகவிப்பொழுதே யொப்பரியவெரியுந்தீயின், விழுவதேநிற்கமடமெல்லியலார்தம்மைப்போனிலத்தின்மேல்வீழ்ந்தழுவதேயானென்னாவறிவுற்றானெனவெழுந்தாங்கவனைநோக்கி, முழுவதேழுலகுடையமைந்தன்மீர்கேண்மினெனமுறையிற்சொல்வான். ()

தக்கனனிவயிற்றுதித்தாரைம்பதின்மர்தடங்கொங்கைத்தையலாருள், தொக்கபதின் மூவரையக்காசிபனும் புணர்ந்தனனத்தோகைமாருள், மிக்கவதிதிப்பெயராண் முப்பத்துமுக்கோடிவிண்ணோரீந்தாள், மைக்கருங்கட்டிதியென்பாளதினிரட்டியசுரர்க்கமைவயிறுவாய்ந்தாள்.

தானவரேமுதலோரைத்தனுப்பயந்தாண்மதியென்பாண்மனிதர் தம்மூ, டானவருணங்களவயவத்தடைவேபயந்தனளாற் சுரபியென்பாள், தேனுவுடன்கந்தருவமற்றுள்ளபிறபயந்தாடெரிக்குங்காலை, மானமுடைக்குரோதவசை கழுதைமரையொட்டைபிறவயிறுவாய்த்தாள்.

மழைபுரைபூங்குழல்விநதைவானிடிமி னருணனுடன்வயிநதேயன், தழைபுரையுஞ்சிறைக்கூகைபாறுமுதற் பெரும்பறவைதம்மை யீன்றாள், இழைபுரையுந்தாம்பிரையூர்க்குருவிசிவல்காடைபலபிறவுமீன்றாள், கழையெனுமக்கொடிபயந்தாள் கொடியுடனேசெடிமுதலாக்கண்டவெல்லாம். (உஎ)

வெருட்டியெழுங் கணபணப்பைவியாளமெலாங் கத்துருவாமின் னுமீன்றாள், மருட்டிகழு மொருதலையபுயங்கமெலாஞ் சுதையென்னு மாதுதந்தாள், அருட்டையெனும் வல்லிதந்தா ளோங்கியுடும்பணில் கண்முதலாயவெல்லாம், தெருட்டிடுமாதிளையீந்தாள்செலசரமாகியபல வுந்தெரிக்குங்காலை. (உஅ)

அதிதிதிதிதனுவருட்டைசுதைகழையேசுரபியணி விநதையான்ற, மதியிளைகத்துருவுடனே குரோதவசைதாம்பிரையாமடநலார்கள், விதிமுறையே யிவையனைத்தும்பயந்தனர்கள்விநதைசுதனருணன்மென்றோட், புதுமதிசேர்நுதலரம்பை தனைப்புணரவுதித்தனம்யாம்புவனி மீதே. (உகூ)

அருணன்றன்புதல்வனியா னவன்படருமுலகெல்லாம்படர்வேனூழி, இருண்மொய்ம்பு கெடத்துரந்த தயரதற்கின் னுயிர்த்துணைவனிமையோரோடும், வருணங்கள் வகுத்திட்டகாலத்தே வந்துதித்தேன் கழுகின்மன்னன், தருணங்கொள் பேரொளியீர் சம்பாதிபின்னர்வருசடாயுவென்றான். (௩0)

ஆண்டவனீ துரைசெய்யவஞ்சலித்தமலர்க்கையா ரன்பினோடும், மூண்டபெருந்துன்பந்தான் முறைமுறையினிறைமலர்க்கண்மொய்த்த நீரார், பூண்டபெரும்புகழ்நிறுவித்தம் பொருட்டான்மே லுலகம்புக்க தாதை, மீண்டனன்வந்தானவனைக் கண்டனமே யொத்தனரவ்விலங்கற் றோளார். (௩க)

மருவினியகுணத்தவரையிருசிறகாலுறத்தழுவிழக்காணீரோ, உரியகடன்வினையேற்குமுதவுவீருடலிரண்டுக்குயிரொன்றானேன், பிரியவுந்தான்பிரியாதேயினிதிருக்குமுடற்பொறையாம்பிழைப[illegible], தெரியக ளினின்றே [illegible]. (௩உ)

(வேறு.)

என்றுரைத்தவெருவையரசனைத்
துன்றுதாரவர்நோக்கித்தொழுதுகண்
ஒன்றுமுத்தமுறையுறையாயுக
நின்றுமற்றின்னநீர்மைநிகழ்த்தினார். (௩௩)

உய்விடத்துதவற்குரியானுந்தன்
மெய்விடக்கருதாதுவிண்ணேறினான்
இவ்விடத்தினிலெம்பெருமாஅனைமைக்
கய்விடிற்பினையார்களைகண்ணுளார். (௩௪)

தாயினீங்கருந்தந்தையிற்றண்ணகர்
வாயினீங்கிவனம்புகுந்தெய்திய
நோயினீங்கினெனுன்னினெனெங்களை
நீயுநீங்குதியோநெறிநீங்கலாய். (௩௫)

என்றசொல்லரிரங்கழிநெஞ்சினர்
நின்றவீரனைநோக்கிநினைந்தவன்
அன்றகென்னினயோத்தியினையன்மீர்
சென்றபின்னவற்சேர்குவென்யானென்றான். (௩௬)

வேந்தன்விண்ணடைந்தானெனின்வீரர்நீர்
ஏந்துஞாலமினிதளியாதிவட்
போந்ததென்னைபுகுந்தவென்புந்திபோய்க்
காந்துகின்றதுகட்டுரையீதென்றான். (௩௭)

தேவர்தானவர்திண்டிறனாகர்வே
றேவராகவிடரிழைத்தாரெனின்
பூவராவுபொலன்கறைவேலினீர்
சாவராக்கித்தருவெனரசென்றான். (௩௮)

தாதைகூறலுந்தம்பியைநோக்கினான்
சீதைகேள்வனவனுந்தன்சிற்றவை
மாதரால்வந்தசெய்கைவரம்பிலா
ஓதவேலையொழிவின்றுணர்த்தினான். (௩௯)

உந்தையுண்மையனாக்கியுன்சிற்றவை
தந்தசொல்லைத்தலைக்கொண்டுதாரணி
வந்ததம்பிக்குதவியவள்ளலே
எந்தைவல்லதுயாவர்வல்லாரோ. (௪௰)

அல்லித்தாமரைக்கண்ணனையன்புறப்
புல்லிமோந்துபொழிந்தகண்ணீரினன்
வல்லைமைந்தவம்மன்னையுமென்னையும்
எல்லையில்புகழெய்துவித்தாயென்றான். (௪௧)

பின்னரும்மப்பெரியவன்பெய்வளை
அன்னமன்னவணங்கினைநோக்கினான்
மன்னர்மன்னவன்மைந்தவிவ்வாணுதல்
இன்னளென்னவியம்புதியாலென்றான். (௪௨)

அல்லிறுத்தனதாடகையாதியா
வில்லிறுத்ததிடையெனமேலைநாள்
புல்லிறுத்ததியாவும்புகன்றுதன்
சொல்லிறுத்தனன்றோன்றல்பின்றோன்றினான். (௪௩)

கேட்டுவந்தனன்கேழ்கிளர்மௌலியான்
தோட்டலங்கலினீர்துறந்தீர்வளம்
நாட்டினீவிருநன்னுதற்றனுமிக்
காட்டில்வைகுதிர்காக்குவெனியானென்றான். (௪௪)

இறைவவெண்ணியகத்தியனீந்துள
தறையுநன்மணியாற்றினகன்கரைத்
துறையுளுண்டொருசூழலச்சூழல்புக்
குறைதுமென்றனனுள்ளத்துறைகுவான், (௪௫)

பெரிதுநன்றப்பெருந்துறைவைகிநீர்
புரிதிர்மாதவம்போதுமின்யானது
தெரிவுறுத்துவெனென்றவர்திண்சிறை
விரியுநீழலிற்செல்லவின்சென்றனன். (௪௬)

ஆயசூழலறியவுணர்த்தியத்
தூயசிந்தையதோமில்குணத்தினான்
போயபின்னைப்பொருசிலைவீரரும்
ஏயசோலையினிதுசென்றெய்தினார். (௪௭)

வார்ப்பொற்கொங்கைமருகியைமக்களை
ஏற்பச்சிந்தனையிட்டுவரக்கர்தம்
சீர்ப்பச்சிக்கறத்தேறினன்சேக்கையில்
பார்ப்பைப்பார்க்கும்பறவையிற்பார்க்கின்றான். (௪௮)

௪-வது. சடாயுகாண்படலம்முற்றிற்று. ஆக-திருவிருத்தம்-உஉஉ

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

## ரு-வது-சூர்ப்பநகைப்படலம்

புவியினுக்கணியாயான்றபொருடந்துபுலத்திற்றாகி
அவியகத்துறைகடாங்கியைந்திணைநெறியளாவிச்
சவியுறத்தெளிந்துதண்ணென்றொழுக்கமுந்தழுவிச்சான்றோர்
கவியெனக்கிடந்தகோதாவிரியினைவீரர்கண்டார். (க)

வண்டுறைகமலச்செவ்விவாண்முகம்பொலியவாசம்
உண்டுறைகுவளையொண்கணொருங்குறநோக்கியூழின்
தெண்டிரைக்கரத்தின்வாரித்திருமலர்தூவிச்செல்வர்க்
கண்டடிபணிவதென்னப்பொலிந்ததுகடவுள்யாறு (உ)

எழுவுறுகாதலாலீங்கிளைத்திளைத்தேங்கியேங்கிப்
பழுவநாட்குவளைச்செவ்விக்கண்பனிபரந்துசோர
வழுவிலாவாய்மைமைந்தர்வனந்துறைவருந்தநோக்கி
அழுவதுமொத்ததவ்வலங்குநீராறுமன்னோ. (ஙு)

நாளங்கொணளினப்பள்ளிநயனங்களனையநேமி
வாளங்களுறைவகண்டு மங்கைதன்கொங்கைநோக்கும்
நீளங்கொள்சிலையோன்மற்றைநேரிழைநெடியநம்பி
தோளின்கண்மனம்வைத்தன்னசுடர்மணித்தடங்கள்கண்டாள். ()

ஓதிமமொதுங்கக்கண்ட வுத்தமனுழையளாகும்
சீதைதன்னடையைநோக்கிச்சிறியதோர்முறுவல்செய்தான்
மாதவடானுமாண்டு வந்துநீருண்டுமீளும்
போதகநடப்பநோக்கிப் புதியதோர்முறுவல்பூத்தாள். (ரு)

வில்லியடறக்கைவீரன் வீங்குநீராற்றின்பாங்கர்
வல்லிகளுடங்கக்கண்டான் மங்கைதன்மருங்குநோக்க
எல்லியங்குவளைக்கானத் திடையிடைமலர்ந்துநின்ற
அல்லியங்கமலங்கண்டா ளண்ணறன்வடிவுகண்டாள். (சு)

அனையதோர்தன்மையாலவ்வருவிநீராற்றின்பாங்கர்ப்
பனிதருபடிவப்பஞ்ச வடியெனும்பருவச்சோலைத்
தனியிடமதனைநண்ணித் தம்பியாற்சமைக்கப்பட்ட
இனியபூஞ்சாலையெய்தி யிருந்தனனிராமனிப்பால். (எ)

(வேறு.)

நீலமாமணிநிறநிருதர்வேந்தனை
மூலநாசம்பெற முடிக்குமொய்ம்பினள்
மேலைநாளுயிரொடும்பிறந்துதான்விளை
காலமோர்ந்துடனுறைகொடியநோயனாள். (அ)

செம்பராகம்படச்செறிந்தகூந்தலாள்
வெம்பராகுத்தனிவிளைந்தமெய்யினாள்
உம்பரானவர்க்குமொண்டவர்க்குமோதநீர்
இம்பரானவர்க்குமோரிறுதியீட்டுவாள். (௯)

வெய்யதோர்காரணமுண்மையேயினன்
வய்கலுந்தமியளவ்வனத்துவைகுவள்
நொய்தினிவ்வுலகெலாநுழையுநோன்மையள்
எய்தினளிராகவனிருந்தசூழல்வாய். (௰)

எண்டருமிமையவரரக்கரொங்கண்மேல்
விண்டனர்விலக்குதியென்னமேலைநாள்
அண்டசத்தருந்துயிறுறந்தவையனைக்
கண்டனடன்கிளைக்கிறுதிகாட்டுவாள். (௰௧)

சிந்தையினுறைபவற்குருவந்தீர்ந்ததால்
இந்திரற்காயிரநயனமீசற்கு
முந்தியமலர்க்கணோர்மூன்றுநான்குதோள்
உந்தியினுலகளித்தாற்கென்றுன்னுவாள். (௰௨)

கற்றையஞ்சடையவன்கண்ணிற்காய்தலால்
இற்றவனன்றுதொட்டின்றுகாறுந்தான்
நற்றவமியற்றியவ்வநங்கனல்லுருப்
பெற்றனனுமெனப்பெயர்த்துமெண்ணுவாள். (௰௩)

தரங்களினமைந்துதாழ்ந்தழகின்சார்பின
மரங்களுநிகர்க்கிலமலையும்புல்லிய
உரங்களினுயர்திசையோம்புமானையின்.
கரங்களேயிவன்மணிக்கரமென்றுன்னுவாள். (௰௪)

வின்மலைவல்லவன்வீரத்தோளொடும்
கன்மலைநிகர்க்கிலகனிந்தநீலத்தின்
நன்மலையல்லது நாமமேருவும்
பொன்மலையாதலாற்பொருவலாதென்பாள். (௰௫)

தாளுயர்தாமரைத்தளங்கடம்மொடும்
கேளுயர்நாட்டத்துக்கிரியின்றேற்றத்தான்
தோளொடுதோள்செலத்தொடர்ந்துநோக்குறின்
நீளியவல்லகணெடியமாரென்றாள். (௰௬)

அதிகநின்றொளிருமிவ்வழகனுண்முகம்
பொதியவிழ்தாமரைப்பூவையொப்பதோ
கதிர்மதியாமெனிற்கலைகடேயுமம்
மதியெனின்மதிக்குமோர்மறுவுண்டென்பாள். (௰௭)

எவன்செயவினியவிவ்வழகையெய்தினான்
அவன்செய்த்திருவுடம்பலசநோற்கின்றான்
நவன்செயத்தகையவிந்நளினநாட்டத்தான்
தவன்செயத்தவன்செய்ததவனெனென்கின்றாள். (௰௮)

உடுத்தநீராடையளுருவச்செவ்வியள்
பிடித்தருநடையினள்பெண்மைநன்றிவன்
அடித்தலந்தீண்டலினவனிக்கம்மயிர்
பொடித்தனநிகர்க்குமாற்புல்லென்றன்னுவாள். (௰௯)

வாணிலைமருங்குலான்வயங்குசோதியைக்
காணலனேகொலோகதிரினாயகன்
சேணெலாம்புல்லொளிசெலுத்திச்சிந்தையின்
நாணலன்மீமிசைநடக்கின்றானென்றாள். (௨௰)

குப்புறற்கரியமாக்குன்றைவென்றுயர்
இப்பெருந்தோளவனிதழுக்கேற்பதோர்
ஒப்பெனவுலகமேலுரைக்கினுள்ளமே
துப்பெனிற்றுப்புடையானைச்சொல்லுகேன். (௨௧)

நற்கலைமதியுறவயங்குநம்பிதன்
எற்கலைதிருவறையெய்தியேமுற
வற்கலைநோற்றனமர்சிலாமணிப்
பொற்கலைநோற்றிலபோலுமாலென்றாள். (௨௨)

தொடையமைநெடுமழைத்தொங்கலாமெனக்
கடைகுழன்றிடைநெறிகரியகுஞ்சியைச்
சடையெனப்புனைந்திலனென்னிற்றையலார்
உடையுயிர்யாவையுமுடையுமாலென்றாள். (௨௩)

நாறியநகையணிநல்லபுல்லினால்
ஏறியசெவ்வியினியற்றுமோவெனா
மாறகன்முழுமணிக்கரசின்மாட்சிதான்
வேறொருமணியினால்விளங்குமோவென்பாள். (௨௪)

கரந்திலனிலக்கணமெடுத்துக்காட்டிய
பரந்தருநான்முகன்பழிப்புற்றனரோ
இரந்திவனிணையடிப்பொடியுமேற்கிலர்ப்
புரந்தரனுலகெலாம்புரக்கின்றானென்றாள். (உ௫)

நீத்தமும்பரவையுங்குறுகநெஞ்சிடைக்
கோத்தவன்புணர்விடைக்குளிப்பமீக்கொள
ஏத்தவம்புரியவொன்றீகலான்பொருள்
காத்தவன்புகழெனத்தேயுங்கற்பினாள். (உ௬)

வான்றனில்வரைந்ததோர்மாதரோவியம்
போன்றனள்புலர்ந்தனள்புழுங்குநெஞ்சினள்
தோன்றலசுடர்மணித்தோளிணைட்டங்கள்
ஊன்றினள்பறிக்கவோராற்றம்பெற்றிலள். (உ௭)

நின்றனளிருந்தவனெடியமார்பகம்
ஒன்றுவெனன்றெனினமுதமுண்கினும்
பொன்றுவென்போக்கினியரிதுபோன்மெனாச்
சென்றெதிர்நிற்பதோர்செய்கைதேடுவார். (உ௮)

எயிறுடையரக்கியெவ்வுயிருமிட்டதோர்
வயிறுடையாளெனமறுக்குமாதலால்
குயிறொடர்குதலையோர்கொவ்வைச்செவ்விவாய்
மயிறொடரியலியாய்மருவனன்றெனா. (உ௯)

பங்கயச்செல்வியைமனத்துப்பாவியா
அங்கையினயமந்திரத்தையாய்ந்தனள்
திங்களிற்சிறந்தொளிர்முகத்தள்செவ்வியள்
பொங்கொளிவிசும்பினிற்பொலியத்தோன்றினாள். (௩0)

(வேறு.)

பஞ்சியொளிர்விஞ்சுகுளிர்பல்லவமனுங்கச்
செஞ்செவியகஞ்சநிமிர்சீறடியளாகி
அஞ்சொலிளமஞ்ஞையெனவன்னமெனமின்னும்
வஞ்சியெனநஞ்சமெனவஞ்சமகள்வந்தாள். (௩க)

பொன்னொழுகுபூவையுறுபூவையெழில்பூவை
பின்னெழில்கொள்வாளிணைபிறழ்ந்தொளிர்முகத்தாள்
கன்னியெழில்கொண்டதுகலைத்தடமணித்தேர்
மின்னிழிவதன்மையிதுவிண்ணிழிவதென்ன. (௩உ)

கானினுயர்கற்பகமுயிர்த்தகதிர்வல்லி
மேனிநனிபெற்றுவிளைகாமநெறிவாசத்
தேனின்மொழியுற்றினியசெவ்விநனிபெற்றோர்
மானின்விழிபெற்றுமயில்வந்ததெனவந்தாள். (௩௩)

நூபுரமுமேகலையுநூலுமறலோதிப்
பூமாலும்வண்டுமிவைபூசலிடுமோசை
தாமுறைசெய்கின்றதொருதையல்வருமென்னாக்
கோமகனுமத்திசைகுறித்தனன்விழித்தான். (௩௪)

விண்ணருளவந்ததொருமெல்லமுதமென்ன
வண்ணமுலைகொண்டிடைவணங்கவருபோழ்தத்
தெண்ணருளியேழைமைதுடைத்தெழுமெய்ஞ்ஞானக்
கண்ணருள்செய்கண்ணனிருகண்ணினெதிர்கண்டான். (௩௫)

பேருழையநாகருலகிற்பிறிதின்வானின்
பாருழையினில்லதொருமெல்லுருவுபாரா
ஆருழையடங்குமழகிற்கவதியுண்டோ
நேரிழையர்யாவரிவர்நோவெனநினைந்தான். (௩௬)

அவ்வயினவ்வாசைதனகத்துடையவன்றாள்
செவ்விமுகமுன்னியடிசெங்கையினிறைஞ்சா
வெவ்வியநெடுங்கணயில்வீசியயல்பாரா
நவ்வியினொதுங்கியிறைநாணியயனின்றாள். (௩௭)

தீதில்வரவாகதிருநின்வரவுசேயோய்
போதவுளதெம்முழையொர்புண்ணியமதன்றோ
ஏதுபதியேதுபெயர்யாவருறவென்றான்
வேதமுதல்பேதையவடன்னிலைவிரிப்பாள். (௩௮)

வேறு.

பூவிலோன்புதல்வன்மைந்தன்புதல்விமுப்புரங்கள்செற்ற
சேவலோன்றுணைவனானசெங்கையோன்றங்கைதிக்கின்
மாவெலாந்தொலைத்துவெள்ளிமலையெடுத்துலகமூன்றும்
காவலான்பின்னைகாமவல்லியாங்கன்னியென்றாள். (௩௯)

அவ்வுரைகேட்டவீரனையுறுமனத்தான்செய்கை
செவ்விதன்றறிதலாகுஞ்சிறிதினென்றுணரச்செங்கண்
வெவ்வுருவமைந்தோன்றங்கையென்றதுமெய்ம்மையாயின்
இவ்வுருவினையந்ததன்மையியம்புதியியல்பினென்றான். (௪0)

தூயவன்பணியாமுன்னஞ்சொல்லுவாள்சோர்விலாளம்
மாயவல்லரக்கரோடுவாழ்வினைமதிக்கலாதேன்
ஆய்வுறுமனத்தேனாகியறந்தலைநிற்பதானேன்
தீவினைதீயநோற்றுத்தேவரிற்பெற்றதென்றாள். (௪௧)

இமையவர்தலைவனேயுமெண்மையினேவல்செய்யும்
அமைதியினுலகமூன்றுமாள்பவன்றங்கையாயின்
சுமையுறுசெல்வத்தோடுந்தோன்றலைதுணையுமின்றித்
தமியைநீவருதற்கொத்ததன்மையென்னையலென்றான். (௪௨)

வீரனஃதுரைத்தலோடுமெய்யிலாள்விமலயானச்
சீரியரல்லார்மாட்டுச்சேர்கிலென்றேவர்பாலும்
ஆரியமுனிவர்பாலுமடைந்தனெனிறைவவீண்டோர்
காரியமுண்மைநின்னைக்காணியவந்தேனென்றாள். (௪௩)

அன்னவளுரைத்தலோடுமையனுமறிதற்கொவ்வா
நன்னுதன்மகளிர்சிந்தைநன்னெறிப்பாலவல்ல
பின்னிதுதெரியுமென்னாப்பெய்வளைத்தோளியென்பால்
என்னைகாரியத்தைசொல்லஃதியையுமேலிழைப்பலென்றான். (௪௪)

தாழுறுகாமத்தன்மைதாங்களேயுரைப்பதென்ப
தாமெனலாவதன்றாலருங்குலமகளிர்க்கம்மா
ஏழுறுமுயிர்க்குநோவேனென்செய்கேன்யாருமில்லேன்
காமனென்றொருவன்செய்யும்வன்மையைக்காத்தியென்றாள். (௪௫)

சேணுறநீண்டுமீண்டுசெவ்வரிசிதறிவெவ்வே
றேணுறமிளிர்ந்துநாணுவிதம்புரண்டிருண்டவாட்கட்
பூணியல்கொங்கையன்னாளம்மொழிபுகறலோடும்
நாணிலளையனெய்யணல்லளுமல்லளென்றான். (௪௬)

பேசலனிருந்தவள்ளலுள்ளத்தின்பெற்றியோராள்
பூசல்வண்டாற்றுங்கூந்தற்பொய்ம்மகள்புகன்றவென்கண்
ஆசைகண்டருளிற்றுண்டோவன்றெனலுண்டோவென்னும்
ஊசலாலுலாவுகின்றாண்மீட்டுமோருரையைச்சொல்வாள். (௪௭)

எழுதருமேனியாயீண்டெய்தியதறிந்திலாதேன்
முழுதுணர்முனிவரோவல்செம்தொழின்முறையின்முற்றிப்
பழுதறுபெண்மையோடுமிளமையும்பயனின்றேகப்
பொழுதொடுநாளும்வாளாகழித்தனபோலுமென்றாள். (௪௮)

நிந்தனையரக்கிநீதிநிலையிலாள்வினைமற்றெண்ணி
வந்தனளாகுமென்றேவள்ளலுமனத்துட்கொண்டான்
சுந்தரிமரபிற்கொத்ததொன்மையின்றாணிவிற்றன்றால்
அந்தணர்பாவைநீயாரசரில்வந்தேனென்றான். (௪௯)

ஆரணமறையோனெந்தையருந்ததிக்கற்பினெம்மோய்
தாரணிபுரந்தசாலகடங்கர்தமரபின்றையல்
போரணிபொலங்கொள்வேலாய்பொருந்தலையிகழ்தற்கொத்த
காரணமிதுவேயாயினென்னுயிர்காண்பெனென்றாள். (௫0)

அருத்தியளனையகூறவகத்துறுநகையின்வெள்ளைக்
குருத்தெழுகின்றநீலக்கொண்டலுண்டாட்டங்கொண்டான்
வருத்தநீங்கரக்கர்தம்பின்மாணுயர்மணத்தனங்கை
பொருத்தமன்றென்றுசாலப்புலமையோர்புகல்வரென்றான். (௫௧)

பராவருஞ்சிரத்தையாரும்பத்தியின்பயத்தையோரா
திராவணன்றங்கையென்றதேழைமைப்பாலதென்று
அராவணையமலனன்னையறிவித்தேன்முன்னந்தேவர்ப்
பாவினினீங்கினேனப்பழிபடுபிறவியென்றாள். (௫௨)

ஒருவனேயுலகமூன்றிற்கோங்கொருதலைவனூங்கில்
ஓருவனேகுபேரனின்னோடென்பிறந்தவர்களன்னோர்
தருவரோற்கொள்விவனன்றேற்றமியையேவறிடத்துச்சார
வெருவுவெனங்கையென்றான்வேதத்தினறிவைவென்றான். (௫௩)

காந்தர்ப்பமென்பதுண்டாற்காதலிற்கலந்தசிந்தை
மாந்தர்க்குமடந்தைமார்க்குமறைகளேவகுத்தகூட்டம்
ஏந்தற்பொற்றோளினாயீதியைந்தபினெனக்குழைத்த
வேந்தர்க்கும்விருப்பிற்றாகும்வேறுமோருரையுண்டென்றாள். (௫௪)

முனிவரோடுடையர்முன்னேமுதிர்பகைமுறைமைநோக்கார்
தனியைநீயாகலான்மற்றவரொடுந்தழுவற்கொத்த
வினையமீதல்லதில்லைவிண்ணுநின்னாட்சியாக்கி
இனியராயன்னர்வந்துன்னேவலினிற்பரென்றாள். (௫௫)

நிருதர்தமருளும்பெற்றேனின்னலம்பெற்றேனின்னோ
டொருவருஞ்செல்வத்தியாண்டுமுறையவும்பெற்றேனென்றே
திருநகர்தீர்ந்தபின்னர்ச்செய்தவம்பயந்ததென்று
வரிசிலைவடித்ததோளான்வாளெயிறிலங்கநக்கான். (௫௬)

விண்ணிடையிம்பர்நாகர் விரிஞ்சனேமுதலோர்க்கெல்லாம்
கண்ணிடையொளியின்பாங்கர்க் கடிகமழ்சாலைநின்றும்
பெண்ணிடையரசிதேவர்பெற்றநல்வரத்தாற்பின்னர்
மண்ணிடைமணியின்வந்தவஞ்சியேபோல்வாள்வந்தாள். (௫௭)

ஊன்சுடவுணங்குபேழ்வா யுணர்விலியுருவநாறும்
வான்சுடர்ச்சோதிவெள்ளம் வந்திடைவயங்கநோக்கி
மீன்சுடர்விண்ணுமண்ணும்விரிந்தபோரரக்கரொன்னும்
கான்சுடமுளைத்தகற்பின்கனலியைக்கண்ணிற்கண்டாள். (௫௮)

மருவொன்றுகூந்தலாளைவனத்திவன்கொண்டுவாரான்
உருவிங்கிதுடையராகமற்றையோர்யாருமில்லை
அரவிந்தமலருணீங்கியடியிணைபடியிற்றோயத்
திருவிங்குவருவாள்கொல்லோவென்றகந்திகைத்துநின்றாள். (௫௯)

பண்புறநெடிதுநோக்கிப்படைக்குநர்சிறுமையல்லால்
எண்பிறங்கழகிற்கெல்லையில்லையாமென்றுநின்றாள்
கண்பிறபொருளிற்செல்லாகருத்தெனினஃதேகண்ட
பெண்பிறந்தேனுக்கென்றாலென்படும்பிறருக்கென்றாள். (௬௰)

பொருதிறத்தானைநோக்கிப்பூவையைநோக்கிநின்றாள்
கருதமற்றினிவேறில்லைகமலத்துக்கடவுடானே
ஒருதிறத்துணரநோக்கியுருவினுக்குலகமூன்றின்
இருதிறத்தார்க்குஞ்செய்தவரம்பிவரிருவரென்றாள். (௬௧)

பொன்னைப்போற்பொருவின்மேனிப் பூவைப்பூவண்ணத்தானிம்
மின்னைப்போலிடையாளோடு மேவுமெய்யுடையனல்லன்
தன்னைப்போறகையோரில்லாத் தனிமைப்போலடியினாளும்
என்னைப்போலிடையேவந்தா ளிகழ்விப்பெனிவளையென்னா. (௬௨)

வருமிவண்மாயம்வல்லள் வஞ்சனையரக்கிநெஞ்சம்
தெரிவிலடேறுந்தன்மை சீரியோய்செயலிற்றன்றால்
உருவிதுமெய்யதன்றா லூனுகர்வாழ்க்கையாளை
வெருவினெனெய்திடாமல் விலக்குதிவீரவென்றாள். (௬௩)

ஒள்ளிதுனுணர்வுமின்னே யுன்னையாரொளிக்குமீட்டார்
தெள்ளியநலத்தினாலுன் சிந்தனைதெரிந்ததம்மா
கள்ளவல்லரக்கிபோலா மிவளைநீகாண்டியென்னா
வெள்ளியமுறுவன்முத்தம் வெளிப்படவீரனக்கான். (௬௪)

ஆயிடையமுதின்வந்த வருந்ததிக்கற்பினஞ்சொல்
வேயிடைதோளினாளும் வீரனைச்சேரும்வேலை
நீயிடைவந்ததென்னை நிருதர்தம்பாவையென்னாக்
காயெரியனையகள்ள வுள்ளத்தாள்கதித்தலோடும். (௬௫)

அஞ்சினளஞ்சியன்னமின்னிடையலசவோடிப்
பஞ்சின்மெல்லடிகணோவப்பதைத்தனள்பருவக்கால
மஞ்சிடைவயங்கித்தோன்றும்பவளத்தின்வல்லியென்னக்
குஞ்சரமனையவீரன்குவவுத்தோடழுவிக்கொண்டாள். (௬௬)

வளையெயிற்றவர்களோடுவரும்விளையாட்டென்றாலும்
விளைவனதீமையேயாமென்பதையுணர்ந்துவீரன்
உளைவனவியற்றலொல்லையுன்னிலையுணருமாயின்
இளையவன்முனியுநங்கையேகுதிவிரைவினென்றான். (௬௭)

பொற்புடையரக்கிபூவிற்புனலினிற்பொருப்பில்வாழும்
அற்புடையுள்ளத்தாருமநங்கனுமமரர்மற்றும்
எற்பெறத்தவஞ்செய்கின்றாரென்னைநீயிகழ்வதென்னே
நற்பொறைநெஞ்சினில்லாக்கள்வியைநச்சியென்றாள். (௬௮)

தன்னொடுந்தொடர்விலாதேமென்னவுந்தவிராடாணிக்
கன்னெடுமனத்திசொல்லுங்கள்ளவாசகங்களென்னா
மின்னொடுதொடர்ந்துசெல்லுமேகம்போன்மிதிலைவேந்தன்
பொன்னொடும்புனிதன்போயப்பூம்பொழிற்சாலைபுக்கான். (௬௯

புக்கபின்போயதென்னுமுணர்வினள்பொறையுணீங்கி
உக்கதாமுயிரனொன்றாமுயிர்த்திலளொடுங்கிநின்றாள்
தக்கிலண்மனத்துள்யாதுந்தழுவிலள்சலமு[illegible]கொண்டாள்
மைக்கருங்குழலிஞண்மாட்டன்பினில்வ[illegible]யனென்பாள். (௭௰)

நின்றிலளவனைச்சேருநெறியினைநினைந்துபோனாள்
இன்றிவனாகம்புல்லேனெனினுயிரிழப்பனென்னாப்
பொன்றிணிசரளச்சோலைப்பளிக்கறைப்பொதும்பர்புக்காள்
சென்றதுபரிதிமேல்பாற்செக்கர்வந்திறுத்ததன்றே. (௭௧)

(வேறு.)

அழிந்தசிந்தையளாயயர்வாள்வயின்
மொழிந்தகாமக்கடுங்கனன்மூண்டதால்
வழிந்தநாகத்தின்வன்றோளைவாளெயிற்
றிழிந்தகார்விடமேறுவதென்னவே. (௭௨)

தாடகைக்கொடியாடடமார்பிடை
ஆடவர்க்கரசன்னயிலம்புபோல்
பாடவத்தொழின்மன்மதன்பாய்கணை
ஓடவுட்கியுயிருளைந்தாளரோ. (௭௩)

கலையுவாமதியேகறியாகவன்
சிலையின்மாரனைத்தின்னுநினைப்பினாள்
மலையமாருதமாநெடுங்காலவேல்
உலையமார்பிடையூன்றிடவேயுமால். (௭௪)

அலைக்குமாழியடங்கிடவங்கையால்
மலைக்குலங்களிற்றூர்க்குமனத்தினாள்
நிலைக்கும்வானினெடுமதிநீணிலா
மலைக்கநீங்குமிடுக்கினண்மாந்துவரிள். (௭௫)

பூவெலாம்பொடியாகவிப்பூமியுள்
காவெலாமொடிப்பென்னெனக்காந்துவாள்
சேவலோடுறைசெந்தலையன்றிலின்
நாவினால்வலியெஞ்சநடுங்குவாள். (௭௬)

அணவிறிங்களைநுங்கவராவினைக்
கொணர்வெனோடியெனக்கொதித்துன்னுவாள்
பணையின்மென்முலைமேற்பனிமாருதம்
புணரவாருயிர்வெந்துபுழுங்குமால். (௭௭)

கைகளாற்றன்கதிரிளங்கொங்கைமேல்
ஐயதண்பனியள்ளினளப்பினள்
மொய்கொடியிடைவெந்துமுருங்கிய
வெய்யபாறையில்வெண்ணெய்நிகர்க்குமால். (௭௮)

அளிக்குமெய்யுயிர்காண்றழலஞ்சினள்
குளிக்குநீருங்கொதித்தெழக்கூசுமால்
விளிக்கும்வேலையைவெங்கணநங்கனை
ஒளிக்கலாமிடம்யாதெனவுன்னுமால். (௭௯)

வந்துகார்மழைதோன்றினுமாமணிக்
கந்துகாணினுங்கைத்தலங்கூப்புமால்
இந்துகாந்தத்தினீரநெடுங்கலும்
வெந்துகாந்தவெதுப்புறுமேனியாள். (௮௰)

வாமமாதியும்பனிவாடையும்
காமனுந்தனைக்கண்டிணராவகை
நாமவாளெயிற்றோர்கதநாகம்வாழ்
சேமமால்வளையின்முழைசேருமால். (அக)

அன்னகாலையழன்மிகுதென்றலும்
முன்னின்மும்மடியாய்முலைவெந்துக
இன்னவாசெய்வதென்றறியாதிளம்
பொன்னின்வார்தளிரிற்புரண்டாளரோ. (அஉ)

வீரன்மேனிவெளிப்படவெய்யவள்
கார்கொண்மேனியைக்கண்டனளாமெனச்
சோரும்வெள்குந்துணுக்கெனுமவ்வுருப்
பேருங்கால்வெம்பிணியிடைப்பேருமால். (அங)

ஆகக்கொங்கைபிணையனென்றஞ்சன
மேகத்தைத்தழுவும்மவைவெந்தன
போகக்கண்டுபுலம்புமப்புன்மையாள்
மோகத்துக்கோர்முடிவுமுண்டாங்கொலோ. (அச)

ஊழிவெங்கனலுற்றனளொத்துமவ்
வேழையாவியிறந்திலளென்பரால்
ஆழியானையடைந்தனள்பின்னையும்
வாழலாமெனுமாசைமருந்தினே. (அரு)

வஞ்சனைக்கொடுமாயைவளர்க்குமென்
னெஞ்சுபுக்கெனதாவத்தைதீக்கெனும்
அஞ்சனக்கிரியேயருளாயெனும்
நஞ்சநக்கினள்போலநடுங்குவாள். (அசா)

காவியோகயலோவெனுங்கண்ணிணைத்
தேவியோதிருமங்கையிற்செவ்வியாள்
பாவியேனையும்பார்க்குங்கொலோவெனும்
ஆவியோயினுமாசையினோய்விலாள். (அஎ)

ஆன்றகாதலஃதுறவெய்துழி
மூன்றுலோகமுமூடுமரக்கராம்
ஏன்றகாரிருணீக்கவிராகவன்
றோன்றினானெனவெய்யவன்றோன்றினான். (அஅ)

(வேறு.)

விடியல்காண்டலினீண்டுதனுயிர்கண்டவெய்யாள்
படிவிலாண்மருங்குள்ளளவெனையவன்பாரான்
கடிதினோடினனெடுத்தொல்லைக்கரந்தவள்காதல்
வடிவினானுடன்வாழ்வதேவாழ்வெனமதியா. (௮௯)

வந்துநோக்கினள்வள்ளல்போயொருமணித்தடத்தாள்
சந்திநோக்கினனிருந்ததுகண்டனடம்பி
இந்துநோக்கியநுதலியைக்காத்தயலிருண்ட
கந்தநோக்கியசோலையிலிருந்ததுகாணாள். (௯௰)

தனியிருந்தனள்சமைந்ததென்சிந்தனைதாழ்வுற்
றினியிருந்தெனக்கெண்ணுவதில்லெனவெண்ணாத்
துணியிருந்தவன்மனத்தினடோகையைத்தொடர்ந்தாள்
கனியிரும்பொழில்காத்தயலிருந்தவன்கண்டான். (௯௧)

நில்லடீயெனக்கடுகினன்பெண்ணெனநினைந்தான்
வில்லெடாதவள்வயங்கெரியாமெனவிரிந்த
சில்லலோதியைச்செங்கையிற்றிருகுறப்பற்றி
ஒல்வயிற்றுதைத்தொளிகிளர்சுற்றுவாளுருவி. (௯௨)

ஊக்கித்தாங்கிவிண்படர்வெம்மன்றுருத்தெழுவாளை
நூக்கிநொய்தினின்வெய்திழையேலெனநுவலா
மூக்குங்காதும்வெம்முரண்முலைக்கண்களுமுறையால்
போக்கிப்போக்கியசினத்தொடும்புரிகுழல்விட்டான். (௯௩)

அக்கணத்தவள்வாய்திறந்தரற்றியவமலை
திக்கனைத்தினுஞ்சென்றதுதேவர்தஞ்செவியும்
புக்கதுற்றதுபுதல்வதென்மூக்கெனும்புழையூ
டுக்கசோரியினீரமுற்றுருகியதுலபம். (௯௪)

கொலைதுமித்துயர்கொடுங்கதிர்வாளினக்கொடியாள்
முலைதுமித்துயர்மூக்கினைநீக்கியமூத்தம்
மலைதுமித்தெனவிராவணன்மணியுடைமகுடத்
தலைதுமித்தற்குநாட்கொண்டதொத்ததோர்தன்மை. (௯௫)

அதிரமாகிலத்தடிபதைத்தாற்றியவரக்கி
கதிர்கொள்காலவேற்கான்முதனிருதர்வெங்கதப்போர்
எதிரிலாதவரிறுதியினிமித்தமாவெழுந்தாண்
டுதிரமாரிபெய்கார்நிறமேகமொத்துயர்ந்தாழ். (௯௬)

உயரும்விண்ணிடைமண்ணிடைவிழுங்கிடந்துழைக்கும்
அயருங்கைகுலைத்தலமருமாருயிர்சோரும்
பெயரும்பெண்பிறந்தேன்பட்டபிழையெனப்பிதற்றும்
துயருமஞ்சிமுன்றொடர்ந்திலாத்தொல்குடிப்பிறந்தாள். (கூஎ)

ஒற்றுமூக்கினையுலைவுறுதீயெனவுயிர்க்கும்
எற்றுங்கையினைநிலத்தினிலிணைத்தடங்கொங்கை
பற்றும்பார்க்குமெய்வெயர்க்குந்தன்பருவலிக்காலால்
சுற்றுமோடும்போய்ச்சோரிநீர்சொரிதரச்சோரும். (கூஅ)

ஊற்றுமிக்கநீருருவியினொழுகியகுருதி
சேற்றுவெள்ளத்துட்டிரிபவடேவருமிரியக்
கூற்றுமுட்குந்தன்குலத்தினோர்பெயரெலாங்கூறி
ஆற்றுகிற்கிலள்பற்பலபன்னிநின்றழைத்தாள். (கூகூ)

(வேறு.)

நிலைஎடுத்துநெடுநிலத்துநீயிருக்கத்தாபதர்கள்
சிலையெடுத்தித்திரியுமிதுசிறிதன்றோதேவரெதிர்
தலையெடுத்துவிழியாமைசமைப்பதேதழலெடுத்தான்
மலையெடுத்ததனிமலையேயிவைகாணவாராயோ. (க00)

புலிதானேபுறத்தாகக்குட்டிகோட்படாதென்ன
ஒலியாழியுலகுரைக்குமுரைபொய்யோவூழியினும்
சலியாதமூவருக்கும்வானவர்க்குந்தானவர்க்கும்
வலியானேயான்பட்டவலிகாணவாராயோ. (க0க)

ஆர்த்தானைக்கரசுந்தியமரர்கணத்தொடுமடர்ந்த
போர்த்தானையிந்திரனைப்பொருதவனைப்போர்தொலைத்து
வேர்த்தானையுயிர்கொண்டுமீண்டானைவெரிநகண்டு
பார்த்தானேயான்பட்டபழிவந்துபாராயோ. (க0உ)

காற்றினையும்புனலினையுங்கனலினையுங்கடுங்காலக்
கூற்றினையும்விண்ணினையுங்கோளினையும்பணிகொண்டாற்
காற்றினைநீயீண்டிருவர்மானுடவர்க்காற்றாது
மாற்றினையோவுன்வலத்தைச்சிவன்றடக்கைவாள்கொண்டாய். (க0ங)

உருப்படிவமன்மதனையொத்துளரேயாயினுமுன்
செருப்படியிற்பொடியொவ்வாமானுடரைச்சீறுதியோ
நெருப்படியிற்பொடிசிதறநிறைந்தமதத்திசையானை
மருப்பொடியப்பொருப்பிடியத்தோணிமிர்த்தவலியோனே. (க0ச)

தேனுடையநறுந்தெரியற்றேவரையுந்தெறுமாற்றல்
தானுடையவிராவணற்குந்தம்பியர்க்குந்தவிர்ந்ததோ
ஊனுடையவுடம்பினராயெங்குலத்தோர்க்குணவாய்
மானுடவர்மருங்கேபுக்கொடுங்கினதோவலியம்மா. (க௱௫)

மரனேயுநெடுங்கானின்மறைந்துறையுந்தாபதர்கள்
உரனேயோவடலரக்கரோய்வேயோவுற்றெதிர்ந்தார்
அரனேயோவயனேயோவரியேயோவெனுமாற்றற்
கரனேயோயான்பட்டகையறவுகாணாயோ. (க௱௬)

இந்திரனுமரனயனுமிமையவரும்பணிகேட்பச்
சுந்தரியல்லாண்டிசைப்பவுலகேழுந்தொழுதேத்தச்
சந்திரன்போறனிக்குடைக்கீழ்நீயிருக்குஞ்சபைநடுவே
வந்தடியேனுற்றதுமுகங்காட்டவல்லேனோ. (க௱௭)

உரனெரிந்துவிழவென்னையுதைத்துருட்டிமூக்கரிந்த
நரனிருந்துதோள்பார்க்கநான்கிடந்துபுலம்புவதோ
கரனிருந்தவனமன்றோவிவைபடவுங்கடவேனோ
அரனிருந்தமலையெடுத்தவண்ணாவோவண்ணாவோ. (க௱௮)

நசையாலேமூக்கிழந்துநாணமிலாநான்பட்ட
வசையாலேநினதுபுகழ்மாசுண்டதாகாதோ
திசையானைவிசைகலங்கச்செருச்செய்துமருப்பொசித்த
இசையாலேநிறைந்தபுயத்திராவணாவோவிராவணாவோ. (க௱௯)

கானமதினிடையிருவர்காதொடுமூக்குடனரிய
மானமதாற்பாவியேனிவண்மடியக்கடவேனோ
தானவரைக்கருவறுத்துச்சதமகனைத்தளையிலிட்டு
வானவரைப்பணிகொண்டமருகாவோமருகாவோ. (க௱௰)

ஒருகாலத்துலகேழுமுருத்தெரியத்தனுவொன்றால்
திருகாதசினந்திருகித்திசையானைத்துஞ்செலநூறி
இருகாலிற்புரந்தரனையிருஞ்சிறையினிடுவித்த
மருகாவோமானிடவர்வலிகாணவாராயோ. (௱௰௧)

கல்வீரும்படைத்தடக்கையடற்கரதூடணர்முதலா
அல்வீருஞ்சுடர்மணிப்பூணரக்கர்குலத்தவதரித்தீர்
கொல்வீரும்படைக்கும்பகருணனைப்போற்குவலயத்துள்
எல்லீருமுறங்குதிரோயானழைத்தல்கேளீரோ. (௱௰௨)

என்றின்னபலபன்னியிகலரக்கியழுதிரங்கிப்
பொன்றுன்னும்படியகத்துப்புரள்கின்றபொழுதகத்து
நின்றந்தநதியகத்துநிறைதவத்தின்குறைமுடித்து
வன்றிண்கைச்சிலைநெடுந்தோண்மரகதத்தின்மலைவந்தான். (௱௰௩)

வந்தானையிடைநோக்கிவயிறலைத்துமழைக்கண்ணீர்
செந்தாரைக்குருதியொடுசெழுநிலத்தைச்சேறாக்கி
அந்தோவுன்றிருமேனிக்கன்பிழைத்தவன்பிழையால்
எந்தாயான்பட்டபடியிதுகாணென்றெதிர்விழுந்தாள். (௱௰௪)

விரிந்தாயகூந்தலாள்வெய்யவினையாதானும்
புரிந்தாளென்பதுதனதுபொருவரியதிருமனத்தால்
தெரிந்தானின்றிலையானேயிவளைநெடுஞ்செவியொடுமூக்
கரிந்தானென்பதுமுணர்ந்தானவளைநீயாரென்றான். (௱௰௫)

அவ்வுரைகேட்டடலரக்கியறியாயோநீயென்னைத்
தெவ்வுரையென்றோருலகுமில்லாதசீற்றத்தான்
வெவ்விலைவேலிராவணனும்விண்ணுலகமுதலாக
எவ்வுலகுமுடையானுக்குடன்பிறந்தேன்யானென்றாள். (௱௰௬)

தாமிருந்தகைபரக்கர்புகலொழியத்தவமியற்ற
யாமிருந்தநெடுஞ்சூழற்கென்செயவந்தீரெனலும்
வேமிருந்தினெனக்கனலும்வெங்காமவெம்பிணிக்கு
மாமருந்தேநெருனலினும்வந்திலேனோயானென்றாள். (௱௰௭)

செங்சயல்போல்கருநெடுங்கட்டேமருதாமரையுறையும்
நங்கையிவளெனநெருநனடந்தவரோநாமென்னக்
கொங்கைகளுங்குழைக்காதுங்கொடிமூக்குங்குறைத்தழித்தால்
அங்கனாசேயொருவர்க்கழியாதோவழகென்றாள். (௱௰௮)

மூரன்முறுவலனிளையமொய்ம்பினோன்முகநோக்கி
வீரவி[illegible]ாந்தனையிவடன்விடுகாதுங்கொடிமூக்கும்
ஈரநினைந்திவளிழைத்தபிழையென்னென்றிறைவினவச்
சூரநெடுந்தகையவனையடிவணங்கிச்சொல்லுவான். (௱௰௯)

கேட்டந்தான்வாளெயிற்றிற்றின்னவோதீவினையோர்
கூட்டந்தான்புறத்துளதோகுறித்தபொருளறிந்திலமால்
நாட்டந்தானெரியுமிழநல்லாண்மேற்பொல்லாதாள்
ஓட்டந்தாளரிதினிவளுடன்றெழுந்தாளெனவுரைத்தான். (௱௨௰)

ஏற்றவளைவரிசிலையோனியம்பாமுனிகலரக்கி
சேற்றவளைதன்கணவனருகிருப்பச்சினந்திருகிச்
சூற்றவளைநீருழக்குந்துறைகெழுநீர்வளநாடா
மாற்றவளைக்கண்டக்காலழலாதோமனமென்றாள். (௱உக)

பேடிப்போர்வல்லரக்கர்பெருங்குலத்தையொருங்கவிப்பான்
தேடிப்போந்தனமின்றுதீமாற்றஞ்சிலவிளம்பி
வீடிப்போகாதேயிம்மெய்வனத்தைவிட்டகல
ஓடிப்போவென்றுரைத்தவுரைகடந்தாற்கவளுரைப்பாள். (௱உஉ)

நரைதிரையென்றில்லாதநான்முகனேமுதலமரர்
கரையிறந்தோரிராவணற்குக்கரனிறுக்குங்குடியென்றால்
விரையுமிதுநன்றன்றுவேறாகயானுரைக்கும்
உரையுளதுநுமக்குறுதியுணர்வுளதேலென்றுரைப்பாள். (௱உ௩)

ஆக்கரியமூக்குங்கையரியுண்டாளென்றுரை
நாக்கரியுந்தயமுகனார்நாகரிகரல்லாமை
மூக்கரிந்துநுங்குலத்தைமுதலரிந்தீரினியுமக்குப்
போக்கரிதிவ்வழகையெல்லாம்புல்லிடையேயுகுத்தீரோ. (௱உ௪)

வான்காப்போர்மண்காப்போர்மாநாகர்வாழுலகந்
தான்காப்போரினித்தங்கடலைகாத்துநின்றுங்கள்
ஊன்காக்கவுரியார்யாரென்னையுயிர்நீர்காக்கின்
யான்காப்பெனல்லாலவ்விராவணனருளானென்றாள். (௱உ௫)

காவற்றிண்கற்பமைந்தார்தம்பெருமைதாங்கழறார்
ஆவற்பேரன்பினாலறைகின்றேனுமன்றே
தேவர்க்கும்வலியான்றன்றிருத்தங்கையாளிவளீண்
டேவர்க்கும்வலியாளென்றிளையானுக்கியம்பீரோ. (௱உ௬)

மாப்போரிற்புறங்காப்பென்வான்சுமந்துசெலவல்லேன்
தூப்போலக்கனிபலவுஞ்சுவையுடையதரவல்லேன்
காப்போரைக்கைத்தென்னீர்கருதியதுதருவேனிப்
பூப்போலுமெல்லியலாற்பொருளென்னோபுகலீரால். (௱உ௭)

குலத்தாலுநலத்தாலுங்குறித்தனவேகொணர்தக்க
வலத்தாலுமதியாலும்வடிவாலுமடத்தாலும்
நிலத்தாரும்விசும்பாருநேரிழையாரென்னைப்போல்
சொலத்தானிங்குரியாரைச்சொல்லீரோவல்லீரேல். (௱உ௮)

போக்கினீரொன்றுசிபோய்த்தென்னீர்பொறுக்குவிரோல்
ஆங்குவெனார்நொடிவளையினழகமைவெனருள்கூரும்
பாக்கியமுண்டெனினதனாற்பெண்மைக்கோர்பழுதுண்டோ
மேக்குயருநெடுமூக்குமடந்தையர்க்குமிகையன்றோ. (௧௨௯)

விண்டாரோயல்லாரோவேண்டாதார்நான்வேண்டின்
உண்டாயகாதலினென்னுயிரென்பதுவதன்றோ
கண்டாரோகாதலிக்குங்கட்டழகும்விடமன்றோ
கொண்டாரோகொண்டாடுமுருப்பெற்றாற்கொள்ளீரோ. (௧௩0)

சிவனுமலர்த்திசைமுகனுந்திருமாலுந்தெறுகுலிசத்
தவனுமடுத்தொன்றாகிநின்றன்னவுருவோனே
புவனமனைத்தையுமொருதன்பூங்கணையாலுயிர்வாங்கும்
அவனுமுனக்கிளையானோயிவனேபோலருளிலனால். (௧௩௧)

(வேறு.)

பொன்னுருவப் பொருகழலீர் புழைகாணமூக்கரிவானெப்பொருள்வேறு
ண்டோ, இன்னுருவமிதுகொண்டிங்கிருந்தொழியுநம்மருங்கேயேகாள
ப்பால்,பின்னிவளையலொருவர்பாராவொன்றேயரிந்தீர்பிழைசெய்தீரோ
அன்னதனையறிந்தன்றோவன்பிராட்டிபூண்டதுநானறிவிலேனே. ()

வெப்பழியாநெடுவெகுளிவேலரக்கர்தறிந்துவெகுண்டுநோக்கின்
அப்பழியாலுலகனைத்துநும்பொருட்டாலழிந்தனவாமறத்தைநோக்கி,
ஒப்பழியச்செய்கிலாருயர்குலத்துத்தோன்றினோருணர்ந்துநோக்கி,இ
ப்பழியைத்துடைத்துதவியினிதிருத்திரென்னொடுமென்றிறைஞ்சிநின்
றாள். (௧௩௩)

நாடறியாத்துயரிழைத்தநவையரக்கிநின்னன்னைதன்னைநல்கும்,தா
டகையையுயிர்கவர்ந்தசரமிருந்ததன்றியுநான்றவமேற்கொண்ட, தோ
டகையதுறுமலர்த்தாரிகலரக்கர்குலந்தொலைப்பான்றோன்றிநின்றேன்
பேடகலப்புல்லொழுக்கைவல்லரக்கியென்றிறைவன்புகலும்பின்னும்

தளையளித்ததனிநேமித்தயரதன்றன் புதல்வரியாந்தாய்சொற்றா
ங்கி, விளையளித்தகான்புகுந்தேம்வேதியருமாதவரும்வேண்டநீண்டு,க
ளையளித்தற்கரியபடைக்கடலரக்கர்குலந்தொலைத்துக்கண்டாய்பண்டை
வளையளித்தகுலமாடநகர்புகுவேமிவைதெரியமனக்கொளென்றான்.()

நெறித்தாளைசெல்லாதநிருதரெதிர்நில்லாதேநெடியதேவர், மறி
ந்தாரீண்டிவரிருவர்மானிடவரொன்றுதுவல்லையாகின், வெறித்தாளைவே
லரக்கர்விறலியக்கர்முதலினர்நீயிடலேயொவ்வு, குறித்தாளையாவரை
யுங்கொணருதியேனின்னெதிரேகூறுமென்றான். (௧௩௫)

கொல்லலாமாயங்கள்குறித்தனவேகொள்ளலாங்கொற்றமுற்ற
வெல்லலாமற்றியற்றும்வினையெல்லாங்கடக்கலாமேல்வர்யநீங்கிப்
பல்லெலாமுறத்தோன்றும்பகுவாயாளென்னுதுபார்த்தியாயின்
நெல்லெல்லாஞ்சுரந்தளிக்குநீர்நாடகேளென்றுநிருதிகூறும். (௧௩௭)

காம்பறியுந்தோளானைக், கைவிடானெனினும்யான்மிகையோகள்வர்
ஆம்பொறியிலடலரக்கரவரோடேசெருச்செய்வானமைந்தீராயின், தா
ம்பொறியிற்பலமாயந்தரும்பொறிகளறிந்தவற்றைத்தடுப்பனன்றே;பா
ம்பறியும்பாம்பின்காலெனமொழியும்பழமொழியும்பார்க்கிலீரோ. ()

உளங்கோடலுனையிழைத்தா னுளனொருத்தியென்னுதியேனிரு
தரோடும், களங்கோடற்குரியசெருக்கண்ணியக்கர்லொருமூவேங்கலந்
தகாலை, குளங்கோடுமென்றிதுவு முறுகோளேயென்றுணருங் குறிக்
கோளில்லா, இளங்கோவேவாடனையிருத்தினிருகோளுஞ்சிறைவத்தா
ற்கிளையேனென்றாள். (௧௩௯)

பெருங்குலாவுறுநகர்க்கேயேகுநாள்வேண்டுமுருப்பிடிப்பேனன்
றேல், அருங்கலாமுற்றிருந்தானென்னினுமிங்கிளையவன்றானிருந்தாசி
ஒருங்கிலாவிவளோடுமுறைவேறோ வென்பானேவிறைவவொன்றும்
மருங்கிலர்தவளோடுமன்றோநீநெடுங்காலம்வாழ்ந்ததென்பாய். (௧௪௦)

என்றவண்மேவிளையவன்றானிலங்கிலைவேல்கடைக்கணியாவிவளை
யீண்டு, கொன்றுகளையேமென்றானெடிதிலைக்கு மருளென்கொல்கோ
வேயென்ன, நன்றதுவேயரிமன்றோபோகாளேலாகவெனநாதன்கூற,ஒ
ன்றுமிவ்வெனக்கிரங்காருயிரிழப்பெனிற்கினெனவரக்கியுன்னு. (௧௪௧)

ஏற்றநெடுங்கொடிமூக்குமிருகாதுமுலையிரண்டுமிழந்துய்வாழ, ஆ
ற்றுவனேவஞ்சனையாலுமையுள்ளபரிசறிவானமைந்தநன்றோ, காற்றி
னிலுங்கனலினிலுங்கடியானைக்கொடியானைக்கானையுங்கள், கூற்றுவனை
யிப்பொழுதேகொணர்கின்றேனென்றுசலங்கொண்டுபோனாள்.(௧௪௨)

௫-வது-சூர்ப்பநகைப்படலம்முற்றிற்று. ஆக-திருவிருத்தம்-௩௪௪.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

## ௬-வது. கரன்வதைப்படலம்.

இருந்தமாக்கரன்றாளிணையின்மிசை
சொரிந்தசோரியள்கூந்தலடேம்பெனத்
தெரிந்தமூக்கினள்வாயினள்செக்கர்மேல்
விரிந்தமேகமெனவிழுந்தாளரோ. (௧)

அழுங்குநாளிதென்றந்தகனுணையால்
தழுங்குபேரியெனத்தனித்தேங்குவாள்
முழங்குமேகமுடித்தவெந்நியினால்
புழுங்குநாகமெனப்புரண்டாளரோ. (௨)

வாக்கிற்கொக்கப்புகைமூக்குவாயினன்
நோக்கிக்கூசலருண்ணையித்தன்மையை
ஆக்கிப்போனவரார்கொலென்றனனவன்
மூக்கிற்சோரிமுழீஇக்கொண்டகண்ணினாள். (௩)

இருவர்மானுடர்தாபதரோங்கிய
வரிவில்வாட்கையர்மன்மதன்மேனியர்
தருமநீரர்தயரதன்காதலர்
செருவினோருநிருதரைத்தேடுவார். (௪)

ஒன்றுநோக்கலருன்வலியோங்கறன்
நின்றுநோக்கிநிறுத்துநினைப்பினர்
வென்றிவேற்கைநிருதரைவேரறக்
கொன்றுநீக்குதுமென்றுணர்கொள்கையார். (௫)

மண்ணினுக்கருவானினிமற்றினில்
எண்ணிநோக்குறின்யாவர்க்குநோக்கலாப்
பெண்ணினுக்குடையாளொருபேதையென்
கண்ணினுக்கியுரைப்பருங்காட்சியாள். (௬)

கண்டுநோக்கருங்காரிகையாடனைக்
கொண்டுபோவலிலங்கையர்கோக்கென
விண்டுமேல்விழுந்தேனைவெகுண்டவர்
துண்டமாக்கினர்மூக்கெனச்சொல்லினாள். (௭)

கேட்டனன்னுரைகண்டிலன்கேடினர்
தோட்டநாங்கிற்றொளையுறுமூக்கினைக்
காட்டெனாவெழுந்தானெதிர்கண்டவர்
நாட்டந்தீயவுலகைநடுக்குவான். (௮)

எழுந்துநின்றுலகேழுமெரிந்துகப்
பொழிந்தகோபக்கனலுகப்பொங்குவான்
கழிந்துபோயினர்மானிடரொன்னுங்கால்
அழிந்ததோவிவ்வரும்பழியென்னுமால். (௯)

வருகநேரொணுமாத்திரைமாடுளோர்
இருகைமால்வரையேழினொடேழனார்
ஒருகையாலுலகேந்துமுரத்தினார்
தருகவிப்பணியெம்வயிற்றானென்றார். (௰)

சூலம்வாண்மழுத்தோமரஞ்சக்கரம்
காலபாசங்கதைபொருங்கையினார்
வேலைஞாலம்வெருவுறுமார்பினார்
ஆலம்யாவுந்திரண்டன்னவாக்கையார். (௰௧)

வெம்புகோபக்கனலர்விலக்கினார்
நம்பியெம்மடிமைத்தொழினன்றெனா
உம்பர்மேனின்றுருத்தனைபோதியோ
இம்பர்மேனினியாமுளேமோவென்றார். (௰௨)

நன்றுசொல்லினிர்நாணிச்சிறார்கண்மேல்
சென்றுபோர்செயிற்றேவர்சிரிப்பரால்
கொன்றுசோரிகுடித்தவர்கொள்கையை
வென்றுமீளுதிர்மெல்லியலோடென்றான். (௰௩)

என்னலோடும்விரும்பியிறைஞ்சினார்
சொன்னநாணிலியந்தகன்றாதென
அன்னள்பிற்படர்வாரெனவாயினார்
முன்னன்காதலர்வைகிடநண்ணினார். (௰௪)

துமிலப்போர்வல்லரக்கர்க்குச்சுட்டினாள்
அமலத்தொல்பெயராயிரத்தாழியான்
நிமலப்பாதநினைவினிருந்தவக்
கமலக்கண்ணனைக்கையினிற்காட்டினாள். (௰௫)

எற்றுவாம்பிடித்தெந்துதுமென்குநர்
பற்றுவாநெடும்பாசத்தினென்குநர்
முற்றுவாமிறைசொன்முறையாலெனாச்
சுற்றினார்வரைசூழ்ந்தன்னதோற்றத்தார். (௰௬)

எத்துவாய்மையிராமனிளவலைக்
காத்திதையலையென்றுதன்கற்பகம்
பூத்ததன்னபொருவிறடக்கையால்
ஆத்தநாணினருவரைவாங்கினான். (௰௭)

வாங்கிவாளொடுவாளிபெய்புட்டிலும்
தாங்கிதாமரைக்கண்ணனச்சாலையை
நீங்கியிவ்வழிநேர்மினடாவென
வீங்குதோளன்மலைதலைமேயினான். (௰௮)

மழுவும்வாளும்வயங்கொளிமுச்சிகைக்
கழுவுங்காலவெந்தீயன்னகாட்சியார்
எழுவினீடடக்கையெழுநான்கையும்
தழுவும்வாளிகளாற்றலஞ்சார்த்தினான். (௰௯)

மரங்கள்போனெடுவாளொடுதோள்விழ
உரங்களானடர்ந்தார்க்குரவோன்விடும்
சரங்களோடினதைக்கவவர்கடம்
சிரங்களோடினதீயவளோடினாள். (௨௰)

ஒளிறுவேற்கரற்குற்றதுணர்த்தினாள்
குளிறுகோபவெங்கோளரிமாவடக்
களிறெலாம்படக்கைதலைமேலுறப்
பிளிறியோடும்பிடியன்னபெற்றியாள். (௨௧)

அங்கரக்கரவிந்தழிந்தானெனப்
பொங்கரத்தம்விழிவழிபோந்துக
வெங்கரப்பெயரோன்வெகுண்டான்விடைச்
சங்கரற்குந்தடுப்பருந்தன்மையான். (௨௨)

அழையென்றேனெக்காக்குவெல்போர்ப்படை
உழையரோடியொருநொடியோங்கன்மேல்
மழையென்மாமுரசெற்றுதிர்வல்லென்றான்
முழையின்வாளரியஞ்சமுழங்குவான். (௨௩)

பேரியோசைபிறத்தலும்பெட்புறு
மாரிமேகம்வரம்பிலவந்தெனத்
தேரின்சேனைதிரண்டனதேவர்தம்
ஊருநாகருலகுமுலைந்தவே. (௨௪)

போர்ப்பெரும்பணைபொம்மென்முழக்கமா
தீர்த்தரங்கநெடுந்தடந்தோள்களார்
ஆர்த்தெழுந்ததிறுதியினார்கலி
கார்க்கருங்கடல்கால்கிளர்ந்தென்னவே. (௨௫)

காடுதுன்றிவிசும்புகரந்தென
நீடியெங்குநிமிர்ந்தநெடுங்கொடி
ஓடுமெங்கள்பசியென்றுவந்தெழுந்
தாடுகின்றவலகையினூடவே. (உசா)

தறியினீங்கியதாழ்தடக்கைத்துணை
குறிகொளாமதவேழக்குழுவனூர்
செறியும்வாளொடுவாளிடைதேய்த்திடும்
பொறியிற்கானெங்கும்வெங்கனல்பொங்கவே. (உஎ)

முருடிரண்டுமுழங்குறத்தாக்கொலி
உருடிரண்டெழுந்தேரொலியுட்புக
அருடிரண்டவருக்கன்றன்மேல்வழங்
கிருடிரண்டுவந்தீண்டியதென்னவே. (உஅ)

தலையின்மாசுணந்தாங்கியதாரணி
நிலைநிலாதுமுதுகைநெளிப்புற
உலைவிலேழுலகத்தினுமோங்கிய
மலையெலாமொருமாடுதொக்கென்னவே. (உகூ)

(வேறு,)

வல்லியக்குழாங்களோமழையினீட்டமோ
ஒல்லிபத்தொகுதியோவோங்குமோங்கலோ
அல்லமற்றரிகளினனிகமேயெனப்
பல்பதினுயிரம்படைக்கைவீரரோ. (௩0)

ஆளிகள்பூண்டனவரிகள்பூண்டன
மீளிகள்பூண்டனவேங்கைபூண்டன
ஞாளிகள்பூண்டனநரிகள்பூண்டன
கூளிகள்பூண்டனகுதிரைபூண்டன. (௩க)

ஏற்றினமார்த்தனவேனமார்த்தன
காற்றினமார்த்தனகழுதையார்த்தன
தோற்றினமாத்திரத்துலகுசூழ்வரும்
பாற்றினமார்த்தனபணிலமார்த்தன. (௩உ)

தேரினந்துவன்றினசிறுகட்செம்முகக்
காரினநெருங்கினகாலிற்கால்வரு
தாரினங்குழுமினதடையில்கூற்றன்ன
பேரினங்கடலெனப்பெயருங்காலையே. (௩௩)

மழுக்களுமயில்களும்வயிரவாள்களும்
எழுக்களுந்தோமரத்தொகையுமீட்டியும்
முழுக்களுமுசுண்டியுந்தண்டுமுத்தலைங்
கழுக்களுமுலக்கையுங்காலபாசமும். (௩௪)

குந்தமுங்குலிசமுங்கோலும்பாலமும்
அந்தமில்சாபமுஞ்சரமுமாழியும்
வெந்தொழில்வலயமும்விளங்குசங்கனு
பந்தமுங்கப்பணப்படையும்பாசமும். (௩௫)

ஆதியினருக்கனுமனலுமஞ்சுறும்
சோதியசோரியுந்தூவுந்துன்னிய
ஏதிகண்மிடைந்தனவிமையவர்க்கெலாம்
வேதனைகொடுத்தனவாகைவேய்ந்தன (௩௬)

ஆயிரமாயிரங்களிற்றினூற்றலர்
மாயிருஞாலத்தைவிழுங்கும்வாயினர்
தீயெரிவிழியினர்நிருதர்சேனையின்
நாயகர்பதின்மரோடடுத்தநால்வரோ. (௩௭)

ஆறிரண்டாயிரமமைந்தவாயிரம்
கூறினவொருபடைகுறித்தவப்படை
ஏறினவேழினதிரட்டியென்பரால்
ஊறினசேனையின்பெருகுதியுன்னுவார். (௩௮)

உரத்தினருருமெனவுரறும்வாயினர்
கரத்தெறிபடையினர்கமலத்தோன்றரும்
வரத்தினர்மலையெனமறைந்துயின்றெழு
சிரத்தினர்தருக்கினர்செருக்குஞ்சிந்தையார். (௩௯)

விண்ணளவிடநிமிர்ந்துயர்ந்தமேனியர்
கண்ணளவிடவருமார்பர்காலினால்
மண்ணளவிடுநெடுவலத்தர்வானவர்
எண்ணளவிடவருஞ்செருவென்றேறினார். (௪0)

இந்திரன்முதலினோரெறிந்தமர்ப்படை
சிந்தினதெறித்துகச்செறிந்ததோளினார்
அந்தகனடிதொழுதடங்குமானையார்
வெந்தழலுருவுகொண்டனையமேனியார். (௪௧)

சூலமும்பாசமுந்தொடர்ந்தசெம்மயிர்ச்
சாலமுந்தறுகணுமெயிறுந்தாங்கினர்
ஆலமும்வெளிதெனுநிறத்தராற்றலால்
காலனுங்காலனென்றயிர்க்குங்காட்சியார். (௪௨)

சழலினர்தாரினர்கவசமார்பினர்
நிழலுறுபூணினர்நெறித்தநெற்றியர்
அழலுறுகுஞ்சியரமனைவேட்டுவெந்
தெழலுறுமனத்தினரொருமையெய்தினர். (௪௩)

மருப்பிருமதக்களிற்றமரர்மன்னனும்
விருப்புறுமுகத்தெதிர்விழிக்கின்வெந்திடும்
உருப்பொருவிலவுறுமுலகமூன்றினும்
செருப்பெறுத்தினவுறுசிகரத்தோளினர். (௪௪)

குஞ்சரங்குதிரைபேய்குரங்குகோளரி
வெஞ்சினக்கரதிநாய்வேங்கையாளியென்
றஞ்சுறக்கனல்புரைமுகத்தரார்கலி
நஞ்சுதொக்கெனப்புரைநயனத்தார்களும். (௪௫)

எண்கையரொழுகைபரேழுமெட்டுமாய்க்
கண்கனல்சொரிதருமுகத்தர்காலினர்
வண்கையின்வளைத்துயிர்வாரிவாயினிட்
டுண்கையினுவகையருலப்பிலார்களும். (௪௬)

இயக்கரிற்பறித்தனவவுணரிட்டன
மயக்குறத்தமரரைவலியின்வாங்கின
துயக்கில்கந்தர்ப்பரைத்துரந்துவாரின
நயப்புறுசித்தரைநலிந்துவவ்வின. (௪௭)

கொடிதழைகவிகைவான்றொங்கல்குஞ்சரம்
படியுறுபதாகைமீவிதானம்பல்வகை
இடையிலாதெங்கணுமிசையமீமிசை
மிடைதலினுலகெலாம்வெயில்விழப்பவே. (௪௮)

எழுவரொடெழுவரேழுலகமேழொடேழ்
தழுவியவென்றியர்தலைவர்தானையர்
மழுவினர்வாளினர்வயங்குசூலத்தர்
உழுவையொடரியெனவுடற்றுஞ்சீற்றத்தார். (௪௯)

வில்லினர்வாளினரிதழின்மீதிடும்
பல்லினர்மேருவைப்பறிக்குமாற்றலர்
புல்லினர்திசைதொறும்புரவித்தேரினர்
சொல்லினமுடிக்குறுந்துணிவினெஞ்சினர். (௫௰)

தூடணன்றிரிசிராத்தோன்றலாதியர்
கோடணைமுரசினங்குளிறுசேனையர்
ஆடவருயிர்கவரலங்கல்வேலினர்
பாடவநிலையினர்பலருஞ்சுற்றினர். (௫௧)

ஆன்றமைபெறிபடையழுவத்தார்கலி
வான்றொடர்மேருவைவளைந்ததாமென
ஊன்றினதேரினனுயர்ந்ததோளினன்
தோன்றினன்யாவருந்துணுக்கமெய்தவே. (௫௨)

அசும்புறுமதகரிபுரவியாடகத்
தசும்புறுசயந்தனவரக்கர்தாடர
விசும்புறுதூளியான்வெண்மைமேயின
பசும்பரியகலவன்பைம்பொற்றேரரோ. (௫௩)

வனந்துகள்பட்டனமலையின்வானுயர்
கனந்துகள்பட்டனகடல்கடூர்ந்தன
இனந்தொகுதூளியாலிசைப்பதென்னினிச்
சினந்தொகுநெடுங்கடற்சேனைசெல்லவே. (௫௪)

நிலமிசைவிசும்பிடைநெருக்கலானெடு
மலைமிசைமலையினம்வருவபோன்மலைத்
தலைமிசைதலைமிசைதாவிச்சென்றனர்
கொலைமிசைநஞ்செனக்கொதிக்குநெஞ்சினர். (௫௫)

(வேறு.)

வந்ததுசேனைவெள்ளம்வள்ளியோன்மருங்குமாய
பந்தமாவினையைமாளப்பற்றறுபெற்றியோர்க்கும்
உந்தருநிலையதாகியுடனுறைந்துயிர்கடம்மை
அந்தகர்க்களிக்குநோய்போலரக்கிமுன்னாகவம்மா. (௫௬)

தூரியக்குரலின்வானின்முகிற்கணந்துணுக்கங்கொள்ள
வார்சிலையொலியினஞ்சியுருமெலாமறுக்கங்கொள்ள
ஆர்கலியார்ப்பினுட்கியசைவுறவரக்கர்சேனை
போர்வனத்திருந்தவீரருறைவிடம்புக்கதன்றே. (௫௭

வாய்புலர்ந்தழிந்தமெய்யின் வருத்தத்த வழியின்யாண்டும்
ஓய்விலதிமிர்ந்துவீங்குமுயிர்ப்பினவுலைந்தகண்ணை
தியவர்சேனைவந்துசேர்ந்தமைதெரியச்சென்று
வேய்தெரிந்துரைப்பபோன்றபுள்ளொடுவிலங்குமம்மா. (௫௮)

தூளியின்படலைவந்துதொடர்வுறமரமுந்தூறும்
தாளிடையொடியுமோசைசடசடவொலிப்பக்காந்த்
தாளியுமரியுமஞ்சியிரிதருமலங்கநோக்கி
மீளிமொய்ம்பின்றுஞ்சேனைமேல்வந்ததெனறுமின்னா. (௫௯)

மின்னின்றசிலையன்வீரகவசத்தன்விசித்தவாளன்
பொன்னின்றவடிம்பின்வாளிப்புட்டிலன்புகையுநெஞ்சன்
நின்னின்றுகாண்டியான்செய்நிலையெனவிரும்பிநேரா
முன்னின்றபின்வந்தோனைநோக்கினன்மொழியலுற்றான். (௬௰)

நெறிக்கொண்மாதவர்க்குமுன்னேநேர்ந்தனெனிருதராவி
பறிக்குவென்யானேயென்றபழமொழிபழுதுறாமே
வெறிக்கொள்பூங்குழலினாளைவீரநீவேண்டினேன்யான்
குறிக்கொடுகாத்தியென்னேகொல்வெனிக்குழுவையென்றான். (௬௧)

மரன்படர்கானமெங்குமதர்படவந்தசேனை
கரன்படையென்பதெண்ணிக்கருநிறக்கமலக்கண்ணன்
சரன்படர்புட்டில்கட்டிச்சாபமுந்தரித்தான்றள்ளா
உரன்படர்தோளின்மீளாக்கவசமிட்டுடைவாளார்த்தான். (௬௨)

மீளருஞ்செருவின்விண்ணுமண்ணுமென்மேல்வந்தாலும்
நாளுலந்தழியுமன்றேநானுனக்குரைப்பதென்னே
ஆளியின்றுப்பினையிவ்வமரொன்கருளினின்றன்
தோளினைத்தினவுதின்றசோம்பினைத்துடைத்தியென்றான். (௬௩)

என்றனனிளையவீரனிசைந்திலனிராமனேந்தும்
குன்றனதோளினாற்றலுள்ளத்தினுணரக்கொண்டான்
அன்றியுமண்ணலாணைமறுக்கிலனாங்கைகூப்பி
நின்றனனிருந்தான்கண்ணீர்நிலனுறப்புலர்கின்றாள்பால். (௫௪)

குழையுறுமதியம்பூத்தகொம்பனாள்குழைந்துசோரத்
தழையுறுசாலைநின்றுந்தனிச்சிலைதரித்தமேரு
மழையெனமுழங்குகின்றவாளெயிற்றரக்கர்காண
முழையினின்றெழுந்துசெல்லுமடங்கலின்முனிந்துசென்றான். (௫௫)

தோன்றியதோன்றறன்னைச்சுட்டினள்காட்டிச்சொன்னாள்
வான்றொடர்மூங்கிறந்தவயங்குவெந்தீயிதென்னத்
தான்றொடர்குலத்தையெல்லாந்தொலைக்குமாசமைந்துநின்றாள
ஏன்றுவந்தெதிர்த்தவீரனிவனிகலிராமனென்னா. (ருசு)

கண்டனன்கனகத்தேர்மேற்கதிரவன்றலங்கிநீங்க
விண்டனினின்றவெற்றிக்கரனெனும்விலங்கற்றோளான்
மண்டமர்யானைசெய்திம்மானுடன்வலியைநீக்கிக்
கொண்டனன்வாகையென்றுபடைஞரைக்குறித்துச்சொன்னான். (சுஎ)

மானிடனொருவன்வந்தவலிகெழுசேனைக்கம்மா
கானிடமில்லையென்னுங்கட்டுரைகலந்தகாலை
யானுடைவென்றியென்னும்யாவருங்கண்டுநிற்றிர்
ஊனுடையிவனையானேயுண்குவெனுயிரையென்றான். (சுஅ)

அவ்வுரைகேட்டுவந்தானகம்பனென்றமைந்தகல்விச்
செவ்வியானொருவனையசெப்புவென்செருவிற்சால
வெவ்வியாதனன்றேவீரரிலரீண்மைவீர
இவ்வயினுளவாந்தீயநிமித்தமென்றியம்பலுற்றான் (சுகூ)

(வேறு.)

குருதிமாமழைசொரிந்தனமேகங்கள்குமுறிப்
பரிதிவானவனூர்வளைப்புண்டதுபாராய்
கருதுவீரநின்கொடிமிசைக்காக்கையின்கணங்கள்
பொருதுவீழ்வனபுலம்புவநிலம்படப்புரள்வ. (எ0)

வாளின்வாய்களையீவளைக்கின்றனவயவர்
தோளுநாட்டமுமிடந்துடிக்கின்றனதூங்கி
மீளிமொய்ம்பரிணிவுளிவீழ்கின்றனவிரவி
நாளியோடுநின்றுளைக்கின்றநரிக்குலம்பலவால். (எக)

பிடியெலாமதம்பெய்திடப்பெருங்கவுள்வேழம்
ஒடியுமான்மருப்புலகமுங்கம்பிக்குமுயர்வான்
இடியும்வீழ்ந்திடுமெரிந்திடுபெருந்திசையெவர்க்கும்
முடியின்மாலைகள்புலாலொடுமுழுமுடைநாறும். (எஉ)

இனையவாகலின்மானுடனொருவனென்றிவனை
நினையலாவதொன்றன்றதுநீதியாம்நின்ற
வினையெலாஞ்செய்துவெல்லலாந்தன்மையனல்லன்
புனையும்வாகையாய்போற்றியென்னுமாயெனப்புகன்றான். (எங)

உரைத்தவாசகங்கேட்டலுமுலகெலாமுலையச்
சிரித்துநின்றவன்சேவகந்தெவ்வரைத்தேடி
அரைத்தவம்பியாமலங்கெழிற்றோள்மர்வேண்டி
இரைத்துவீங்குவமானிடற்கெளியவோவென்றான். (எச)

என்னுமாத்திரத்தெறிபடையிடியெனவிடியா
மன்னர்மன்னவன்மத்தகயவுளிக்கன்வளைந்து
மின்னும்வாளுளைமடங்கலைமுனிந்தனவேழம்
துன்னிறுலெனச்சுடுசினத்தரக்கிர்தந்தெறிகுதி. (எரு)

வளைந்தகாலையில்வளைந்தனவிர்ப்பின்னுக்கவிரிவில்
விளைந்தபோரையுமாவதும்விளம்புதும்விசையால்
புளைந்தபாய்பரிபுரண்டனபுகர்முகப்பூட்கை
உலைந்தமால்வரையுருமிடிப்பட்டெனவிடிந்தென்ன. (எசு)

சூலமற்றனவற்றனசுடர்மழுத்தோமரங்கள்
மூலமற்றனவற்றனமுரட்டண்டுபிண்டி
பாலமற்றனவற்றனபகழிவெம்பகுவாய்
வேலுமற்றனவற்றனவில்லொடுபல்லம். (எஎ)

தொடிதுணிந்தனதேரொடுதோமரந்துணிக்க
அடிதுணிந்தனகடக்களிறச்சொடுநெடுந்தேர்
தொடிதுணிந்தனகுரகதந்துணிந்தனகுலமா
முடிதுணிந்தனமுளையொடுதுணிந்தனமுசலம். (எஅ)

கருவிமாவொடுகாமதக்கைம்மலைக்கணத்தோ
டுருவிமாதிரத்தோடினசுடுசரமுதிரம்
அருவிமாரியிற்றேங்கினதவனியிலரக்கர்
திருவின்மார்பகந்திறந்தனதுறந்தனசிரங்கள். (எகூ)

ஒன்றுபத்துநூறாயிரகோடியென்றுணராத்
துன்றுபத்திபவிராகவன்சுடுசரந்துரப்பச்
சென்றுபத்திரத்தலையெனமலைதிரண்டென்னக்
கொன்றுபத்தியிற்குவித்தனபிணப்பெருங்குன்றம். (அ0)

காடுகொண்டகாருலவைசூழ்தழலெரிகதுவச்
சூடுகொண்டனவெனத்தொடர்குருதிமீத்தோன்ற
ஆடுகின்றனவறுகுறைபயிலம்புவின்மேல்
ஓடுகின்றனவுயிரையுந்தொடர்வனவொத்த. (அக)

கைகள்வாளொடுகளம்படக்கழுந்தறக்கவசம்
மெய்கள்போழ்படத்தாள்விழவெருவிடநிருதர்
செய்யமாத்தலைசிந்தினதிசைப்புறஞ்சென்று
நொய்தலார்நெடுவிழியெனக்கொடியனசரங்கள். (௮௨)

மாரியாக்கியவடிக்கணைவரைபுரைநிருதர்
பேரியாக்கையின்பெருங்கரைவயின்றொறும்பிறங்க
வாரியாக்கினயாறுகளியற்றினநிறையுச்
சோரியாக்கினபோக்கினவுணமெனுந்தொன்மை. (௮௩)

அலைமிதந்தனகுருதியின்பெருங்கடலரக்கர்
தலைமிதந்தனநெடுந்தடிமிதந்தனதடக்கை
மலைமிதந்தனவாம்பரிமிதந்தனவுயுப்போர்ச்
சிலைமிதந்தனகொடியொடுமிதந்தனதேர்கள். (௮௪)

ஆயகாலையினனல்விழித்தார்த்திகலரக்கர்
தீயவார்கணைமுதலியவடுசினப்படைகள்
மேயமால்வரையொன்றினைவளைத்தனமேகம்
தூயதாரைகள்சொரிவனவாமெனச்சொரிந்தார். (௮௫)

சொரிந்தபல்படைதுணிபடத்துணிபடச்சரத்தால்
அரிந்துபோந்தனசிந்திடத்திசைதிசையகற்றி
நெரிந்துபார்மகண்முதுகிறவன்முற்றுநிறைய
விரிந்தசெம்மயிர்க்கருந்தலைமலையென்விழுந்தான். (௮௬)

கவந்தபந்தங்கள்களித்தனகுளித்தகைம்மலைகள்
செவந்துபாய்ந்தவெங்குருதியிற்றிருகியசின்றதால்
சிவந்தவெந்தொழினிருதர்தநெடுங்கணந்தெவ்வுட்டி
உவந்தவன்கழுதுயிர்சுமந்துளுக்கியதும்பர். (௮௭)

மருடருங்களிவஞ்சனைவளையெயிற்றரக்கர்
கருடனஞ்சுறுகண்மணிகாகமுங்கவர்ந்த
இருடரும்புரத்திழைதையர்பழுதுறநெக்கிளைதே
அருடருந்திறத்தறனன்றிவ்வியதுண்டாமே. (௮௮)

(வேறு.)

பல்லாயிரமிருள்கீறியபகலோரனனனொளிரும்
வில்லாளனைமுனியர்வெயிலயிலாமெனவிழியாக்
கல்லார்மழைகணமாமுகில்கண்டார்ள்விடுவனபோல்
எல்லாருமொருதொடையாவுடனெய்தார்வினைசெய்தார். (௮௯)

எறிந்தானொன் வெம்பூணொன் றினைச்சர மொன்றறுத்தான்
அறிந்தானென வுறியாவகை யயில்வாளியி னறுத்தான்
செறிந்தான்பெரும் பிறிந்தான்கணை யுஞ்செறுத்தா னுரியுஞ்சினத்தால்
முறிந்தானையும் வலித்தானையு மடித்தான் சிலையிறுத்தான். (௬0)

வானத்தனைக் கட்டிவிண்புரி வலயத்தன் மின்றிகிரும்
மீனத்தன மிளிர்குண்டலம் பிதுன்னத்தனும் பிட்டல்வெங்
கானத்தன மலையத்தன் மின்கசந்திரிய கரியின்
கானத்தன காருத்தன் சிரமுருந்திய சிரமே. (௬௧)

மண்மேலன மலைமேல்னம் வனமேலனம் திசைதோய்
விண்மேலன விண்டு வேலையின் மேல்கிழன் மிடலோர்
புண்மேல்னி ருந்திப்பொழி தினாயாறுகள் பொங்கத்
திண்மேருவைக் குமாரர் பிணையுருவித் திரிசரமே. (௬௨)

பொலந்தாரின ரன்னின் சினைபொதி கண்ணிரொருவரும்
வலந்தாங்கிய வடிவெம்படை விடுவார்சர மழையால்
உலந்தாருடல் கடலோடுற வுலவார்வுட லுற்றார்
குலந்தார்கிசரர் மெனவிமையோ ரொடுமார்த்தார். (௬௩)

ஈரற்செறி கமலத்தன வீரதத்திரள் புளினம்
வீரக்கரி முதலைக்குல மீதக்கின்றன வுதிக்கும்
பாரக்குடர் மிடைபாசடை படர்கின்றன பவ்வால்
மூரித்திரை யுதிரக்கடன் முழுகிக்கழு தெழவே. (௬௪)

அழைத்தார்சில ரயர்ந்தார்சில ராழ்ந்தார்சிலர் கழிந்தார்
உழைத்தார்சில ருயிர்த்தார்சில ருருண்டார்சிலர் புரண்டார்
குழைத்தாழ்திரைக் குருதிக்கடல் குளித்தார்சிலர் கொலைவாய்
மழைத்தாரைகள் படப்பாரிடை மடிந்தார்சில ருடைந்தார். (௬௫)

உடைந்தார்களை நகைசெய்தனர் ருற்றோரின ருட்கும்
அடைந்தார்படைத் தலைவீரர்கள் பதினால்வரும் மில்லாள்
மிடைந்தார்நெடுங் கடற்றானையர் பிடல்வில்லினர் விரிநீர்
குடைந்தார்வெரு வுறமீதெழு கடுவெஞ்சினக் கொடியோர். (௬௬)

நாகத்தனி யொருவில்லினின் னளிர்முப்புர முன்னாள்
மாகத்திடை வளைவுற்றனன் வள்ளல்மதி யார்
ஆகத்தெழு கனல்கண்வழி யுகவுற்றெதிர் சென்றார்
மேகத்திரை நிகர்வில்லினை வளைத்தார் செருவிளைத்தார். (௬௭)

எய்தார்பலரொறுத்தார்பலர்மழுவோச்சினரொழிவார்பல்
பொய்தார்பலர்புடைத்தார்பலர்கிடைத்தார்பலர்பொருப்பாய்
பெய்தார்மணிமுடிபிதிர்த்தாரெரிபிறைவாயெயிற்றரக்கர்
வைதார்பலர்தெழித்தார்பலர்மலையாமெனவுளைத்தார். (௯௮)

தேர்பூண்டனவிலங்கியாளையுஞ்சிலைபூண்டெடுகொடுங்கையர்
பார்பூண்டனமதமாகரிபரிபூண்டனபரிமாத்
தார்பூண்டனவுடல்பூண்டிலதலைவெங்கதிர்தழிவந்
தூர்பூண்டனபிரிந்தாலெனவிரிந்தாருயிருலந்தார். (௯௯)

மால்பொத்தினமறவோருடன்மழைபொத்தினவழிசெம்
பால்பொத்தினதியிற்கிளர்படிபொத்தினபடர்வான்
மேல்பொத்தினகுழுவிண்ணவர்விழிபொத்தினர்விரைவுற்
கால்பொத்தினர்நமனூர்தொறுமவர்கடிதுற்றுயிர்கவர்வார். (௱)

பேயேறினசெருவேட்டெழுபித்தேறினர்பிலவாய்
காயேறினதலைமேனெடுங்கிரீடமறின்வெரிகால்
வாயேறினவடிவாளியின்வினையேறினர்வந்தார்
தீயேறிகலரியேறெனமீக்கீழெனச்செறிந்தார். (௱௧)

தலைசிந்தினவிழிசிந்தினதழல்சிந்தினதரைமேல்
மலைசிந்தினபடிசிந்தினவரிசிந்துரமழைபோல்
சிலைசிந்தினகணைசிந்தினதிசைசிந்தினதிசைபோ
டுலைசிந்தினபொறிசிந்தினவுயிர்சிந்தினவுடலம். (௱௨)

(வேறு.)

படைப்பெருந்தலைவரும்படைத்ததேர்களும்
உடைத்தடம்படைகளுமொழியவுற்றெதிர்
விடைத்திட்டர்க்கெதிர்ந்தவர்வீரன்வாளியால்
முடைத்தவெங்குருதியின்கடலின்மூழ்கினார். (௱௩)

சுற்றுறநோக்கினர்தொடர்ந்தசேனையில்
அற்றிலதலையெனும்யாக்கைகண்டிலர்
தெற்றினரெயிறுகடிருகினர்சினம்
முற்றினர்ராமனைமுடுகிநேரினார். (௱௪)

எழிருதேரும்வந்திமைப்பின்முன்பிடைச்
சூழ்வனகணைகளிற்றுணியநூறினான்
ஆழியும்புரவியுமாளுமற்றவை
ஊழிவெங்காலெறியோய்ந்தவொத்தவே. (௱௫)

அழிந்தன தேரவை யவனி கிண்டுக
இழிந்தனர் வரிசிலை யெடுத்த கையினர்
ஒழிந்திலர் சரங்களை யுருமி னேனென்னப்
பொழிந்தனர் பேரழி கனல் பொடிக்குங் கண்ணினார். (௱சு)

தூறிய சரமெலா நூறுங் கவாளியால்
ஈறுசெய் தவர்சிலை யேழொ டேழையும்
ஆறினொ டாறு மோரிரண்டு மெய்பினால்
கூறுசெய் தமர்த்தொழிற் கொதிப்பு நீக்கினான். (௱எ)

வில்லிழந் தனைவரும் வெருளி மீக்கொளக்
கல்லுயர் நெடுவரை கடிதி னேந்தினார்
ஒல்லையி னுருத்துயர் விசும்பி னோங்கினின்
றெல்லுயர் பொறியுக வெறிதன் மேயினார். (௱அ)

கலைகளின் பெருங்கடல் கடந்த கல்வியான்
இலைகொள் வெம்பகழி யேழிரண்டு வாங்கினான்
கொலைகொள் வெஞ்சிலையொடு புருவங் கோட்டினான்
மலைகளுந் தலைகளும் விழுந்த மண்ணினே. (௱கூ)

படைத்தலைத் தலைவர்கள் படலும் பல்படை
புடைத்தடர்ந் தெதிரழல் புரையுங் கண்ணினார்
கிடைத்தன ராக்கர்கள் கீழு மேலுமாய்
அடைத்தனர் திசைகளை யமரஞ் சினார். (௱ய)

முழங்கின பெரும்பணை முரசின் மால்கரி
முழங்கின வரிசிலை முடுகு நாணொலி
முழங்கின சங்கொடு புரவி முற்றுற
முழங்கின ராக்கர் தமுகிலி னார்ப்பரோ. (௱யக)

(வேறு.)

வெம்படை நிருதர் விசவிண் ணிடை மிடைந்த வீரன்
அம்பிடை யறுக்கச் சிந்தி யற்றன படுமென் றஞ்சி
உம்பரு மிரியல் போனா ருலகெலா மலைந்து சாய்ந்த
கம்பமில் திசையி னின்ற களிறுங்கண் ணிமைத்த வன்றே. (ககஉ)

(வேறு.)

அத்தலைத் தானையை யளவி லாற்றலன்
முத்தலைக் குரிசில்பொன் முடியன் முக்கணான்
கைத்தலைச் சூலமே யனைய காட்சியான்
வைத்தலைப் பகழியான் மழைசெய் வில்லினான். (கக௩)

அன்னவனடுவுறவாழியூழியி
னென்னவந்தெங்கணுமிரைத்தசேனையுள்
தன்னிகர்வீரனுந்தமியன்வில்லின்
றுன்னிருளிடையதோர்விளக்கிற்றோன்றினான். (௧௧௪)

ஓங்கொளிவாளினனுருமினார்ப்பினன்
வீங்கியகவசத்தன்வெய்யகண்ணினன்
ஆங்கவனணிக்கெதிரணிகளாகநேர்
தாங்கினனிராமனுஞ்சரத்தின்றானையால். (௧௧௫)

தாளிடையற்றனதலையுமற்றன
தோளிடையற்றனதொடையுமற்றன
வாளிடையற்றனமழுவுமற்றன
கோளிடையற்றனகுடையுமற்றன. (௧௧௬)

கொடியொடுகொடுஞ்சினப்புரவிகூட்டறப்
படியிடைபடிந்தனபருத்ததேர்பல
நெடியவன்கடகரிபுரண்டனெற்றியின்
இடியொடுமுறிந்துவீழ்சிகரமென்னவே. (௧௧௭)

அற்றனசிரமெனவறிதரேற்றலர்
கொற்றவெஞ்சிலைச்சரங்கோத்துவாங்குவார்
இற்றவரிறுதவொழுந்துவிண்ணினைப்
பற்றினமழையெனப்பண்டைவழங்குவார். (௧௧௮)

கேடகத்தடக்கையர்கிரியின்றோற்றத்தர்
ஆடகக்கவசத்தர்கவந்தமாடுவ
பாடகத்தரம்பையர்மருளப்பல்வித
நாடகத்தொழிலினைநடிப்பவொத்தவே. (௧௧௯)

கவரிவெண்குடையெனுநுரையகைம்மலை
சுவறருசுறவமாழ்சுழியதண்டுறைப்
புவரிணைப்படுமணிகுவிக்கும்பண்ணைய
உவரியைப்புதுக்கினவுதிரயாறரோ. (௧௨0)

சண்டவெங்கடுங்கணைதடியத்தான்சில
திண்டிறல்வளையெயிற்றரக்கர்தேவராய்
வண்டுழல்புரிகுழன்மடந்தைமாரொடும்
கண்டனர்தம்முடைக்கவந்தநாட்டம். (௧௨௧)

ஆய்வளைமகளிரோடமரீட்டத்தர்
தாயவெங்கடுங்கணைதுணித்ததங்கடோள்
பேயொருதலைகொளப்பிணங்கிவாய்களின்
நாயொருதலைகொளநகையுற்றார்சிலர். (கஉஉ)

தெரிகணைமூழ்கலிற்றிறந்தமார்பினர்
இருவினைகடந்துபோயும்பரெய்தினார்
நிருதர்தம்பெரும்படைநெடிதுநின்றவன்
ஒருவனென்றுள்ளத்தினுலைவுற்றாரரோ. (கஉங)

கைக்கரியன்னவன்பகழிகண்டகர்
மெய்க்குலம்வேரொடுந்துணித்துவீழ்த்தின
மைக்கருமனத்தொருவஞ்சன்மாண்பிலன்
பொய்க்கரிகூறியகொடுஞ்சொல்போன்றவே. (கஉச)

அஞ்சிறையறுபதமடைந்தகீடத்தைத்
தஞ்செனத்தன்மயமாக்குந்தன்மைபோல்
வஞ்சகத்தரக்கரைவளைத்துவள்ளறான்
செஞ்சரத்தூய்மையாற்றேவராக்கினான். (கஉரு)

வலங்கொள்போர்மானுடன்வலிந்துகொன்றமை
அலங்கல்வேலிராவணற்கறிவிப்பாமெனச்
சலங்கொள்போரரக்கர்தமுருக்கடாங்கின
இலங்கையினுற்றவக்குருதியாறரோ. (கஉசு)

சூழ்ந்ததார்நெடும்படைபகழிசுற்றுறப்
போழ்ந்துயிர்குடித்தலிற்புரளப்பொங்கினான்
தாழ்ந்திலன்முத்தலைத்தலைவன்சோரியின்
ஆழ்ந்ததேரம்பரத்தோட்டியார்க்கின்றான். (கஉஎ)

ஊன்றியதேரினனுருமின்வெங்கணை
வான்றொடர்மழையெனவாய்மையாவர்க்கும்
சான்றெனநின்றவத்தருமமன்னவன்
தோன்றறன்றிருவுருமறையத்தூவினான். (கஉஅ)

தூவியசரமெலாந்துணியவெங்கணை
ஏவினனிராமனுமேவியேழிரு
பூவியல்வாளியாற்பொலங்கொடேரழித்
தாவிவெம்பாகனையழித்துமாற்றினான் (கஉகூ)

அன்றியுமக்கணத்தமரசார்த்தெழப்
பொன்றெரிவடிம்புடைப்பொருவில்வாளியால்
வன்றொழிறியவன்மருடமாத்தலை
ஒன்றொழித்திரண்டையுமுருட்டினனரோ. (௧௩௦)

தேரழிந்தவ்வழித்திரிசிராவெனும்
பேரழிந்ததனினுமறம்பிழைத்திலன்
வாரழிந்துமிழ்சிலைவானநாட்டுழிக்
காரிழிந்தாலெனக்கணைகள்சிந்தினன். (௧௩௧)

ஏற்றியறுதலினிருண்டகார்மழை
தோற்றியவில்லொடுந்தொடாமீமிசைக்
காற்றிடையழிந்தெனக்கார்முகத்தையும்
மாற்றரும்பகழியாலறுத்துமாற்றினன். (௧௩௨)

(வேறு.)

வில்லிழந்தனனென்னினும்விழித்தவாண்முகத்தின்
எல்லிழந்திலனிழந்திலன்வெங்கதமிடிக்கும்
சொல்லிழந்திலன்றோள்வலியிழந்திலன்சொரியும்
கல்லிழந்திலனிழந்திலன்கறங்கெனத்திரிதல். (௧௩௩)

ஆளிரண்டுநூறுளவெனவந்தரத்தொருவன்
மூளிரும்பெருமாயவெஞ்செருமுயல்வானைத்
தாளிரண்டையுமிரண்டுவெங்கணைகளாற்றடிந்து
தோளிரண்டையுமிரண்டுவெங்கணைகளாற்றுணித்தான். (௧௩௪)

அற்றதாளொடுதோளினனயிலெயிறிலங்கப்
பொற்றைமாமுழைப்புலாலுண்டவாயினன்புகுந்து
பற்றவாதரிப்பான்றனைநோக்கினன்பரியான்
கொற்றவார்சிலைச்சரங்கொடுதலையையுங்குறைத்தான். (௧௩௫)

திரிசிராவெனுஞ்சிகரமண்சேர்தலுஞ்செறிந்த
நிருதரோடினர்தூடணன்விலக்கவுநில்லார்
பரிதிவாளினர்கேடகத்தடக்கையர்பாந்த
குருதிநீரிடைவார்கழல்கொழுங்குடர்தொடக்க. (௧௩௬)

கணத்தின்மேனின்றவானவர்கைபுடைத்தார்த்தார்
பணத்தின்மேனிலங்குழியுறக்கால்கொடுபெயர்த்தார்
நிணத்தின்மேல்விழுந்தழுந்தினர்சிலர்சிலர்நிவந்த
பிணத்தின்மேல்விழுந்துருண்டனருயிர்கொடுபிழைப்பார். (௧௩௭)

தேய்ந்தவாளொடு வேலிடைமிடைந்தன வெட்ட
ஓய்ந்துளார் சிலருலந்தனருதிரநீர்யாற்றில்
பாய்ந்து கால்பறித்தழுந்தினர் சிலர் சிலர்பயத்தால்
நீந்தினார் நெடுங்குருதியங்கடல்புக்குநிலையார். (௧௩௮)

கச்சும்வாளுந் தங்காவுருடர்ந்தீர்வனகாணூர்
அச்சமென்பதொன்றுருவுகொண்டாலென வழிவார்
உச்சவீரன் கைச்சுடுசரநிருதர் நெஞ்சுருவத்
தச்சுநின்றனகண்டன ரவ்வழித்தவிர்ந்தார். (௧௩௯)

மண்டியோடினர் சிலர் நெடுங்கடகரிவயிற்றில்
புண்டிறந்தமாமுழைபிடைவாளொடும்புகுவார்
தொண்டைநீங்கியகவந்தத்தைத் துணைவநீயெம்மைக்
கண்டிலேனெனப்புகலெனக் கைதலைக்கொள்வார். (௧௪0)

அனையராகியவரக்கரையாண்டொழிற்கமைந்த
வினையநீங்கியமனிசரை வெருவன்மினென்ன
நினையுநாளுமக்குரைப்பதுமுண்டென நின்றே
துணையும்வார்பரித்தேரினன்றூடணன் சொன்னான். (௧௪௧)

வச்சையாமெனும்பயமனத்துண்டெனவாழும்
கொச்சைமாந்தரைக்கோல்வளைமகளிருங்கூசார்
நிச்சயம்மெனுங்கவசந்தானிலைநிற்பதன்றி
அச்சமென்னுமீதாருயிர்க்கருந்துணையாமோ. (௧௪௨)

பூவராவுவேற்புரந்தரனொடுதான்பொன்று
மூவரோடுதான் முன்னின்றுமுட்டியமுனையில்
ஏவரோடினரிராக்கதர் நுமக்கிடைந்தோடும்
தேவரோடுகற்றறிந்துளிராமெனத்திகைத்தீர். (௧௪௩)

இங்கொர்மானிடற்கித்தனைவீரர்களிடைந்தீர்
இங்கைவாளொடுபோய்விழுந்தூர்புகலுற்றீர்
கொங்கைமார்பிடைக்குளிப்புறக்களிப்புற்றுங்கொழுங்கண்
நங்கைமார்களைப்புல்லுதிரோ நலநுகர்வீர். (௧௪௪)

செம்புகாட்டியகண்ணிணைபாலெனத்தெளிந்தீர்
வெம்புகாட்டிடைநுழைதொறும்வெரிநுறப்பாய்ந்த
கொம்புகாட்டுதிரோ தடமார்பிடைக்குளித்த
அம்புகாட்டுதிரோகுலமங்கையர்க்கம்மா. (௧௪௫)

ஏக்கமிங்கிதன்மேலுமுண்டேயிகன்மனிதன்
ஆக்கும்வெஞ்சமத்தாண்மையவ்வமரர்க்குமரிதாத்
தாக்கரும்புயத்துங்குலத்தலைமகன்றங்கை
மூக்கொடன்றியும்முதுகொடும்போம்பழிமுயன்றீர். (கசசு)

ஆரவாழ்க்கையின்வணிகராயமைதிரோவயில்வேல்
வீரவாட்கொடுவேன்மடுத்துழுதிரோவெறிபோர்த்
தீரவாழ்க்கையிற்றெவ்வரைச்செருவிடைப்பறித்த
வீரவாட்கையிரொங்களம்வாழ்திரோவிளம்பீர். (கசஎ)

என்றுதானுந்தன்னெறிகடற்சேனையுமிறைநீர்
நின்றுகாண்டிரென்னெடுஞ்சிலைவலியெனநேராச்
சென்றுதாக்கினன்றேவருமருள்கொண்டுதிகைத்தார்
நன்றுகாத்தியென்றிராமனுமெதிர்செலநடந்தான். (கசஅ)

ஊடறுப்புண்டமொய்ப்படைக்கையொடுமுயர்ந்த
கோடறுப்புண்டகுஞ்சரங்கொடிஞ்சொடுகொடியின்
காடறுப்புண்டகாலியற்றேர்கதிர்ச்சாலி
சூடறுப்புண்டவெனக்கழுத்தறுப்புண்டதுரகம். (கசகூ)

குருவியோடினவுயிர்நிலைசுடுசரந்துரந்த
கருவியோடினகச்சையுங்கவசமுங்கழல
அருவியோடினவெனவழிகுருதியாறொழுக
உருவியோடினகேடகத்தட்டொடுமுடலம். (கரு0)

ஆய்ந்தகங்கபத்திரங்கள்புக்கரக்கசதாவி
தோய்ந்ததோய்விலாப்பிறைமுகச்சரஞ்சிரந்துமித்த
காய்ந்தவெஞ்சரநிருதர்தங்கவசமார்புருவப்
பாய்ந்தவஞ்சகரிதயமும்பிளந்தனபல்லம். (கருக)

தூடணன்விடுசுடுசரம்யாவையுந்துணிய
மாடுநின்றவர்வழங்கியபடைகளுமாற
ஆடல்கொண்டனனளப்பரும்பெருவலியரக்கர்
கூடிநின்றவக்குழாங்கடல்வறள்படக்குறைத்தான். (கருஉ)

ஆர்த்தெழுந்தனர்வானவருவகைமரத்தோ
ஈர்த்தெழுந்தனகுருதியின்பெருநதியிராமன்
தூர்த்தசெஞ்சரந்திசைதொறுந்திசைதொறுந்தொடர்ந்து
போர்த்தவெஞ்சினத்தரக்கரைப்புரட்டினபுவியில். (கருங)

தோன்றுமால்வரைத் தொகையெனத் துவன்றியநிணச்சே
றூன்றபாழ்வயிற்றலகையைப்புகல்வதெனமர்வேட்
டேன்றினொலாமுலைந்தனரொல்லையிலொழிந்தார்
கான்றவின்னுயிர்காலனுங்கவர்ந்துமெய்ம்மறந்தான்.                    (கருச)

களிறுதேர்பரிகடுத்தவர்முடித்தலைகவந்தம்
ஒளிறுபல்படைத்தங்குலத்தரக்கர்தமுடலும்
வெளிறுசேர்நிணம்பிறங்கியவடுக்கலின்மீதாக்
குளிறுதேர்கடிதோட்டினன்றூடணன்கொதித்தான்.                    (கருரு)

அறங்கொளாதவராக்கைகளடுக்கியவடுக்கல்
பிறங்கிநீண்டனகணிப்பிலபெருங்கடுவிசையால்
கறங்குபோன்றுளதாயினும்பிணப்பெருங்கட்டத்
திறங்குமேறுமத்தேர்பட்டதியாதெனவுரைப்பாம்.                    (கருசு)

அரிதினெய்தினனையந்துகொய்யுளைப்பரிமா
உருளுமாழியதொருதனித்தேரினனுலகத்
திருளைநீக்கியவிந்துவிற்பொலிகின்றவிராமன்
தெருளும்வார்கணைக்கூற்றெதிராவிசென்றென்ன.                    (கருஎ)

சென்றசேனையுஞ்சிலையுடைமலையெனத்தேர்மேல்
நின்றதூடணன்றன்னையுநோக்கியநிமலன்
நன்றுநன்றுநின்னிலையெனவருளினைநயந்தான்
என்றகாலத்தவ்வெய்யவன்பகழிமூன்றெய்தான்.                    (கருஅ)

தூரவட்டவெண்டிசைகளைத்தனித்தனிசுமக்கும்
பாரவெட்டினோடிரண்டினிறென்றுபார்புரக்கப்
பேரவிட்டவனுதலணியோடையிற்பிறழும்
வீரபட்டிகைபட்டனவிண்ணவர்வெருவ.                    (கருகூ)

எய்தகாலமும்வலியுநல்லெனநினைந்திராமன்
செய்தசேயொளிமுறுவலன்கடுங்கணைதெரிந்தான்
நொய்தினங்கவனேறிற்பரித்தேர்படநூறிக்
கையின்வெஞ்சிலையறுத்தொளிர்கவசமுங்கடிந்தான்.                    (கசுo)

தேவரார்த்தெழமுனிவர்கடிசைதொறுஞ்சிலம்பும்
ஓவில்வாழ்த்தொலிநாற்கடன்முழக்கெனவோங்கக்
காவடாவிதுவல்லையேனீயெனக்கணையொன்
றேவினனவனெயிறுடைநெடுந்தலையிழந்தான்,                    (கசுக)

(வேறு.)

தம்பிதலையற்றபடியுந்தயரதன்சேய்
அம்புபடையைத்துணிபடுத்ததுமறிந்தான்
வெம்புபடைவிற்கைவிசயக்கரன்வெகுண்டான்
கொம்புதலைகட்டியகுலக்கரிகடுப்பான். (கசாஉ)

அந்தகனுமுட்கிடவரக்கர்கடலோடுஞ்
சிந்துரம்வயப்புரவிதேர்திசைபரப்பி
இந்துவைவளைக்குமெழிலிக்குலமெனத்தான்
வந்துவரிவிற்கைமதயானையைவளைத்தான். (கசாங)

அடங்கலில்கொடுந்தொழிலரக்கரவனந்தன்
படங்கிழிதரப்படிதனிற்பலவிதப்போர்
நடங்களுந்தடங்களிறுதேர்பரிகடாவித்
தொடங்கினர்நெடுந்தகையும்வெங்கணைதுரந்தான். (கசாச)

துடித்தனகடக்கரிதுடித்தனபரித்தேர்
துடித்தனமுடித்தலைதுடித்தனதொடித்தோள்
துடித்தனமணிக்குடர்துடித்தனதசைத்தோல்
துடித்தனகழற்றுணைதுடித்தனவிடத்தோள். (கசாரு)

வாளின்வனம்வேலின்வனம்வார்சிலைவனந்திண்
தோளின்வனமென்றிவைதுவன்றிநிருதப்பேர்
ஆளின்வனநின்றதனையம்பின்வனமென்னும்
கோளின்வனவன்குழுவினிற்குறைபடுத்தான். (கசாசா)

தானுருவுகொண்டதருமந்தெரிசரந்தான்
மீனுருவுமேருவைவிலங்குருவுமேலாம்
வானுருவுமண்ணுருவும்வாளுருவிவந்தார்
ஊனுருவுமென்னுமிதுணர்த்தவுமுரித்தோ. (கசாஎ)

அன்றிடையுளைந்தவர்குலங்களொட்டங்கச்
சென்றுலைவுறும்படிதெரிந்துகணைசிந்த
மன்றிடைநலிந்துவலியோர்களெளியோராக்
கொன்றனர்நுகர்ந்தபொருளிற்கடிதுகொன்ற. (கசாஅ)

கடுங்கரனெனப்பெயர்படைத்தகழல்வீரன்
அடங்கலுமரக்கரழிவுற்றிடவழன்றான்
ஒடுங்கலில்நினைக்குறுதியோதமதினுள்ளான்
நெடுங்கடலின்மந்தரமெனத்தமியனின்றான். (கசாகூ)

செங்கணெரிசிந்தவரிவிற்பகழிசிந்தப்
பொங்குகுருதிப்புணரியுட்புணையுநெஞ்சன்
கங்கமொடுகாகமிடையக்கடலினோடும்
வங்கமெனலாயதொருதேரின்மிசைவந்தான். (௧௱)

செறுத்திறுதியிற்புவனிதீயவெழுதீயின்
மிறத்தின்வயிரத்தொருவன்வந்தணுகுமுனைத்தக்
கறுத்தமணிகண்டர்கடவுட்சிலைகர்த்தால்
இறுத்தவனும்வெங்கணைதெரிந்தனனெதிர்ந்தான். (௧௱௧)

தீயுருவகால்விசையசெவ்வியனவெவ்வாய்
ஆயிரம்வடிக்கணையரக்கர்பதியெய்தான்
தீயுருவகால்விசையசெவ்வியனவெவ்வாய்
ஆயிரம்வடிக்கணையிராமனுமறுத்தான். (௧௱௨)

ஊழியெரியிற்கொடியபாய்பகழியொன்பான்
ஏழுலகினுக்குமொருநாயகனுமெய்தான்
சூழ்சுடர்வடிக்கணையவற்றெதிர்தொடுத்தே
ஆழிவரிவிற்கரனுமன்னவையறுத்தான். (௧௱௩)

கள்ளவமர்மாயவினைகல்வியின்விளைத்தான்
வள்ளலுருவைப்பகழிமாரியின்மறைத்தான்
உள்ளமுலைவுற்றமரரோடினசொரிந்தார்
வெள்ளெயிறிதழ்ப்பவளவீரனும்வெகுண்டான். (௧௱௪)

(வேறு.)

முடிப்பெனின்றொருமெய்க்கணையாலெனாத்
தொடுத்துநின்றுயர்தோளுறவாங்கினான்
பிடித்ததிண்சிலைபோகல்வானிட
இடிப்பினோசைபடக்கடிதிற்றதே. (௧௱௫)

வெற்றிகூறியவானவர்வீரன்வில்
இற்றபோதுத்துணுக்கமுற்றேங்கினார்
மற்றொர்வெஞ்சிலையின்மைமனக்கொளா
அற்றதாலெம்வலியெனவஞ்சினார். (௧௱௬)

என்னுமாத்திரத்தேந்தியகார்முகம்
சின்னமென்றுந்தனிமையுஞ்சிந்தியான்
மன்னர்மன்னவன்செம்மன்மரபினால்
பின்னுறத்தன்பெருங்கரநீட்டினான். (௧௱௭)

கண்டுநின்றுகருத்துணர்ந்தானென
அண்டர்நாதன்றடக்கையினத்துணை
பண்டுபோர்மழுவாளியைப்பண்பினால்
கொண்டவில்லைவருணன்கொடுத்தனன். (க௭௮)

கொடுத்தவில்லைக்கொண்டனிறத்தினான்
எடுத்துவாங்கிவலங்கொண்டிடக்கையில்
பிடித்தபோதுநெறிபிழைத்தோர்க்கெலாம்
துடித்தவாவிடக்கண்ணொடுதோளுமே. (க௭௯)

ஏற்றினானிமையாமுனெடுத்தது
கூற்றினாருங்குணிக்கக்குனித்தெதிர்
ஆற்றினானவனாழியந்தேர்சரம்
நூற்றினானுண்பொடிபடநூறினான். (க௮௰)

எந்திரத்தடந்தேரழிந்தானிழந்
தந்தரத்திடையார்த்தெழுந்தம்பெலாம்
சுந்தரத்தனிவில்லிதன்றோளினும்
மந்தரத்தின்மழையின்வழங்கினான். (க௮௧)

தாங்கிநின்றதயரதராமனும்
தூங்குதூணியிடைச்சுடுசெஞ்சரம்
வாங்குகின்றவலக்கையொர்வாளியால்
வீங்குதோளொடுபார்மிசைவீழ்த்தினான். (க௮௨)

வலக்கைவீழ்தலுமற்றைக்கையால்வெற்றி
உலக்கைவானத்துருமெனவோச்சினான்
இலக்குவற்குமுன்வந்தவிராமனும்
விலக்கினானொருவெங்கதிர்வாளியால். (க௮௩)

விராவருங்கடுவெள்ளெயிறிற்றபின்
அராவழன்றதனையதன்னாற்றலால்
மராமரங்கையில்வாங்கிவந்தெய்தினான்
இராமனுங்கொர்தனிக்கணையேவினான். (க௮௪)

வரமரக்கன்படைத்தவின்மாயையின்
உரமுடைத்தன்மையாலுலகேழையும்
பரமுருக்கியபாவத்தினால்வலக்
கரமெனக்கரன்கண்டமுற்றானரோ. (க௮௫)

ஆர்த்தெழுந்தனராடினர்பாடினர்
தூர்த்தமைந்தனர்வானவர்தூய்மலர்
தீர்த்தனும்பொலிந்தான்கதிரோன்றிசை
போர்த்தமெய்ப்பனிபோக்கியதென்னவே. (கஅசு)

முனிவர்வந்துமுறைமுறைமொய்ப்புற
இனியசிந்தையிராமனுமேகினான்
அணிகவெஞ்சமத்தாருயிர்போகத்தான்
தனியிருந்தவுடலன்னதையல்பால். (கஅஎ)

விண்ணினீங்கிவெய்யவர்மேனியில்
புண்ணினீரும்பொடிகளும்போயுக
அண்ணல்வீரனைத்தம்பியுமன்னமும்
கண்ணினீரினிற்பாதங்கழுவினார். (கஅஅ)

மூத்தமொன்றின்முடிந்தவர்மொய்புணீர்
நீத்தமோடிநெடுந்திசைநேருறக்
கோத்தவேலைக்குரலெனவானவர்
ஏத்தவீரனினிதிருந்தானரோ. (கஅகூ)

இங்குநின்றதுரைத்துமிராவணன்
தங்கைதன்கைவயிறுதகர்த்தனள்
கங்குலன்னகரனைத்தழீஇநெடும்
பொங்குவெங்குருதிப்புரண்டாளரோ. (ககூ0)

ஆக்கினேன்மனத்தாசையவ்வாசையென்
மூக்கினோடுமுடியமுடிந்திலேன்
வாக்கினாலுங்கள்வாழ்வையுநாளையும்
போக்கினேன்கொடியேனென்றுபோயினாள். (ககூக)

அலங்கல்வேற்கையரக்கரையாசறக்
குலங்கள்வேறுப்பான்குறித்தாளுயிர்
கலங்குசூறைவன்போர்நெடுங்காலென
இலங்கைமாநகர்நொய்திற்சென்றெய்தினாள். (ககூஉ)

சு-வது. கரன்வதைப்படலம்-முற்றிற்று. ஆக-திருவிருத்தம்-ருருசு.

கம்பநாட்டாழ்திருவடிகளேசரணம்.

## ௭-வது. மாரீசன்வதைப்படலம்.

இரைக்குநெடும்பனையரக்கனிறந்ததனைமறந்தனள்போலிராமன்றங்க
வரைப்புயத்தினிடைக்கிடந்தபேராசைமனங்கவற்றவாற்றாளாகித்
திரைப்பரவைப்பேர்கழித்திண்ணகரிற்கடிதோடிச்சீதைதன்மை
உரைப்பெனெனச்சூர்ப்பநகைவரவிருந்தானிருந்தபரிசுரைத்துமன்றே:

நிலையிலாவுலகினிடைநிற்பனவுநடப்பனவுநெறியினீந்த
மலரின்மேனான்முகற்கும்வகுப்பரிதுநுனிப்பவொருவரும்பிலாற்றல்
உலைவிலாவகையுழந்ததருமமெனநினைந்தவெலாமுதவுந்தச்சன்
புலனெலாந்தெரிப்பதொருபுனைமணிமண்டபமதனிற்பொலியுமன்றே

பண்டலங்குதிசைக்களிற்றின்பணைமருப்பினிணையொடியப்படர்ந்தபொ
ற்றோள்;விண்டலங்களுறவீங்கியோங்குதயமால்வரையின்விளங்கமீதில்
குண்டலங்கள்குலவரையவலம்வருவானிரவிகொழுங்கதிர்சூழ்கற்றை
மண்டலங்கள்பன்னிரண்டுநாலுந்தாய்ப் பொலிந்தெனவயங்குமன்றே·

புலியினதளுடையானும்பொன்னுடைபுனைந்தானும்பூவினானும்
நலியும்வலத்தாரல்லர்தேவரினிங்கியாவரினிநாட்டலாவார்
மெலியுமிடைத்தடிக்குமுலைவேயிளந்தோட்சேயரிக்கண்வென்றிமாதர்
வலியநெடும்புலவியினும்வணங்காதமகுடநிரைவயங்குமன்றே. (௪)

வாளுலாம்பூமணிகள்வயங்கொளியின்றொகைவழங்கவயிரக்குன்றத்
தோளெலாம்படிசுமந்தவிடவரவின்படநிரையிற்றோன்றத்தோன்ற
நாளெலாம்புடைதயங்கநாமநீரிலங்கையிற்றன்வாரியிட்ட
கோளெலாங்கிடந்தநெடுஞ்சிறையன்னநிறையாரங்குலவுமன்றே. (௫)

(வேறு.)

ஆய்வரும்பெருவலியரக்கராதியோர்
நாயகர்களிர்மணிமகுடநண்ணலால்
தேய்வுறத்தேய்வுறப்பெயர்ந்துசெஞ்சுடர்
ஆய்மணிப்பொலன்கழலடிநின்றார்ப்பவே. (௬)

மூவகையுலகினுமுதல்வர்முந்தையோர்
ஓவலருதவியபரிசினோங்கல்போல்
தேவருமவுணருமுதவினோர்திசைச்
தூவியநறுமலர்க்குப்பைதுன்னவே. (௭)

இன்னபோதிவ்வழிநோக்கமென்பதைத்
உன்னலர்காதலஞ்சுமந்தவுச்சியர்
மின்னவிர்மணிமுடிவிஞ்சைவேந்தர்கள்
துன்னினர்முறைமுறைதுறையிற்சுற்றவே. (௮)

மங்கையர் திறத்தொரு மாற்றங் கூறினும்
தங்களையா மெனத் தாழுஞ் சென்னியர்
அங்கையு முள்ளமுங் குவிந்த வாக்கையர்
இங்கவே றெனத் திறற் சித்தர் சேரவே. (௯)

அன்னவ னமைச்சனை நோக்கி யாண்டொரு
நன்மொழி பகரினு நடுங்குஞ் சிந்தையர்
என்னை கொல் பணியென விறைஞ்சு கின்றனர்
கின்னரர் பெரும்பயங் கிடந்த நெஞ்சினர். (௧0)

பிரகர நெடுந்திசைப் பெருந்தண் டேந்திய
கரதலத் தண்ணலைக் கண்ணி னோக்கிய
நரகினரா மென நடுங்கு நாவினர்
உரகர் கடம்மன முலைந்து சூழவே. (௧௧)

திசையுறு கரிகளைச் செற்றுத் தேவனும்
வசையுறக் கலையை மறித்து வானெலாம்
அசைவுறப் புரந்தர னடர்த்த தோள்களின்
இசையினைத் தும்புரு விசையி னேத்தவ. (௧௨)

சேணுயர் நெறிமுறை திறம்ப லின்றியே
பாணிகள் பணிசெயப் பழுதில் பண்ணிடை
வீணையி னரம்பிடை விளைத்த தேமறை
வாணியி னாரதன் செவியின் வார்க்கவே. (௧௩)

(வேறு.)

மேகமென் றுருத்தி கொண்டு விண்ணவர் தருவும் விஞ்சை
நாகமுஞ் சுசந்த தீந்தேம் புனலொடு மளாவி நவ்வித்
தோகையர் துகிலிற் றேயு மென்பதோர் துணுக்கத் தோடும்
சீகர மகர வேலைக் காவலன் சிந்துமன்றே. (௧௪)

நறைமலர்த் தாதுந் தேனு நளிர்நெடு மகுட கோடி
முறைமுறை யறையச் சிந்தி முரிந்துகு மணியு முத்தும்
தறையிடை யுகாத முன்னந் தாங்கினன் றழுவி வாங்கித்
துறைதொறுந் தொடர்ந்து நின்று சமீரணன் றுடைப்ப மன்றே. (௧௫)

(வேறு.)

மின்னுடை வேத்திரக் கையர் மெய்புகத்
துன்னெடுங் கஞ்சுகத் துகிலர் சேர்விலர்
பொன்னெடு வெள்ளியம் புரந்தரா தியர்க்
கின்னியன் முறைமுறை யிருக்கை யீயவே. (௧௬)

சூலமேமுதலியதுறந்துசுற்றிய
சேலையாற்சிறியவாய்புதைத்துச்செங்கையின்
தோலுடைநெடும்பணைதுவைக்குந்தோறெலாம்
காலன்வந்திசைக்குநாட்கடிகைகூறவே. (கஎ)

நயங்கிளர்நானநெய்ளரிவிந்தலில்
வியங்கருப்பூரமென்பஞ்சின்மீக்கொளீஇக்
கயங்களின்மரைமலர்க்காடுபூத்தென
வயங்கெரிக்கடவுளும்விளக்கமாட்டவே. (கஅ)

அதிசயமளிப்பதற்கருளறிந்துநற்
புதிதலர்கற்பகத்தருவும்பொய்யிலாக்
கதிர்நெடுமணிகளுங்கறவையான்களும்
நிதிகளுமுறைமுறைநின்றுநீட்டவே. (கசு)

குண்டலமுதலியகுலங்கொள்பேரணி
மண்டியபேரொளிவயங்கவீசலால்
உண்டுகொலிரவினியுலகமேழினும்
எண்டிசைமருங்கினுமிருளின்றென்னவே. (உ0)

கங்கையேமுதலியதீர்த்தகன்னியர்
கொங்கைகள்சுமந்திடைகொடியிறெல்கிடச்
செங்கையினரிசியுமலருஞ்சிந்தினர்
மங்கலமுறைமுறைகூறிவாழ்த்தவே. (உக)

ஊருவிற்றோன்றியவுயிர்பெய்யோவியம்
காரினிற்செருக்கியகலாபமஞ்ஞைபோல்
வார்விசிக்கருவியோர்வகுத்தபாணியின்
நாரியருநடநடிப்பநோக்கியே (உஉ)

இருந்தனனுலகங்களிரண்டுமொன்றுந்தன்
அருந்தவமுடைமையினளவிலாற்றலின்
பொருந்தியவிராவணன்புருவக்கார்முகக்
கருந்தடங்கண்ணியர்கண்ணின்வெள்ளத்தே. (உங)

தங்கையுமவ்வழித்தலையிற்றாங்கிய
செங்கையள்சோரியின்றாரைசேர்ந்திழி
கொங்கையள்மூக்கினள்குழையில்காதினள்
மங்குலிற்றெவிபடத்திறந்தவாயினள். (உச)

முடியிடைவாயிலின்முறையிட்டார்கலிக்
கடையுகக்கடலொலிகாட்டக்காந்துவாள்
குடதிசைச்செக்கரிற்சேர்ந்தகூந்தலாள்
வடதிசைவாயிலின்வந்துதோன்றினாள். (௨௫)

தோன்றலுந்தொன்னகரரக்கர்தோகையர்
என்றெதிர்வயிறலைத்திரங்கியேங்கினார்
மூன்றுலகுடையவன்றங்கைமூக்கிலள்
தான்றனியவள்வரத்தரிக்கவல்லமோ. (௨௬)

பொருக்கெனநோக்கினர்புகல்வதோர்கிலர்
அரக்கருமிமைத்தனரசனியாமெனக்
கரத்தொடுகரங்களைப்புடைத்துக்கண்களை
நெருப்பெழவிழித்துவாய்மடித்துநிற்கின்றார் (௨௭)

இந்திரன்மேலதோவுலகமீன்றபேர்
அந்தணன்மேலதோவாழியானதோ
சந்திரமௌலிபாற்றங்குமேகொலோ
அந்தரமென்றுநின்றழல்கின்றார்சிலர். (௨௮)

செப்புறற்குரியவர்தெவ்வர்யாருளர்
முப்புறத்துலகமுமடங்கமூடிய
இப்புறத்தண்டத்தோர்க்கியைவதன்றிது
அப்புறத்தண்டத்தோராமென்றார்சிலர். (௨௯)

என்னையேயிராவணன்றங்கையென்றபின்
அன்னையேயென்றடிவணங்கலன்றியே
உன்னவேயொண்ணுமோவொருவராலிவள்
தன்னையேபரிந்தனடாவென்றார்சிலர். (௩௰)

போரிலான்புரந்தரனேவல்பூண்டனன்
ஆருலாநேமியானாற்றலேற்றுப்போய்
நீரினானெருப்பினான்பொருப்பினானினி
ஆர்கொலாமீதெனவறைகின்றார்சிலர். (௩௧)

சொற்பிறந்தார்க்கிது துணியவொண்ணுமே
இற்பிறந்தார்தமக்கியைவசெய்திலஃ
கற்பிறந்தாளனக்கரன்கொலாமிவள்
பொற்பிறந்தாக்கினன்புகன்றென்றார்சிலர். (௩௨)

தத்துறுசிந்தையர்தளருந்தேவரில்
பித்துறவல்லரோபிழைப்பில்சூழ்ச்சியார்
முத்திறத்துலகையுமுடிக்கவெண்ணுவார்
இத்திறம்புணர்த்தனரென்கின்றார்சிலர். (௫௫)

இனியொருகற்பமுண்டென்னினன்றியே
வுனைகழல்வயங்குவாள்வீரர்வல்லரோ
பனிவருங்கானிடைப்பழிப்பிலேனுடை
முனிவர்வெகுளியின்முடிபென்றார்சிலர். (௫௪)

நரையறுதிருநகர்க்கருங்கணங்கைமார்
நிரைவளைத்தளிர்க்கைநகணெரித்துநோக்கினர்
பிரையுறுபாலெனநிலையிற்பின்றிய
உண்ரயினரொருவர்முன்னொருவரோடினார். (௫௫)

முழவினில்வீணையின்முரலியாழினில்
தழுவியகுழலினிற்சங்கிற்றாரையில்
ஏழுகுரலின்றியேயென்றுமில்லதோர்
ஏழுகுரல்பிறந்ததவ்விலங்கைக்கன்றரோ. (௫௬)

கள்ளுடைவள்ளமுங்களித்ததும்பியும்
உள்ளமுமொருவழிக்கிடக்கவோடினார்
வெள்ளமுநாணுறவிரிந்தகண்ணினார்
தள்ளுறுமருங்கினர்தழீஇக்கொண்டேகினார். (௫௭)

ஏந்தகவுழவரைநாட்டுந்தண்டத்தர்
காந்தியமனத்தினர்புலவிகைம்மிகச்
சேந்தகணைநிகழுஞ்செவந்துநீருக
வேந்தனுக்கிளையவன்றாளின்வீழ்ந்தனர். (௫௮)

பொற்றலைமரகதப்பூகநேர்வுறச்
சுற்றியமணிவடந்தூங்கவூசலின்
முற்றியவாடலின்முனிவுழந்தேங்கினார்
சிற்றிடையலமரத்தெருவுசேர்கின்றார். (௫௯)

எழுதினமலையெனவெழுந்ததோள்களைத்
தழுவியவளைத்தளிர்நெகிழத்தாமரை
முழுமுகத்திருகயன்முத்தினலிகள்
பொழிதரக்கிலருளர்பொருமிவிம்முவார். (௬௰)

( வேறு. )

நெய்ந்நிலையவேலர்ச்சனேருநன்மையில்லான்
இந்நிலையுணர்ந்தபொழுதெந்நிலையதென்று
மைந்நிலைநெடுங்கண்மழைவாணிலையதாகப்
பொய்ந்நிலைமருங்கினர்புலம்பினர்புரண்டார். (சக)

மனந்தலைவருங்கண்வரின்சுவைமறந்தார்
கனந்தலைவருங்குழலொசிந்துகலைசோர
நனந்தலையகொங்கைக்கடதும்பிடநடந்தார்
ஜனந்தரிளம்பங்கையரழுங்கிபயர்கின்றார்: (சஉ)

அங்கையினரன்கைலைகொண்டதிறலையன்
தங்கைநிலையிங்கிதுகொலென்றுதளர்கின்றார்
கொங்கையிணைசெங்கையின்மலைந்துகுலைகேரணத்
மங்கையர்கணங்கையெதிர்வந்துவிழுகின்றார். (சங)

இலங்கையில்விலங்குமின்னவயெய்தவிலவென்றும்
வலங்கையிலிலங்குமயின்மன்னன்றுளனென்னே
நலங்கையிகன்றதுகொனம்பியென்னநைந்தார்
கலங்கலினிலங்கணிணைவாரிகலுழ்கின்றார்: (சச)

என்றினையவன்றுயரிலங்கைநகரெய்த
நின்றவரிருந்தவரொடோடுநெறிதேடக்
குன்றினடிவந்துபடிகொண்டலென்மன்னன்
பொன்றினரிகருங்கழல்விழுந்தனள்புரண்டாள்: (சரு)

மூடினிருட்படலைமூவுலகுமுற்றச்
சேடனும்வெருக்கொடுசிரக்குவைநெளித்தான்
ஆடின்குலக்கிரியருக்கனுமயிர்த்தான்
ஓடின்திசைக்கரிகளும்பருமொளித்தார்: (சசா)

விரிந்தவலயங்கண்மிடைதோள்படரமீதிட்
டெரிந்தநயனங்களெயிறின்புறமெரிப்ப
நெரிந்தபுருவங்கணிடைநெற்றியினைமுற்றத்
திரிந்தபுவனங்கள்வினைதேவருமயர்த்தார்: (சஎ)

தென்றிசைநமன்றனொடுதேவர்குலமெல்லாம்
இன்றிறுதிவந்ததுநமக்கெனவிருந்த
நின்றுயிர்நடுங்கியுடல்விம்மிநிலைநில்லார்
ஒன்றுமுரையாடலிலரும்பரிதெடிம்பர். (சஅ)

மடித்தபிலவாய்கடொறும்வந்துபுகைமுந்தத்
துடித்ததொடர்மீசைகள்சுறுக்கொளவுயிர்ப்பக்
கடித்தகதிர்வாளெயிறுமின்கஞலமேகத்
திடித்தவுருமொத்தறியாவர்செயலென்றான். (௪௯)

கானிடையடைந்துபுவிகாவல்புரிகின்றார்
மீனுடைநெடுங்கொடியினோனையர்மேல்கீழ்
ஊனுடையுடம்புடைமையோருவமையொவ்வா
மானிடர்தடிந்தனர்கள்வாளுருவியென்றாள். (௫௦)

செய்தனர்கண்மானுடரெனத்திசையனைத்தும்
எய்தநகைவந்தெரிசிந்தினகணெல்லாம்
நொய்தவர்வலித்தொழினுவன்றமொழியொன்றே
பொய்தவிர்பயத்தையொழிபுக்கபுகலென்றான். (௫௧)

மன்மதனையொப்பர்மணிமேனிவடமேருத்
தன்னெழிலழிப்பர்திரடோளின்வலிதன்னால்
என்னதனையிப்பொழுதிசைப்பதுலகேழின்
நன்மதனழிப்பரொருமைப்பினனிவில்லான். (௫௨)

வந்தனைமுனித்தலைவர்பாலுடையர்வானத்
திந்துவின்முகத்தரொறிநீரிலெழுநாளக்
கந்தமலரைப்பொருவுகண்ணர்கழல்கையர்
அந்தமிறவத்தொழிலராரவனையொப்பார். (௫௩)

வற்கலையர்வார்கழலர்மார்பினணிநூலர்
விற்கயர்வேதமுறைநாவர்நனிமெய்யர்
உற்கலையருன்னையொர்துகட்டனையுமுன்னார்
சொற்கலையெனத்தொலைவிறூணிகள்சுமந்தார். (௫௪)

ஆறுபுலனஞ்சினமாக்களையெனச்சென்
றேறுநெறியந்தணரியம்பவுலகெல்லாம்
வேறுமெனுநுங்கள்குலம்வேரொடுமடங்கக்
கோறுமெனமுந்தையொருசூளுறவுகொண்டார். (௫௫)

மாசருளரோயிருவரோருலகின்வாழ்வார்
வீரருளரோயவரின்வில்லதனில்வல்லார்
ஆரொருவரன்னவரையொப்பவர்களேயா
ஓரொருவரோயிறைவர்மூவரையுமொப்பார். (௫௬)

தராவலயநேமியுழவன்றயரதப்பேர்ப்
பராவருநலத்தொருவன்மைந்தர்பழியில்லார்
விராவருவனத்தவன்விளம்பவுறைகின்றார்
இராமனுமிலக்குவனுமென்பர்பெயரொன்றாள். (௫௭)

மருந்தனையதங்கைமணிநாசிவடிவாளால்
அரிந்தவருமானிடரரிந்துமுயிர்வாழ்வார்
விருந்தனையவாளொடும்விழித்திறையும்வெள்கா
திருந்தனளிராவணனுமின்னுயிர்கொடின்னும். (௫௮)

கொற்றமதுமுற்றிவலியாலரசுகொண்டேன்
உற்றபயன்யீற்றிதுவொல்காமுறையிறந்தேன்
முற்றவுலகத்துமுதல்வீரர்முடியெல்லாம்
அற்றபொழுதத்திதுபொருந்துமெனலாமே. (௫௯)

மூளுமுளதாயபழியென்வயின்முடித்தோர்
ஆளுமுளவாமவர்தாருயிருமுண்டாம்
வாளுமுளதோ,விடமுண்டவன்வழங்கும்
நாளுமுளதோளுமுளநானுமுளனன்றே. (௬0)

புத்துறவுறப்பழிபுகுந்ததெனநாணித்
தத்துறுவதென்னைமனனேதளரலம்மா
எத்துயருனக்குளதினிப்பழிசுமக்கப்
பத்துளதலைப்பகுதிதோள்கள்பலவன்றே. (௬௧)

என்றுரைசெயாநகைசெயாவெரிவிழிப்பான்
வன்றுணையிலாவிருவர்மானுடரைவாளால்
கொன்றிலர்களாநெடியகுன்றுடையகானில்
நின்றகரனேமுதலினோர்நிருதரொன்றான். (௬௨)

(வேறு.)

அற்றவனுரைத்தலோடுமழுதிழியருவிக்கண்ணள்
எற்றியவயிற்றள்பாரினிடைவிழுந்தேங்குகின்றாள்
சுற்றமுந்தொலைந்ததையநொய்தெனச்சுமந்தகையள்
உற்றதுதெரியும்வண்ணமொருவகையுரைக்கலுற்றாள். (௬௩)

சொல்லென்றன்வாயிற்கேட்டார்தொடர்ந்தெழுசேனையோடும்
கல்லென்றவொலியிற்சென்றார்கரன்முதற்காளைவீரர்
எல்லொன்றுகமலச்செங்கணிராமனென்றிசைத்தவேந்தல்
வில்லொன்றிற்கடிகைமூன்றிலேறினர்விண்ணிலென்றாள். (௬௪)

தாருடைத்தானையோடுந்தம்பியர்தமியன்செய்த
போரிடைமடிந்தாரொன்றவுரைசெவிபுகாதமுன்னம்
காரிடையுருமின்மாரிகனலொடுபிறக்குமாபோல்
நீரொடுநெருப்புக்கான்றகினைநெடுங்கண்களெல்லாம். (௬௫)

ஆயிடையெழுந்தசீற்றத்தழுந்தியதுன்பமாழித்
தீயிடையுருக்குநெய்யிற்சீற்றத்திற்கூற்றஞ்செய்ய
நீயிடையிழைத்தகுற்றமென்னைகொலின்னையின்னே
வாயிடையிதழுழுக்கும்வலிந்தவர்கொய்யவென்றான். (௬௬)

என்வயினுற்றகுற்றம்யாவர்க்குமெழுதொணாத
தன்மையனிராமனோடுந்தாமரைதவிரப்போந்தாள்
மின்வயின்மருங்குல்கொண்டாள் வேய்வயின்மென்றோள்கொண்டாள்
பொன்வயின்மேனிகொண்டாள்பொருட்டினாற்புகுந்ததென்றாள் (௬௭)

ஆரவளென்னலோடுமரக்கியுமையவாழ்ந்து
தேரவடிரண்டகொங்கைசெம்பொன்செய்குலிகச்செப்புப்
பாரவள்பாதந்தீண்டப்பாக்கியம்படைத்ததம்மா
பேரவள்சீதையென்றுவடிவெலாம்பேசலுற்றாள். (௬௮)

காமரமுரலும்பாடல்கள்ளெனக்கனிந்தவின்சொற்
றேமலர்நிரந்தகூந்தற்றேவர்க்குமணங்காமென்னத்
தாமரையிருந்ததையல்சேடியாந்தரமுமல்லள்
யாமுரைவழங்குமென்பதேழைமைப்பாலதன்றே. (௬௯)

மஞ்சொக்குமளகவோதிமழையொக்கும்வடித்தகூந்தல்
பஞ்சொக்குமடிகள்செய்யபவளத்தின்விரல்களைய
அஞ்சொற்களமுதிலள்ளிக்கொண்டவள்வதனமைதீர்
கஞ்சத்தினளவிற்றேனுங்கடலினும்பெரியகண்கள். (௭0)

ஈசனார்கண்ணின்வெந்தானென்னுமிதிழுதைச்சொல்லிவ்
வாசநாறோதியாளைக்கண்டனன்வல்லவாற்றால்
பேசலாந்தகைமைத்தல்லாப்பெரும்பிணிபிணிப்பநீண்ட
ஆசையாலழிந்துதேய்ந்தானநங்கனவ்வுருவமம்மா. (௭௧)

தெவ்வுலகத்துங்காண்டிசிரத்தினிற்பணத்தினோர்கள்
அவ்வுலகத்துங்காண்டியலைக்கடலுலகிற்காண்டி
வெவ்வுலையுற்றவேலைவாளினைவென்றகண்ணாள்
இல்வுலகத்தாளங்கம்பகவர்க்குமெழுதொணாதாள். (௭௨)

தோளையேசொல்லுகேனோசுடர்முகத்துலவுகின்ற
வாளையேசொல்லுகேனோவல்லவைவழுத்துகேனோ
மீளவுந்திகைப்பதல்லாற்றனித்தனிவிளம்பலாற்றேன்
நாளையேகாண்டியன்றோநானுனக்குரைப்பதென்னோ. (௭௩)

வில்லொக்குநுதலென்றாலும்வேலொக்கும்விழியென்றாலும்
பல்லொக்குமுத்தென்றாலும்பவளத்தையிதழென்றாலும்
சொல்லொக்கும்பொருளொவ்வாவாற்சொல்லலாமுவமையுண்டோ
நெல்லொக்கும்புல்லென்றாலுநேருரைத்தாகவற்றே. (௭௪)

இந்திரன்சசியைப்பெற்றானிருமூன்றுவதனத்தோன்றன்
தந்தையுமுமையைப்பெற்றான்றாமரைச்செங்கணானும்
செந்திருமகளைப்பெற்றான்சீதையைப்பெற்றாய்நீயும்
அந்தரம்பார்க்கினன்மையவர்க்கில்லையுனக்கேயையா. (௭௫)

பாகத்திலொருவன்வைத்தான்பங்கயத்திருந்தபொன்னை
ஆகத்திலொருவன்வைத்தானந்தணனாவில்வைத்தான்
மேகத்தின்மின்னைமுன்னேவென்றநுண்ணிடையையுநீயும்
மாகத்தோள்வீரபெற்றாலெங்ஙனம்வைத்துவாழ்தி. (௭௬)

பிள்ளைபோல்பேச்சினாளைப்பெற்றபின்பிழைக்கலாற்றாய்
கொள்ளைபோகின்றசெல்வமவளுக்கேகொடுத்தியைய
வள்ளலேயுனக்குநல்லேன்மற்றுநின்மனையில்வாழும்
கிள்ளைபோன்மொழியார்க்கெல்லாங்கேடுசூழ்கின்றேனன்றே. (௭௭)

தேர்தந்தவல்குற்சீதைதேவர்தமுலகினிம்பர்
வார்தந்தகொங்கையார்தம்வயிறுதந்தாளுமல்லள்
தார்தந்தகமலத்தாளைத்தருக்கினர்கடையச்சங்க
நீர்தந்ததனைவெல்வானிலந்தந்துநிரம்பிற்றன்றே. (௭௮)

மீன்கொண்டோடும்வேலைமேகலையுலகமேத்தத்
தேன்கொண்டோடுங்கூந்தற்சிற்றிடைச்சீதையென்னும்
மான்கொண்டோடுநீயுன்வாள்வலியுலகங்காண
யான்கொண்டோடும்வண்ணமிராமனைத்தருதியென்பால். (௭௯)

தருவதுவிதியேயென்றாற்றவம்பெரிதுடையரோனும்
வருவதுவருநாளன்றிவந்துகைகூடவற்றோ
ஒருபதுமுகமுங்கண்ணுமுருவமுமார்புந்தோள்கள்
இருபதும்படைத்தசெல்வமெய்துவதினிநீயெந்தாய். (௮௰)

இன்னவடன்னையுன்பாலுய்ப்பலென்றெடுக்கலுற்ற
என்னையவ்விராமன்றம்பியிடைபுகுந்திலங்குவாளால்.
முன்னைமூக்கரிந்துவிட்டான்முடிந்ததென்வாழ்வுமுன்னின்
சொன்னபினுயிரைநீப்பான்றுணிந்தனெனென்னச்சொன்னாள். (௮௧)

கோபமுமறனுமானக்கொதிப்புமென்றினையவெல்லாம்
பாபநின்றிடத்துநில்லாப்பெற்றிபோற்பற்றுவிட்ட
தீபமொன்றொன்றையுற்றாலென்னலாஞ்செயலிற்புக்க
தாபமுங்காமநோயுமாருயிர்கலந்தவன்றே. (௮௨)

கரனையுமறந்தான்றங்கைமூக்கினைக்கடிந்துநின்றான்
உரனையுமறந்தானுற்றபழியையுமறந்தான்வெற்றி
அரனையுங்கொண்டகாமனம்பினான்முன்னைப்பெற்ற
வரனையுமறந்தான்கேட்டமங்கையைமறந்திலாதான். (௮௩)

சிற்றிடைச்சீதையென்னுநாமமுஞ்சிந்தைதானும்
உற்றிரண்டொன்றாய்நின்றாலொன்றொழித்தொன்றையுன்ன
மற்றொருமனமுமுண்டோமறக்கலாம்வழிமற்றியாதோ
கற்றனர்ஞானமின்றேற்காமத்தைக்கடக்கலாமோ. (௮௪)

மயிலுடைச்சாயலாளைவஞ்சியாமுன்னநீண்ட
எயிலுடையிலங்கைநாதனிதயமாஞ்சிறையில்வைத்தான்
அயிலுடையரக்கனுள்ளமவ்வழிமெல்லமெல்ல
வெயிலுடைநாளிலுற்றவெண்ணெய்போல்வெதும்பிற்றன்றே. ()

விதியதுவலியினாலுமேலுளவினையினாலும்
பதியுறுகேடுவந்துகுறுகியபயத்தினாலும்
கதியுறுபொறியின்வெய்யகாமநோய்கல்விநோக்கா
மதியிலிமறையச்செய்ததீமைபோல்வளர்ந்ததன்றே. (௮௬)

பொன்மயமானநங்கைமனம்புகப்புன்மைபூண்ட
தன்மையோவரக்கன்றன்னையயர்த்ததோர்தகைமையாலோ
மன்மதன்வாளிதூவிவதோர்வல்த்தனான்
வன்மையைமாற்றுமாற்றல்காமத்தேவதிந்ததன்றே. (௮௭)

எழுந்தனனிருக்கைநின்றுண்டேழுலகத்துளோரும்
மொழிந்தனராசியோசைமுழங்கினசங்கமெங்கும்
பொழிந்தனபூவின்மாரிபோயினர்புறத்தோரெல்லாம்
அழிந்தழிசிந்தையோடுமாடக்கோயில்புக்கான். (௮௮)

பூவினால்வேய்ந்துசெய்தபொங்குபேரமளிகொங்கைத்
தேவிமார்குழுவுநீங்கச்சேர்ந்தனன்சேர்தலோடும்
நாவினாறுதிரவ்விரயனமுங்குயமும்புக்குப்
பாவியாக்கொடுத்தவெம்மைபயப்பயப்பரந்ததன்றே. (௮௯)

(வேறு.)

நூக்கலாகலாதகாதனூறுநூறுகோடியாப்
பூக்கவாசவாடைவீசசீதநீர்பொதிந்தமென்
சேக்கைவீகரிந்துதிக்கயங்களெட்டைவென்றதோள்
ஆக்கைதீயவுள்ளநையவாவிவேவதாயினான். (௯0)

தாதுகொண்டசீதமேவுசந்துசந்தமென்றளிர்
போதுகொண்டடுத்தபோதுபொங்குதீமருந்தினால்
வேதுகொண்டதென்னமேனிவெந்துவெந்துவிம்முதீ
ஊதுவன்றுருத்திபோலுயிர்த்துயிர்த்துயங்கினான். (௯௧)

தாவியாதுதீதெனாதுதையலாளைமெய்யுறப்
பாவியாதபோதிலாதபாவிமாழைபானல்வேல்
காவியானகண்ணிமேனிகாணமூளுமாசையால்
ஆவிசாலநொந்துநொந்தழுங்குவானுமாயினான். (௯௨)

பரங்கிடந்தமாதிரம்பரித்தபாழியானையின்
கரங்கிடந்தகொம்பொடிந்திரங்கவென்றகாவலன்
மரங்குடைந்ததும்பிபோலநங்கன்வாளிவந்துவந்
துரங்குடைந்துநொந்துநொந்துளைந்துளைந்தொதுங்கினான். ()

கொன்றைதுன்றுகோதையோடொர்கொம்புவந்தெனெஞ்சிடை
நின்றதுண்டுகண்டதென்றழிந்தழுங்குநீர்மையான்
மன்றறங்கலங்கன்மாரன்வாளிபோலமல்லிகைத்
தென்றல்வந்தெதிர்ந்தபோதுசீறுவானுமாயினான். (௯௪)

அன்னகாலையங்குநின்றெழுந்தழுங்குசிந்தையான்
இன்னவாறுசெய்வெனென்றொரெண்ணிலானிரங்குவான்
பன்னுகோடிதீபமாலைபாலைபாழ்பழித்தசொற்
பொன்னனொடுக்கவங்கொர்சோலையூடுபோயினான். (௯௫)

(வேறு.)

மாணிக்கம்பனசம்வாழைமரகதம்வயிரந்தேமா
ஆணிப்பொன்வேங்கைகோங்கமரவிந்தராகம்பூகம்
சேணுயக்குநீலஞ்சாலங்குருவிந்தங்கென்னம்வெள்ளி
பாணித்தென்பளிங்குநற்கம்பாடலம்பவளமன்றே. (௯௬)

வானுறவிவந்தசெங்கேழ்மணிமரந்துவன்றிவான
மீனொடுமலர்கடம்பின்வேற்றுமைதெரிதறேற்று
தேனுகுசோலைநாப்பட்செம்பொன்மண்டபத்துளாங்கோர்
பானிறவமளிசேர்ந்தான்பையுளுற்றுயங்கிநைவான். (கூஎ)

கனிகளின்மலரின்வந்தகள்ளுண்டுகளிகளன்ன
வனிதையர்மழலையின்சொற்கிள்ளையுங்குயிலும்வண்டும்
இனியனமிழற்றுகின்றவியாவையுமிலங்கைவேந்தன்
முனியுமென்றவிந்தவாயமூங்கையர்போன்றவன்றே; (கூஅ)

பருவத்தால்வாடைவந்தபசும்பனியநங்கபாணம்
உருவிப்புக்கொளித்தபுண்ணிற்குளித்தலுமுளைந்துவிம்மி
இருதுத்தான்யாதடாவென்றியம்பினனியம்பலோடும்
வெருவிப்போய்ச்சிசிரநீங்கிவேனில்வந்திறுத்ததன்றே. (கூகூ)

வன்பணைமரமுந்தீய மலைகளுங்குளிரவாழும்
மென்பனியெரிந்ததென்றால் வேனலைவிளம்பலாமோ
அன்பெனும்விடமுண்டானை யாற்றலாமருந்துமுண்டோ
இன்பமுந்துன்பந்தானு முள்ளத்தோடியைந்தவன்றே. (க00)

மாதிரத்திறுதிகாறுந் தன்மனத்தெழுந்தமையல்
வேதனைவெப்பஞ்செய்ய வேனலும்வெதுப்புங்காலை
யாதிதிங்கிதனின்முன்னைச் சிசிரநன்றிதனைநீக்கிக்
கூதிராம்பருவந்தன்னைக் கொணருதிர்விரைவினென்றான். (க0க)

கூதிர்வந்தடைந்தகாலை கொதித்தனகுவவுத்திண்டோள்
ஓதமுஞ்சுடுமோமுன்னைச் சிசிரமேகாணிதென்றான்
ஆதியாயஞ்சுமன்றே யருளலதியற்றவென்ன
யாதுமிங்கிருதுவாகா தியாவையுமகற்றுமென்றான். (க0உ)

என்னலுமிருதுவெல்லா மேகினயாவுந்தத்தம்
பன்னரும்பருவஞ்செய்யா யோகிபோற்பற்றுநீத்த
பின்னருமுலகமெல்லாம் பிணிமுதற்பாசம்வீசித்
துன்னருந்தவத்தினெய்துந் துறக்கம்போற்றோன்றிற்றன்றே.()

கூலத்தாருலகமெல்லாங் குளிர்ப்பொடுவெதுப்புநீங்க
நீலத்தாரரக்கன்மேனி நெய்யின்றியெரிந்ததன்றே
காலத்தால்வருவதொன்றோ காவத்தாற்கனலும்வெந்தீச்
சீலந்தாலவிவதன்றிச் செய்யத்தானுளதுண்டோ. (க0ச)

நாரமுண்டெழுந்தமேகந் தாமரைவளையநாறு
சாரமுண்டிருந்தசீத சந்தனத்தளிர்மென்றேதோ
டாரமுண்டிருந்துஞ்சிந்தை யயர்கின்றனையனின்றனை
ஈரமுண்டென்பரோடி யிந்துவைக்கொணர்மினென்றான். (க0ரு)

வெஞ்சினத்தரக்கனண்ட வியனகர்மீதுபோதும்
நெஞ்சிலனொதுங்குகின்ற நிறைமதியோனைநோக்கி
அஞ்சலைவருதிநின்னை யழைத்தனனரசனென்னச்
சஞ்சலந்துறந்துதானச் சந்திரனுதிக்கலுற்றான். (க0சா)

அயிருறக்கலந்தநன்னீ ராழிநின்றாழிநீத்துச்
செயிருறக்கலந்ததாண்டோர் தேய்வவந்துற்றபோது
வயிரமுற்றுடைந்துசென்றோர் வலியவற்செல்லுமாபோல்
உயிர்தெறக்காலனென்பா னொத்தனனுதயஞ்செய்தான். (கஎ0)

பாரவருகதிர்களெங்கும் பரப்பிமீப்படர்ந்துவானில்
தாரதலத்தெவரும்பேண வவனையேசலிக்குநீரால்
அராவணைதுயிலுமண்ணல் காலமோர்ந்தற்றநோக்கி
இராவணனுயிர்மேலுய்த்த திகிரியுமென்னலானான். (க0அ)

அருகுறுபாலின்வேலை யமுதெலாமளைந்துவாரிப்
பருகினன்பரந்துபாய்ந்த நிலாச்சுடர்ப்பனிமென்கற்றை
நெரியுறுபுருவச்செங்க ணரக்கற்குநெருப்பினைப்பண்
உருகியவெள்ளியள்ளி வீசினலொத்ததன்றே. (க0கூ)

மின்னிலந்திரிந்ததன்ன விழுநிலாமிதிலைசூழ்ந்த
சென்னலங்கழனிநாடன் றிருமகள்செவ்விகேளா
நன்னலந்தொலைந்துசோரு மரக்கனைநாளுந்தோலாத்
துன்னலனொருவன்பெற்ற புகழெனச்சுட்டதன்றே. (கக0)

கருங்கழற்காலனஞ்சுங் காவலன்கருத்துநோக்கித்
தருங்கதிர்ச்சீதயாக்கைச் சந்திரற்றருதிரென்ன
முருங்கியதணலின்மூரி விடத்திளைமுகக்குஞ்சீற்றத்
தருங்கதிருக்கன்றன்னை யாரழைத்தீர்களென்றான். (ககக)

அவ்வழிச்சிலதரஞ்சி யாதியாயருளில்லாரை
இவ்வழித்தருதுமென்ப தியம்பலாமியல்பிற்றன்றால்
செவ்வழிக்கதிரோனென்றுந் தேரின்மேலன்றிவாரான்
வெவ்வழித்தெனினுந்திங்கள் விமானத்தின்மேலதென்றார். ()

(வேறு.)

பணந்தாழல்குற்பனிமொழியார்க்கன்புபட்டார்படுங்காமக்
குணந்தான்றன்னமறியாதான்கொதியாநின்றான்மதியாலே
தணந்தாமனாயின்றனிப்பகைகளுனென்னுந்தன்மையொருதானே
உணர்ந்தானுணர்வுற்றவன்மேலிட்டுயிர்தந்துய்க்கவுணாசெய்வான். ()

தேயாநின்றாய்மெய்வெருந்தா யுள்ளங்கறுத்தாய்நிலைதிரிந்து
காயாநின்றாயொருநீயுங்கண்டார்சொல்லக்கேட்டாயோ
பாயாநின்றமலர்வாளி பறியாநின்றாரின்மையால்
ஓயாநின்றேனுயிர்காத்தற் குரியார்யாவருடுபதியே. (ககச)

ஆற்றாகிற்றம்மைக்கொண்டடங்காரோவென்னுருயிர்க்குக்
கூற்றாய்நின்றகுலச்சனகிகுவளைமலர்ந்ததாமரைக்குத்
தோற்றாயதனுனகங்கரிந்தாய்மெலிந்தாய்வெதும்பத்தொடங்கினாய்
மாற்றார்செல்வங்கண்டழிந்தால்வெற்றியாகவற்றாமோ. (ககரு)

என்னப்பன்னியிடருழவாவிரவோடிவனைக்கொண்டேற்றி
முன்னைப்பகலும்பகலோனும் வருகவென்றான்மொழியாமுன்
உன்னற்கரியவுடுபதியுமிரவுமொழிந்தவொருநொடியில்
பன்னற்கரியபகலவனும் பகலும்வந்துபரந்தவால். (ககசு)

இருக்கின்மொழியாரெரிமுகத்தி னீந்தநெய்யினவிர்செம்பொன்
உருக்கியனையகதிர்பாய வனல்போல்விரிந்ததுயர்கமலம்
அருக்கனெய்தவமைந்தடங்கிவாழாவடாதபொருளெய்திச்
செருக்கியிடையேதிருவிழந்தசிறியோர்போன்றசேதாம்பல். (ககஎ)

நாணிநின்றவொளிமழுங்கிநடுங்காநின்றவுடம்பினனாய்ச்
சேணினின்றுபுறஞ்சாய்ந்துகங்குற்றாம்பின்செல்லப்
பூணின்வெய்யோனொருதிசையேபுகுதப்போவான்புகழ்வேந்தர்
ஆணைசெல்லநிலையழிந்தவரசர்போன்றானல்லாண்டான். (ககஅ)

(வேறு.)

மணந்தபேரன்பரைமலரின்சேக்கையுள்
புணர்ந்தவரிடைபொருவெகுளிபொங்கலால்
கணங்குழைமகளிர்கள்கங்குனீங்கிட
உணர்ந்திலர்கனவினுமூடறீர்ந்திலர். (கககூ)

தள்ளுறுமுயிரினர்தலைவர்நீங்கலால்
நள்ளிரவிடையுறுநடுக்கநீங்கலர்
கொள்ளையினலர்தருகுவளைநாண்மலர்
கள்ளுகுவனவெனவுக்கழுங்கண்ணினர். (கஉ0(

அணைமலர்ச்சேக்கையுளூடறீர்ந்தனர்
பணைகளைத்தழுவியபவளவல்லிபோல்
இணைமலர்க்கைகளினிறுகவின்னுயிர்த்
துணைவரைத்தழுவினர்துயில்கின்றார்சிலர். (௧௨௧)

அளியினங்கடொறுமார்ப்பவாய்க்கதிர்
ஒளிபடவுணர்ந்திலவுறங்குகின்றன
தெளிவிலவின்றுயில்விளையுஞ்சேக்கையுள்
களிகளைநிகர்த்தனகளிநல்யானையே. (௧௨௨)

விரிந்துறைதுறைதொறும்விளக்கம்பாவையும்
எரிந்திழுதகலவொளியிழந்தன
அருந்துறைநிரம்பியவுயிரினன்பரைப்
பிரிந்துறைதருங்குலப்பேதைமாரினே. (௧௨௩)

புனைந்திதழுரிஞ்சுறுபொழுதுபுல்லியும்
வனைந்திலவைகறைமலருமம்மலர்
நனைந்தலையமளியிற்றுயிலுநங்கைமார்
அனந்தரினெடுங்கணோடொத்தவாமரோ. (௧௨௪)

இச்சையிற்றுயில்வதற்கியாவர்கண்களும்
நிச்சயம்பகலுந்தமிமைகணீக்கலர்
பிச்சையுமிடுதுமென்றுணர்வுபேணலர்
வச்சையர்நெடுமனைவாயிலானவே. (௧௨௫)

நஞ்சுறுபிரிவினைநாளினீளமோர்
தஞ்சுறவிடுவதோர்தயாவுதாங்கலால்
வெஞ்சிறைநீங்கியவினையினோரென
நெஞ்சுறக்களித்தனநேமிப்புள்ளெலாம். (௧௨௬)

நாண்மதிக்கல்லதுநடுவணெய்திய
ஆணையினீக்கலாவலரிற்பாய்வன
மாண்வினைபயன்படாமுரந்தர்வாயில்சேர்
பாணரிற்றளர்ந்தனபாடற்றும்பியே. (௧௨௭)

அருமணிச்சாளரமதனினூடுபுக்
கெரிகதிரின்றுயிலெழுப்பியேற்றவும்
மருளொடுதெருளுறுநிலையர்மங்கையர்
தெருளுறமெய்ப்பொருடெளிந்திலாரினே. (௧௨௮)

ஏவலின்வன்மையையண்ணறேற்றலா
நாவலரியற்றியநாளினுமநூல்
காவலினினிதுணர்கணிதமாக்களும்
கூவுறுகோழியுந்துயில்வுகொண்டவே. (கஉகூ)

இனையனவுலகினினிகழுமெல்லையில்
கனைகழலரக்கனுங்கண்ணினோக்கினன்
நினைவுறுமனத்தையுநெருப்பிற்றீக்குமால்
அனையவத்திங்களேயாகுமாலென்றான். (கங0)

திங்களோவன்றிதுசெல்வசெங்கதிர்
பொங்குளைப்பச்சையம்புரவித்தேரதால்
வெங்கதிர்சுடுவதேயன்றிமெய்யுறத்
தங்குதண்கதிர்சுடத்தகாதென்றார்சிலர். (கஙக)

( வேறு. )

நீலச்சிகரக்கிரியன்னவனின்றவெய்யோன்
ஆலத்தினும்வெய்யனகற்றியசாற்றுகின்ற
வேலைக்குரலைத்தவிர்கென்றுவிலக்கிமேலை
மாலைப்பிறைப்பிள்ளையைக்கூவுதிர்வல்லையென்றான். (கஙஉ)

சொன்னானிருதர்க்கிறையம்மொழிசொல்லலோடும்
அன்னாளினிரம்பியவம்மதியாண்டொர்வேலை
முன்னாளினிளம்பிறையாகிமுளைத்ததென்றால்
எந்நாளுமருந்தவமன்றியியற்றலாமோ. (கஙங)

குடபாலின்முளைத்ததுகண்டகுணங்கடீயோன்
வடவானலன்றெனின்மண்பிடர்வைத்தபாம்பின்
விடவாளெயிறன்றெனினென்னைவெகுண்டமாலை
அடவாளுருவிக்கொடுதோன்றியதாகுமன்றே. (கஙச)

தாதுண்சடிலத்தலைவைத்ததுதண்டரங்கம்
மோதுங்கடலிற்கிடைமுந்துபிறந்தபோதே
ஓதுங்கடுவைத்தன்மிடற்றினொளித்ததக்கோன்
ஈதுங்கடுவாமெனவெண்ணியவெண்ணமன்றே. (கஙரு)

உருமொக்கவுலைந்துயிர்துங்கியதிங்களோடித்
திருமிச்சிறுமின்பிறைதீமைகுறைந்ததில்லை
கருமைக்கறைநெஞ்சினினஞ்சுகலந்தபாம்பின்
பெருமைச்சிறுமைக்கொருபெற்றிகுறைந்ததுண்டோ. (கஙசு)

கன்னக்கனியுமிருடன்னையுங்காண்டுமன்றே
முன்னைக்கதிர்நன்றிதகற்றுதிர்முன்புசான்ற
என்னைச்சுடுமென்னினிவ்வேழுலகத்தும்வாழ்வோர்
பின்னைச்சிலருய்வொன்றங்கொருபேச்சுமுண்டோ. (கஙஎ)

ஆண்டப்பிறைநீங்கலுமெய்தியதந்தகாரம்
தீண்டற்கெளிதாய்ப்பலதேய்ப்பனதேய்க்கலாகி
வேண்டிற்கரபத்திரத்தீர்த்துவிழுத்தலாகிக்
காண்டற்கினிதாய்ப்பலகந்துதிரட்டலாகி. (கஙஅ)

முருடீர்ந்துருட்டற்கெளிதென்பதென்முற்றுமுற்றிப்
பொருடங்கில்கேள்விச்சுடர்புக்குவழங்கலின்றிக்
குருடீக்கிதென்னக்குறிக்கொண்டுமண்ணோட்டங்குன்றி
அருடீர்ந்தநெஞ்சிற்கரிதென்புதவ்வந்தகாரம், (கஙகூ)

விள்ளாதுசெறிந்திடைமேலுறவோங்கியெங்கும்
நள்ளாதிருளந்தகன்ஞாலம்விழுங்கலோடும்
எள்ளாதுலகியாவையும்யாவரும்வீயுமென்ப
துள்ளாதுமிழ்ந்தான்விடமுண்டவொருத்தனென்றான். (கச0)

வேலைத்தலைவந்தொருவன்வலியால்விழுங்கும்
ஆலத்தினடங்குவதன்றிதறிந்துணர்ந்தேன்
ஞாலத்தொடுவிண்முதல்யாவையுநாவினக்கும்
காலக்கனல்கார்விடமுண்டுகறுத்ததன்றே. (கசக)

அம்பும்மனலுநுழையாக்கனலந்தகாரத்
தும்பர்மழைகொண்டயலொப்பரிதாயதுப்பின்
கொம்பர்குரும்பைக்குலங்கொண்டதுதிங்கடாங்கி
வெம்புந்தமியேன்முன்விளக்கெனத்தோன்றுமன்றே. (கசஉ)

மருளூடிவந்தமயக்கோமதிமற்றுமுண்டோ
தெருளாதிதென்றேதிணிமையிழைத்தாலுமொவ்வா
இருளூடிருகுண்டலங்கொண்டுமிருண்டநீலச்
சுருளோடுந்தந்தோர்சுடர்மாமதிதோன்றுமன்றே. (கசங)

புடைகொண்டெழுகொங்கையுமல்குலும்புல்கிநிற்கும்
இடைகண்டிலமல்லதெல்லாவுருவுந்தெரிந்தாம்
விடறுங்கியகண்ணுடையாரிவர்மெல்லமெல்ல
மடமங்கையராயென்மனத்தவராயினாரோ, (கசச)

பண்டையுலகேழினுமுள்ளபடைக்கணார்க்
கண்டேனிவர்போல்வதொர்பெண்ணுருக்கண்டிலேனால்
உண்டேயெனின்வேறினியங்கையுணர்த்திநின்ற
வண்டேறுகோன்தமடவாரிவராகுமன்றே. (௧௪௫)

பூண்டிப்பினியானுறுகின்றதுகான்பொருதான்
தேண்டிக்கொடுவந்தனள்செய்வதொர்மாறுமுண்டோ
காண்டற்கினியாளுருக்கண்டவட்கேட்குமாற்றால்
நீண்டிப்பொழுதேதவிரைந்தெங்கையைக்கூவுகென்றான். (௧௪௬)

என்றென்னலுங்கடிதேகினர்கூவுமெல்லை
வன்றாணிருந்தக்குலம்வேரறமாய்த்தல்செய்வாள்
ஒன்றாதகாமக்கனலுட்டெறலோடுநாசி
பொன்றாழ்குழைதன்னொடும்போக்கினள்போய்ப்புகுந்தாள். ()

பொய்ந்நின்றநெஞ்சிற்கொடியாள்புகுந்தாளைநோக்கி
நெய்ந்நின்றகூர்வேலவனேதுறநோக்குங்காய்
மைந்நின்றவாட்கண்மயிலின்னியன்மைத்தென்முன்னோர்
இந்நின்றவர்காண்கொலியம்பியசீதையென்றான். (௧௪௮)

செந்தாமரைக்கண்ணொடுஞ்செங்கனிவாயினோடுஞ்
சந்தார்தடந்தோளொடுந்தாழ்தடக்கைகளோடும்
அந்தாரகலத்தொடுமஞ்சனக்குன்றமென்ன
வந்தானிவனாகுமவ்வல்விலிராமனென்றாள். (௧௪௯)

பெண்பாலுருநாணிருகண்பட்டுப்பேணதீயின்
வெண்பாலுமிலாத்தொடர்நாரணனென்வியெய்துநின்னை
கண்பாலுறுமாலைகவர்ந்ததுகற்றதன்மை
மண்பாலவரோகொல்வினைப்படவாடமையென்றான். (௧௫0)

ஊன்றுமுனைர்வட்டுமொன்றினுமேடவின்றி
ஆன்றுமின்றுர்வெடிதார்கைக்கன்றநின்றாய்க்
கேன்றுனெதிரோவிழிநோக்குமிடங்கடோறும்
தோன்றும்பினையானிதுதோன்னொதித்தாருமென்றான். (௧௫௧)

அன்னானதுகூறவரக்கனுமன்னதாக்
நின்றாலவ்விராமனைக்காண்குறுநீயொன்னென்றான்
எந்நாளவனென்னையித்தீர்வருமின்னல்செய்தான்
அந்நாண்முதல்யானுமயர்த்திலனாகுமென்றாள். (௧௫௨)

ஆமாமதடுக்குமெனக்கையொடாவிணைய
வேமால்வினையேற்றினியென்விடிவாகுமென்னக்
கோமானுலகுக்கொருநீகுறைகின்றதென்னே
பூமான்குழலாடனைவவ்வுதிபோதியென்றாள். (௧௫௩)

என்றாளகன்றாளவரக்கனுமீடழிந்தான்
ஒன்றாலுமுணர்ந்திலனாவியுலைந்துசோர்ந்தான்
நின்றாருநடுங்கினர்நின்னுளநாவுலர்ந்தே
பொன்றாதுளனாயினனத்துணையேயுமன்றே. (௧௫௪)

இறந்தார்பிறந்தாரென்னினினுயிர்பெற்றமன்னன்
மறந்தானுணர்ந்தானவண்மாடுநின்றானைநோக்கிக்
கறந்தாலெனநீர்தருசந்திரகாந்தத்தாலே
சிறந்தார்மணிமண்டபஞ்செய்கெனச்செப்புகென்றான். (௧௫௫)

வந்தானென்டுவானுறைதச்சன்மனத்துணர்ந்தான்
சிந்தாவினையன்றியுஞ்செய்வினையாலுஞ்செய்தான்
அந்தாமநெடுந்தரியிர்பிரத்தாலமைத்த
சந்தார்மணிமண்டபந்தாமரையோனுமாணா. (௧௫௬)

காந்தமமுதின்றுளிகால்வனகாலமீனின்
வேந்தனஞ்சியன்றியுமேலொடுகீழ்விரித்தான்
பூந்தென்றல்புகுந்துறைசாளரமும்புனைந்தான்
ஏந்துமணிக்கற்பகச்சீதக்காவிழைத்தான். (௧௫௭)

ஆணிக்கமைபொற்கைம்மணிச்சுடரார்விளக்கம்
சேணுற்றிருள்சீப்பவத்தெய்வமடந்தைமார்கள்
பூணிற்பொலிவார்படையேந்திடப்பொங்குதோளான்
மாணிக்கமானத்திடைமண்டபங்காணவந்தான். (௧௫௮)

அல்லாயிரகோடியடுக்கியதொத்ததேனும்
நல்லார்முகமாகுளிர்வாணிலவீன்றநாமப்
பல்லாயிரகோடிபணிச்சுடர்மின்றிங்கள்
எல்லாமுடனாயிருளோடியிரிந்ததன்றே. (௧௫௯)

பொற்புற்றனமாமணியென்பதும்பூவினின்று
கற்பத்தருவின்கதிர்நாண்மிறைத்தற்கறைநாறு
அற்பற்றழியப்பகலாக்கியதாலருக்கன்
நிற்பத்தெளிகின்றதுநீள்சுடர்மேன்மையன்றே. (௧௬௦)

ஊறோசைமுதற்பொறியாவையுமொன்றினொன்று
தேறாநிலையுற்றதொர்சிந்தையன்செய்கையோரான்
வேறாயபிறப்பிடைவேட்கைவிசித்ததீர்ப்ப
மாறோருடலுற்றெனமண்டபம்வந்துபுக்கான். (கசுக)

( வேறு. )

தண்டலிறவஞ்செய்வோர்தாம்வேண்டியதரவேநல்கும்
மண்டலமகரவேலையமுதொடும்வந்ததென்னப்
பண்டருசுரும்புசேரும்பசுமரமுயிர்த்தபைம்பொற்
றண்டளிர்மலரிற்செய்த சீதளச்சேக்கைசார்ந்தான். (கசுஉ)

நேரிழைமகளிர்கூந்தனிறைநறைவாசநீந்தி
வேரியஞ்சாளச்சோலைவேனிலான்விருந்துசெய்ய
ஆர்கலியமுதந்தந்தமருந்தெனவொருவர்வி
நிரினுமுதவற்கொத்ததென்றல்வந்திறுத்ததன்றே, (கசுங)

சாளரத்தூடுவந்து தவழ்தலுந்தரித்தறேற்றான்
நீளரத்தங்கள்சிந்திநெருப்புகநோக்குநீரான்
வாழ்மனைபுகுந்ததாண்டோர் மாசுணம்வரக்கண்டன்ன
கோளுறக்கொதித்துவிம்மியுழையனைக்கூவிச்சொன்னான், ()

கூவலினுயிர்த்தசின்னீ ருலகினைக்குப்புற்றென்னத்
தேவரினொருவனென்னையின்னலுஞ்செய்யத்தக்கான்
ஏவலினன்றிவந்திங்கிவ்வழியெய்திற்றென்னாக்
காவலினுழையர்தம்மைக்கொணருதிர்கடிதினென்றான். (கசுரு)

அவ்வழியுழையரோடி யாண்டவற்கொணர்தலோடும்
வெவ்வழியமைந்தசெங்கண்வெருவுறநோக்கிவெய்யோன்
செவ்வழிதென்றலோற்குத் திருத்தினைநீகொலென்ன
இவ்வழியிருந்தகாலைத்தடையவற்கில்லையென்றான்- (கஅசு)

காற்றினோன்றன்னைவாளாமுனிதவிற்கண்டதில்லை
கூற்றுவந்தென்னையின்னே குறுகுமாற்குறித்தவாற்றால்
வேற்றருங்கருங்கட்சீதைமெய்யருள்புனையேனென்றால்
ஆற்றலாலடுத்ததெண்ணு மமைச்சரைக்கொணர்தியென்றான். ()

ஏவினசிலதரோடி யேயெனுந்துணையினெங்கும்
கூவினர்கூவலோடுங்குறுகினர்கொடித்திண்டேர்
மாவினர்சிவிகைமேலர்முழுமதக்களிற்றர்வையத்
தேவரும்வாழுந்தன்னிற்றேவருஞ்சிந்தைசிந்த. (கசுஅ)

வந்தமந்திரியரோடுமாச்சறமனத்தினெண்ணிச்
சிந்தையினினைந்தசெய்யுஞ்செய்கையன்றெளிவில்நெஞ்சன்
அந்தரஞ்செல்வதாண்டோர் விமானத்திலாருமின்றி
இந்தியமடக்கிநின்றமாரீசனிருக்கைசேர்ந்தான். (கசுகூ)

இருந்தமாரீசனந்தவிராவணனெய்தலோடும்
பொருந்தியபயத்தன்சிந்தைபொருமுற்றுவெருவுகின்றான்
கருந்தடமலையன்னானையெதிர்கொண்டுகடன்கள்யாவும்
திருத்தியசெய்துசெவ்வித்திருமுகநோக்கிச்செப்பும். (கஎ௰)

( வேறு. )

சந்தமலர்த்தண்கற்பகநீழற்றலைவற்கும்
அந்தகனுக்குமஞ்சவடுக்கும்ரசாள்வாய்
இந்தவனத்தென்னின்னலிருக்கைக்கெளியோரின்
வந்தகருத்தென்சொல்லுதியென்றான்மருள்கின்றான். (கஎக)

ஆனதனைத்துமாவிதரித்தேனயர்கின்றேன்
போனதுபொற்பும்மேன்மையுமற்றென்புகழோடும்
யானதுனக்கின்றெங்ஙனுரைக்கேனினிதென்னா
வானவருக்குநாணதடுக்கும்வசைமன்றோ. (கஎஉ)

வன்மைதரித்தோர்மானுடர்மற்றங்கவர்வாளால்
நின்மருகிக்குநாசியிழக்குநிலைநேர்ந்தார்
என்மரபுக்குநின்மரபுக்குமிதன்மேலோர்
புன்மைதெரிப்பின்வேறினியெற்றேபுகல்வேலோய். (கஎங)

திருகுசினத்தார்முதிரமலைந்தார்சிறியோர்நாள்
பருகிளையொன்றால்வென்றநலத்தின்பழியன்றோ
இருகைசுமந்தாயினிதினிருந்தாயிகல்வேலுன்
மருகருலந்தாரொருவன்மலைந்தான்வரிவில்லால். (கஎச)

வெப்பழியாதென்னெஞ்சுமுலந்தேன்விளிகின்றேன்
ஒப்பழிவென்றேபோர்செயலொல்லேனுடன்வாழும்
துப்பழிசெவ்வாய்வஞ்சியையவ்வத்துணைகொண்டிட்
டிப்பழிநின்றாற்றீரியவந்தேனிவணென்றான். (கஎரு)

இச்சொலனைத்துஞ்சொல்லியரக்கனெரிகின்ற
கிச்சினுருக்கிட்டுய்த்தனனென்னக்கிளராமுன்
கிச்சியெனத்தன்மெய்ச்செவிபொத்தித்தெருமந்தான்
அச்சமகற்றிச்செற்றமனத்தோடறைகின்றான். (கஎசு)

மன்னாநீநின்வாழ்வைமுடித்தாய்மதியற்றாய்
உன்னானன்றீதூழ்வினையுன்றேபுணர்கின்றேன்
இன்னாநெஞ்சனேனுமுறைப்புவித்தென்னாச்
சொன்னானன்றேயன்னவனுக்குந்துணிவெல்லாம். (௧௭௭)

அற்றகரத்தோடுன்றலைநீயேயனன்றன்றில்
பற்றினையுய்த்தாய்ப்பற்பலகாலம்பசிகூர
உற்றாயிருள்ளேதேயவலந்தாயுண்டியன்றோ
பெற்றனைசெல்வம்பின்னதிழந்தாய்பெறலாமோ. (௧௭௮)

திறத்திறனாலோசெய்தல்முற்றித்திருவுற்றாய்
மறத்திறனாலோசொல்லுதிசெல்லாய்மறைவல்லோய்
அறத்திறனாலேயெய்தினையன்றோவதுநீயும்
புறத்திறனாலேயின்னுமிழக்கப்புகுவாயோ. (௧௭௯)

நாரங்கொண்டார்நாடுகவர்ந்தார்நடையல்லா
வாரங்கொண்டார்மற்றொருவர்க்காய்மனைவாழும்
தாரங்கொண்டாரென்றிவர்தம்மைத்தருமந்தான்
ஈருங்கண்டாய்கண்டகருய்ந்தாரெவரையா. (௧௮௰)

அந்தமுற்றானகலிகைபொற்பாலழிவுற்றான்
இந்திரனொப்பாரெத்தனையோர்தாமிழிபுற்றார்
செந்திருவொப்பாரெத்தனையோர்நின்றிருவுண்பார்
மந்திரமற்றாருற்றதுரைத்தாய்மதியற்றாய். (௧௮௧)

செய்தாயேனுந்தீவினையோடும்பழியல்லால்
எய்தாதெய்தாதெய்தினிராமனுலகின்றான்
வைதாலன்னவாளிகள்கொண்டுன்வழியோடும்
கொய்தானன்றேகொற்றமுடித்துண்டமெல்லாம். (௧௮௨)

என்றாலென்னேயெண்ணலையேநீகாணென்பான்
நின்றானைக்குமேலுளனென்னுநிலையம்மா
தன்றானைக்குற்றாரொடுமாளத்தனுவொன்றால்
கொன்றான்முற்றுங்கொல்லமனத்திற்குறிகொண்டான். (௧௮௩)

வெய்யோர்யாரோவீரவிராதன்றுணைவெய்யோர்
ஐயோபோனானம்பெரிடும்பர்க்கவனென்றால்
உய்வார்யாரேநம்பியெனக்கொண்டுணர்தோறும்
நையாநின்றேனீயிதுரைத்துநலிவாயோ. (௧௮௪)

மாண்டார்மாண்டார்நீயினிமாள்வார்தொழில்செய்ய
வேண்டாவேண்டாசெய்கெனினுய்வான்விதியுண்டோ
ஆண்டாராண்டாரொத்தனையென்கோவறனோனார்
ஈண்டாரீண்டார்நின்றவரெல்லாமிலரன்றே. (க௮௫)

எம்பிக்குமென்னன்னைதனக்குமிறுதிக்கோர்
அம்புய்க்கும்போர்வில்லிதனக்குமயனிற்கும்
தம்பிக்குந்நம்மாண்மைதவிர்ந்தேசயநிற்கும்
கம்பிக்குமென்னெஞ்சவனென்றேகவல்கின்றேன். (க௮௬)

நின்றுஞ்சென்றும்வாழ்வனயாவுநிலையாவால்
பொன்றும்மென்றும்மெய்ம்மையுணர்ந்தாம்புலையாடற்
கொன்றும்முன்னாயென்னுரைகொள்ளாயுயர்செல்வத்
தென்றும்மென்றும்வைகுதியையாவிளியென்றான். (க௮௭)

(வேறு.)

கங்கைசடைவைத்தவனொடுங்கைலைவெற்போர்
அங்கையினெடுத்தவெனதாடெழின்மணித்தோள்
இங்கொர்மணிதற்கெளியவென்றனையெனத்தன்
வெங்கணெரியப்புருவமீதுறவிடைத்தான். (க௮௮)

நிகழ்ந்ததைநினைத்திலையெனெஞ்சினிலையஞ்சா
திகழ்ந்தனையெனக்கிளையநங்கைமுகமெங்கும்
அகழ்ந்தனையதொப்புறவமைத்தவரையையா
புகழ்ந்தனைதனிப்பிழைபொறுத்தனெனிதென்றான். (க௮௯)

தன்னைமுனிவுற்றதறுகட்டகவிலோனைப்
பின்னைமுனிவுற்றிடுமெனத்தவிர்தல்பேணா
துன்னைமுனிவுற்றனகுலத்தைமுனிவுற்றாய்
என்னைமுனிவுற்றிலையிதென்னெனவிசைத்தான். (க௯0)

எடுத்தமலையேநினையினீசனிகல்வில்லாய்
வடித்தமலையேயிதுவலித்தியெனவாரிப்
பிடித்தமலைநாணிடைபிடித்தொருவன்மேனாள்
ஒடித்தமலையும்பர்முகடுற்றமலையன்றோ. (க௯௧)

யாதுமறியாயுரைகொளாயிகலிராமன்
கோதைபுனையாமுனுயிர்கொள்ளைபடுமன்றே
பேதைமதியாலிஃதொர்பெண்ணுருவமென்றாய்
சீதையுருவோநிருதர்தீவினையதன்றோ. (க௯௨)

உஞ்சுபிழையாயுறவினேனுமொரவுன்றொ
னெஞ்சுபறைபோதுமதுநினையகில்லாய்
அஞ்சுமெனதாருயிரதிங்கருகுநின்றார்
நஞ்சுநுகர்வாரையிதுநன்றெனலுநன்றே. (கசுங)

ஈசன்முதன்மற்றுமிமையோருலகுமற்றைத்
தேசமுதன்முற்றுமொரிமைப்பினுயிரின்ப
கோசிகனமைத்தகடவுட்படைகொதிப்போ
டாசிலகணிப்பிலவிராமனருணிற்ப. (கசுச)

வேதனைசெய்காமவிடமேவிடமெலிந்தாய்
நீதுணைசெய்தாயினையசெய்கையிதைதவன்றே
மாதுலனுமாய்மரபின்முந்தையுறவந்தேன்
ஈதுணைசெய்தேனதனையெந்தைதவிர்கென்றான். (கசுரு)

என்னவுநாயகந்தனையுமெத்தனையுமெண்ணச்
சொன்னவனையேயிவ்வரக்கர்பதிசொன்னான்
அன்னையுயிர்செற்றவனையஞ்சியுறைகின்றாய்
உன்னையொருவற்கொருவனொன்றுணர்கைநன்றே. (கசுசு)

திக்கயமொளிப்பதிலைநீபயர்கெடவானம்
புக்கவரிநக்கநபுகைவிந்துலகம்பாவும்
சக்கரநத்துமெனையோதயரதன்றன்
மக்கணலிகிற்பரிதுநன்றுவலியன்றே. (கசுஎ)

மூவுலகினுக்குமொருநாயகமுடித்தேன்
மேவலர்கிடைக்கினிதன்மேலினியதுண்டோ
ஏவல்செயகிற்றியெனதாணைவழியெண்ணிக்
காவல்செயமைச்சர்கடனீகடவதுண்டோ. (கசுஅ)

மற்றதனையெனப்பெறினுநின்னைவடிவாளால்
ஒறுத்துமனமுற்றதுமுடிப்பதொழிகல்லேன்
வெறுப்பனகிளத்தலுறுமித்தொழிலைவிட்டென்
குறிப்பின்வழிநிற்றியுயிர்கொண்டுழலியென்றான். (கசுகூ)

(வேறு.)

அரக்கனஃதுரைத்தலோடுமறிந்தனனங்கிநெஞ்சம்
தருக்கினர்கெடுவரன்றேதக்கதுவநிலையிற்றன்றே
செருக்கினிற்றீர்துமென்பார்தம்மினுஞ்செருக்கவொன்றை
உருக்கியசெம்பினுப்பநீரெனவுரைக்கலுற்றான். (உ௱)

உன்வயினுறுதிநோக்கியுண்மையினுணர்த்தினேன்மற்
றென்வயினிறுதிநோக்கியச்சத்தாலிசைத்தேனல்லேன்
நன்மையுந்தீமையன்றேநாசம்வந்துற்றபோது
புன்மையினுற்றநீராய்செய்வதுபுகறியென்றான். (உ௱க)

என்றலுமெழுந்துபுல்லியேறியவெகுளிநீங்கிக்
குன்றெனக்குவிந்ததோளாய்மாரவேள்கொதிக்குமம்பால்
பொன்றலினிராமனம்பாற்பொன்றலேபுகழுண்டன்றோ
தென்றலைப்பகையைச்செய்தசீதையைத்தருதியென்றான். (உ௱உ)

ஆண்டையானனையகூறவர்க்கரோரிருவரோடும்
பூண்டவெண்மானந்தீரத்தவவனம்புக்கபோழ்தில்
தூண்டியசரங்கள்பாயத்துணைவர்பட்டுருளவஞ்சி
மீண்டயான்சென்றுசெய்யும்வினையென்கொல்விளம்புகென்றான். ()

ஆயதாங்கனையகூறவரக்கர்கோனையநொய்துன்
தாயையாருயிருண்டானையான்கொலச்சமைந்துநின்றேன்
போயையாபுணர்ப்பதென்னேயென்பதுபொருந்திற்றன்றே
மாயையால்வஞ்சித்தன்றேவவ்வுதலவளையென்றான். (உ௱ச)

புறத்தினியுரைப்பதென்னேபுரவலன்றேவிதன்னைத்
திறத்துழியன்றிவஞ்சித்தெய்துதல்சிறுமைத்தாகும்
அறத்துளதொக்குமன்றேயமர்த்தலையென்றுகொண்டுன்
மறத்துறைவளர்த்திமன்னவென்னமாரீசன்சொன்னான். (உ௱ரு)

ஆனவனுரைக்கநக்கவரக்கர்கோனவரைவெல்லத்
தானையும்வேண்டுமோவென்றடக்கைவாட்டக்கதன்றே
ஏனையரிறக்கிற்றானுந்தமியளாயிறக்குமன்றே
மானவளாதலாலேமாயையின்வலித்துமென்றான். (உ௱சா)

தேவியைத்தீண்டாமுன்னமிவன்றலைசாத்திற்சிந்திப்
போம்வகைபுணர்ப்பெனென்றுபுந்தியாற்புகல்கின்றேற்கும்
ஆம்வகையாயிற்றில்லைபார்விதிவினையையோர்வார்
ஏவதுசெய்வதல்லாலில்லைவேறொன்றென்றெண்ணா. (உ௱எ)

என்னமாமாயம்யான்மற்றியற்றுவதியம்புகென்றான்
பொன்னின்மானாகிப்புக்குப்பொன்னைமால்புணர்த்துகென்ன
அன்னதுசெய்வெனென்னுமாரீசனமைந்துபோனான்
மின்னும்வேலரக்கர்கோனும்வேறொருநெறியிற்போனான். (உ௱அ)

(வேறு.)

மேனாளவன்வில்வலிகண்டமையால்
தானாகவமைந்துசமைந்திலனால்
மானாகுதியென்றவன்வாய்மொழியால்
போனான்மனமுஞ்செயலும்புகல்வாம். (௨0௯)

வெஞ்சுற்றநினைந்தும்வீரனைவே
றஞ்சுற்றுமறுக்குறுமாழ்குழிநீர்
நஞ்சுற்றுறுமீனினடுக்குறுமால்
நெஞ்சுற்றதொர்பெற்றிநினைப்பரிதால். (௨௧0)

அக்காலமும்வேள்வியினன்றிவனோ
டெக்காலுநலிந்துமொரீறுபெறான்
முக்காலின்முடிந்திடுவான்முயல்வான்
புக்கானவ்விராகவன்வைகுபுனம். (௨௧௧)

தன்மானமிலாததயங்கொளிசால்
மின்வானமுமண்ணும்விளங்குவதோர்
பொன்மானுருவங்கொடுபோயினனால்
நன்மானனையாடனைநாடுறுவான். (௨௧௨)

கலைமான்முதலாயினகண்டவெலாம்
அலைமானுறுமாசையின்வந்தனவால்
நிலையாமனவஞ்சனைநேயமிலா
விலைமாதர்கண்யாரும்விழுந்தெனவே. (௨௧௩)

பொய்யாமெனவோதுபுறஞ்சொலினால்
நையாவிடைநோவுநடந்தனளால்
வைதேகிதன்வால்வளைமென்கையெனும்
கொய்யாமலரான்மலர்கொய்துறுவாள். (௨௧௪)

உண்டாகியகேடுடையார்துயில்வாய்
எண்டானுழியுந்நிலையாவுருவம்
கண்டாரெனலாம்வகைகண்டனளால்
பூண்டாருமுருவிடர்பாடுறுவாள். (௨௧௫)

காணாவிதுகைதவமென்றுணராள்
பேணாதலங்கொடுபேணினளால்
வாணாளையிராவணன்மாளுதலால்
வீணாளினறம்புவிமேவுதலால். (௨௧௬)

நெற்றிப்பிறையாண்முனைநின்றிடலும்
முற்றிப்பொழிகாதலின்முந்துறுவாள்
பற்றித்தருகென்பெனெனப்பதையா
வெற்றிச்சிலைவீரனையேவினளால். (௨௧௭)

ஆணிப்பொனினாகியதாய்க்கதிரால்
சேணிற்சுடர்கின்றதுதிண்செவிகால்
மாணிக்கமயத்தொருமானுளதால்
காணத்தருகென்றனள்கைதொழுவாள். (௨௧௮)

இம்மானிலத்தினிலில்லையெனா
எம்மானிதெனச்சிறிதெண்ணல்செயான்
செம்மானவள்சொற்கொடுதேமலரோன்
அம்மானுமருத்தியனாயினனால். (௨௧௯)

ஆண்டங்கிளையோனுரையாடினனால்
வேண்டும்மெனலால்விளைவன்றிதெனான்
பூண்டுஞ்சுபொலங்கொடியோயதுநாம்
காண்டும்மெனும்வள்ளல்கருத்துணர்வான். (௨௨0)

காயங்கனகம்மணிகால்செவிவால்
பாயும்முருவோடிதுபண்பெனலால்
மாயம்மெனலன்றிமனக்கொளவே
ஏயும்மிறையையுறவென்றளவே. (௨௨௧)

நில்லாவுலகின்னிலைநேர்மையினால்
வல்லாருமுணர்ந்திலர்மன்னுயிர்தாம்
பல்லாயிரகோடிபரந்துளவால்
இல்லாதனவில்லைவிளங்குமரா. (௨௨௨)

என்னென்றுநினைத்ததிகைத்துளநம்
கன்னங்களின்வேறுளகாணுதுமால்
பொன்னின்னொளிமேனிபொருந்தியவேழ்
அன்னங்கள்பிறந்ததறிந்திலையோ. (௨௨௩)

முறையும்முடிவும்மிலைமொய்யுயிரொன்
றிறைவன்னிளையானொடியம்பினனால்
பறையுந்துணையன்னதுபன்னெறிபோய்
மறையும்மெனவேழைவருந்தினளால். (௨௨௪)

(வேறு.)

அனையவள்கருத்தையுன்னவஞ்சனக்குன்றமன்னான்
புனையிழைகாட்டதென்றுபோயினான்பொருதசிங்கைக்
கனைகழற்றம்பிபின்புசென்றனன்கூடக்கவொண்ணு
வினையெனவந்துநின்றமானெதிர்விழித்ததன்றே. (உஉரு)

நோக்கியமானைநோக்கிநுதியிழைமதியிலொன்றும்
தூக்கிலனன்றிதென்றானதன்பொருள்சொல்லலாகும்
சேக்கையினரவுநீங்கிப்பிறந்ததுதேவர்செய்த
பாக்கியமுடைமையன்றோவன்னதுபழுதுபோமோ. (உஉசா)

என்னனைக்குமென்னலாகுமிளையவவிதனைநோக்காய்
தன்னனைக்குவமையல்லாற்றனையொக்குமுவமையுண்டோ.
பன்னக்கதாளமொக்கும்பசும்புன்மேற்படருமென்னு
மின்னனைக்குஞ்செம்பொன்மேனிவெள்ளியின்விளங்கும்புள்ளி. உஉஎ

வரிசிலைமறைவலோனேமானிதன்வடிவையுற்ற
அரிவையர்மைந்தர்யாரேயாதரங்கூர்கிலாதார்
உருகியமனத்தவாகியூர்வனபறப்பயாவும்
விரிசுடர்விளக்கங்கண்டவிட்டில்போல்வீழ்வகாணாய். (உஉஅ)

ஆரியனனையகூறவன்னதுதன்னைநோக்கிச்
சீரியதன்றிதென்றுசிங்கையிற்றெளிந்ததம்பி
காரியமென்னையீண்டுக்கணடதுகனகமானால்
வேரியந்தெரியல்வீரமீள்வதேமேன்மையென்றான். (உஉகூ)

அற்றவன்பகராமுன்னமங்கனையழகியாளும்
கொற்றவன்மைந்தமற்றைக்குழைவுடையுழையைவல்லை
பற்றினைதருதியாயிற்பதியிடையவதியெய்தப்
பெற்றுழியினிதுண்டாடப்பெறற்கருந்தகைமைத்தென்றாள். (உநய)

ஐயநுண்மருங்குநங்கையஃதுரைசெய்யவையன்
செய்யவனென்றமையநோக்கித்தெளிவுடைச்செம்மல்செப்பும்
வெய்யவல்லரக்கர்வஞ்சம்விரும்பினார்வினையிற்செய்த
கைதவமானென்றண்ணல்காணுதிகடையிலென்றான். (உநக)

மாயமேன்மடிவாமன்றேவாளியின்மடிந்தபோது
காய்சினந்தவளைக்கொன்றுகடன்கழித்தோமுமாதும்
தூயதேற்பற்றிக்கோடுஞ்சொல்லியவிரண்டினொன்றும்
தீயதேயுளதாக்கியென்றான்றேவனாயிடுக்கண்டீர்ப்பான். (உநஉ)

பின்னின்றாரினையொன்றுமுணர்கிலம்பிடித்தமாயம்
என்னென்றுந்தெளிதறேற்றாம்யாவதீதென்றுமோராம்
முன்னின்றார்முறையினின்றார்முனிந்துளவேட்டமுற்றல்
பொன்னின்றவயிரத்தோளாய்புகழுடைத்தாமன்றென்றான். (௨௱௩)

பகையுடையரக்கரொன்றும்பலவொன்றும்பயிலுமாயம்
மிகையுடைத்தென்றும்பூண்டவிரதத்தைவிடுதுமென்றல்
நகையுடைத்தாகுமன்றேயாதலினன்றீதென்னாத்
தகையுடைத்தம்பிக்கந்நாட்சதுமுகன்றாதைசொன்னான். (௨௱௪)

அடுத்தவுமெண்ணிச்செய்தலண்ணலேயமைதியன்றே
விடுத்திதன்பின்னின்றார்கள்பலருளரெனினும்வில்லால்
தொடுத்தவெம்பகழிதூவித்தொடர்ந்தனென்விரைந்துசென்று
படுக்குவெனதுவன்றாயிற்பற்றினென்கொணர்வனென்றான். (௨௱௫)

ஆயிடையனனமன்னாளமுதுகுத்தனையசெய்ய
வாயிடைமழலையின்சொற்கிளியினிற்குழறிமாழ்கி
நாயகநீயேபற்றிநல்கலைபோலுமென்னாச்
சேயரிக்குவளைமுத்தஞ்சிந்துபுசிதறிப்போனாள். (௨௱௬)

போனவள்புலவிநோக்கிப்புரவலன்பொலன்கொடாராய்
மானிதுநானேபற்றிவல்லையின்வருவனன்றே
கானியன்மயிலன்னாளைக்காத்தனையிருத்தியென்னா
வேனகுசரமும்வில்லும்வாங்கினன்விரையலுற்றான். (௨௱௭)

முன்னமுமகவாய்வந்தமூவரியொருவன்போனான்
அன்னமாரீசனென்றேயயிர்த்தனனிதனையைய
இன்னமுங்காண்டிவாழியேகெனவிருகைகூப்பிப்
பொன்னனாள்புக்கசாலைகாத்தனன்புறத்துநின்றே. (௨௱௮)

மந்திரத்திளைபோன்சொன்னவாய்மொழிமனத்துக்கொள்ளா
சந்திரற்குவமைசான்றவதனத்தாள்சலத்தைநோக்கிச்
சிந்துரப்பவளச்செவ்வாய்முறுவலன்சிகரச்செவ்வி
சுந்தரத்தோளினனம்மானினைத்தொடரலுற்

மிதித்ததுமெல்லமெல்லவெறித்ததுவெ
குதித்ததுசெவியைநீட்டிக்குரம்பதமுன்
உதித்தெழுமுனதயுள்ளிமென்றி
கதிக்கொருகல்விழிவறேக

நீட்டினானுலகமூன்றுநின்றெடுத்தளந்தபாதம்
மீட்டுநாமுனைத்தற்கம்மாவேறுமோரண்டமுண்டோ
ஓட்டினான்றொடர்ந்ததன்னையொழிவறநிறைந்ததன்மை
காட்டினானன்றியன்றக்கடுமையார்கணிக்கற்பாலார். (உசக)

குன்றிடையிவருமேகக்குழுவிடைக்குதிக்குங்கூடச்
சென்றிடினகலுந்தாழிற்றீண்டலாந்தகைமைத்தாகும்
நின்றதேபோலநீங்குநிதிவழிநேயநீட்டும்
மன்றலங்கோதைமாதர்மனமெனப்போயிற்றம்மா. (உசஉ)

காயம்வேறாகிச்செய்யுங்கருமம்வேறாகிற்றன்றே
ஏயுமேயென்னின்முன்னமெண்ணமேயிளவற்குண்டே
ஆயுமேலுறுதல்செல்லாவரக்கரானவர்கள்செய்த
மாயமேயாயதேநான்வருந்தியதென்றான்வள்ளல். (உசங)

( வேறு. )

பற்றுவானினியல்லன்பகழியால்
செற்றுவானிற்செலுத்தலுற்றானென
மற்றமாயவரக்கன்மனக்கொளா
உற்றவேகத்தினும்பரியோங்கினான். (உசச)

அக்கணத்தினிலையனும்வெய்யதன்
சக்கரத்திற்றகைவரிதாயதோர்
செக்கர்மேனிப்பகழிசெலுத்தினான்
புக்கதேயம்புக்கின்னுயிர்போக்கென. (உசரு)

நெட்டிலைச்சரம்வஞ்சனைநெஞ்சுறப்
பட்டதப்பொழுதேபகுவாயினால்
அட்டதிக்கினுமப்புறமும்புக
விட்டழைத்தொருகுன்றெனவீழ்ந்தனன். (உசசா)

...ன்றனுருவொடுவீழ்தலும்
...றனச்செப்பியதம்பியை
...ருயிர்வல்லனாம்
...னன்றுன்னினான். (உசஎ)

உழைத்தவாளியுரம்புகப்புல்லியோன்
இழைத்தமாயையினென்குரலாலிசைத்
தழைத்ததுண்டதுகேட்டயர்வெய்துமால்
மழைக்கணேழையென்றுள்ளம்வருந்தினுன். (௨௪௯)

மாற்றமின்னதுமாயமாரீசனென்
றேற்றமுன்னுணர்ந்தானெனினென்னுடை
ஆற்றறேருமறிவினனாதலான்
தேற்றுமாவிளையோனெனத்தேறினுன். (௨௫0)

மாள்வதேபொருளாகவந்தானலன்
சூழ்வதோர்பொருளுண்டிவன்சொல்லினல்
மூள்வதேதமதுமுடியாமுனம்
மீள்வதேநலனென்றவன்மீண்டனன். (௨௫௧)

எ-ஆவது. மாரீசன்வதைப்படலம்முற்றிற்று. ஆக திருவிருத்தம். அ0எ

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

## அ-ஆவது-சடாயுவுயிர்நீத்தபடலம்.

சங்கடுத்ததனிக்கடன் மேனியார்க்
கங்கடுத்தநிலைமையறைந்தனம்
கொங்கடுத்தமலர்க்குழற்கொம்பனாட்
கிங்கடுத்ததகைமையியம்புவாம். (௧)

எயிறலைத்துமுழைதிறந்தேங்கிய
செயிர்தலைக்கொண்டசொற்செவிசேர்தலும்
குயிறலைத்திடையுற்றதொர்கொள்கையாள்
வயிறலைத்துவிழுந்துமயங்கினுள். (௨)

பிடித்துநல்கிவ்வுழையெனப்பேதையேன்
முடித்தனென்முதல்வாழ்வெனமொய்குழல்
கொடிப்படிந்ததெனநெடுங்கோளரா
இடிக்குடைந்ததெனப்புரண்டேங்கினுள். (௩)

குற்றம்வீந்தகுணத்தினெங்கோமகன்
மற்றைவாளரக்கன்புரிமாயையால்
இற்றுவீந்தனனென்னவுமென்னயல்
நிற்றியோவிளையோயொருநீயென்றுள். (௪)



✲

(வேறு.)

எண்மையாருலகினிராமற்கேற்றமோர்
திண்மையாருளரொனல்செப்பற்பாலதோ
பெண்மையாலுரைசெயப்பெறுதிராலென
உண்மையானேயவட்குணரக்கூறினான். (ரு)

ஏழுமேகடலுலகேழுமேழுமே
சூழுமேழ்மலையவைதொடர்ந்தசூழல்வாய்
வாழுமேழையர்சிறுவலிக்குவாளமர்
தாழுமேயிராகவன்றனிமைதையலீர். (சு)

பாரொனக்கனலெனப்புனலெனப்பகர்
பேரொனத்திசையெனமுனியிற்பெருமால்
காரொனக்கரியவக்கமலக்கண்ணனே
யாரொனக்கருதியிவ்விடரிஞ்ழ்கின்றீர். (எ)

இடைந்துபோய்நிசிசரற்கிராமனெவ்வம்வந்
தடைந்தபோதழைக்குமேயழைக்குமாமெனின்
மிடைந்தபோண்டம்நண்மேலகீழன
உடைந்துபோமயன்முதலுயிருந்தியுமால். (அ)

மாற்றமென்பகர்வதுமண்ணும்வானமும்
போற்றவன்றிரிபுரமெரித்தபுங்கவன்
ஏற்றிநின்றெய்தவில்லிற்றதெம்பிரான்
ஆற்றலினைமைவதோராற்றலுண்மையோ. (கூ)

காவலனீண்டிரீர்கருதிற்றெய்துமேல்
மூவகையுலகமுமுடியுமுந்துள
தேவருமுனிவருமுதலசெவ்வியோர்
ஏவரும்வீந்துளாரறமுமெஞ்சுமால். (க0)

பாக்கவென்பகர்வதுபகழிபண்ணவன்
தூக்கவங்கதுபடத்தொலைந்துசோர்கின்ற
அர்க்கனவ்வுரையெடுத்தரற்றினனதற்
கிரக்கமுற்றிரங்கலிரிருத்திரீண்டென்றான். (கக)

என்றவனியம்பலுமெடுத்தசீற்றத்தள்
கொன்றனவின்னலள்கொதிக்குமுள்ளத்தள்
நின்றநின்னிலேயிதுநெறியிற்றன்றென
வன்றறுகண்ணினள்வயிர்த்துக்கூறுவாள். (கஉ)

ஒருபகல்பழகினாருயிரையீவரால்
பெருமகனுலைவுறுபெற்றிகேட்டுநீ
வெருவலைநின்றனைவேறென்யானினி
எரியிடைவீழ்ந்துயிரிறப்பலீண்டெனா. (கங)

தாமரைவனத்திடைதாவுமன்னம்போல்
தூமவெங்காட்டெரிதொடர்கின்றாடனைச்
சேமவிற்குமரனும்விலக்கிச்சீறடிப்
பூமுகநெடுநிலம்புல்லிச்சொல்லுவான். (கச)

துஞ்சுவதென்னைநீர்சொற்றசொல்லையான்
அஞ்சுவென்மறுக்கிலெனவலந்தீர்ந்தினி
இஞ்சிருமடியனேனேகுகின்றனென்
வெஞ்சினவிதியினைவெல்லவல்லமோ. (கரு)

போகின்றேனடியனேன்பொருந்திவந்துகே
டாகின்றதாசன்றனாணைநீர்மறுத்
தேகென்றிரிருக்கின்றிர்தமியிரொன்றுபின்
வேகின்றசிந்தையான்விடைகொண்டேகினான். (கசு)

இருப்பனேலெரியிடையிறப்பராலிவர்
பொருப்பனையானிடைபோவெனேயெனின்
அருப்பமில்கேடுவந்தடையுமாருயிர்
விருப்பனேற்கென்செயலென்றுவிம்மினான். (கஎ)

அறந்தனாலழிவிலதாகினாக்கலாம்
இறந்துபாடிவர்க்குறுமிதனினிவ்வழி
துறந்துபோமிதனையேதுணிவென்றால்வினைப்
பிறந்துபோந்திதுபடும்பேதையேனெனா. (கஅ)

போவதுபுரிவல்யான்புகுந்ததுண்டெனின்
காவல்செயெருவையின்றலைவன்கண்ணுறும்
ஆவதுகாக்குமென்றறிவித்தவ்வழி
தேவர்செய்தவத்தினாற்செம்மலேகினான். (ககூ)

இளையவனேகலுமிறவுபார்க்கின்ற
வளையெயிற்றிராவணன்வஞ்சமுற்றுவான்
முளைவரித்தண்டொருமூன்றுமுப்பகைத்
தளையரிதவத்தவர்வடிவுந்தாங்கினான். (உ0)

ஊணிலனாமெனவுலந்தமேனியன்
சேணெறிவந்ததோர்வருத்தச்செய்கையன்
பாணியினடத்திடைப்படிக்கின்றானென
வீணையினிசைபடவேதம்பாடுவான். (உக)

பூப்பொதியவிழ்ந்தனநடையன் பூதலம்
தீப்பொதிந்தாமெனமிதிக்குஞ்செய்கையன்
காப்பருநடுக்குறுங்காலன் கையினன்
மூப்பெனும்பருவமுமுனியமுற்றினான். (உஉ)

தாமரைக்கண்ணொடேர்தவத்தின்மாலையன்
ஆமையினிருக்கையன்வளைந்தயாக்கையன்
நாமநூன்மார்பினனணுகினானரோ
தூமனத்தருந்தியிருந்தசூழல்வாய். (உங)

தோமறுசாலையின்வாயிறுன்னினான்
நாமுதற்குழறிடநடுங்குசொல்லினான்
யாவிரிவ்விருக்கையுளிருந்துவீரென்றான்.
தேவருமருள்கொளத்தெரிந்தமேனியான். (உச)

தோகையுமிவ்வழித்தோமில்சிந்தனை
சேகறுநோன்பினளொன்னுஞ்சிந்தையாள்
பாகியல்கிளவியாள்பவளக்கொம்பர்போன்
றேகுமினீண்டெனவெதிர்வந்தெய்தினாள். (உரு)

வெற்பிடைமதமெனவியர்க்குமேனியன்
அற்பினற்றிரைபுரளாசைவேலையன்
பொற்பினுக்கணியினைப்புகழின்சேக்கையைக்
கற்பினுக்கரசியைக்கண்ணினோக்கினான் (உசு)

தூங்கலினுருவினைச்சொல்லினும்பரும்
ஓங்கியவழகினாளுருவங்காண்டலும்
ஏங்கினன்மனனிலையாதென்றுன்னுவாம்
வீங்கினமெலிந்தனவீரத்தோள்களே. (உஎ)

புனமயிற்சாயலினெழிலிற்பூநறைச்
சுனைமடுத்துண்டிசைமுரலுந்தும்பியின்
இனமெனக்களித்துளதென்பதென்னவன்
மனமெனக்களித்ததுகண்ணின்மாலையே. (உஅ)

சேயிதழ்த்தாமரைச்சேக்கைதீர்ந்திவண்
மேயவண்மணிநிறமேனிகாணுதற்
கேயுமேயிருபதிங்கிமைப்பினோட்டங்கள்
ஆயிரமில்லையென்றல்லலெய்தினான். (௨௯)

அரைகடையிட்டமுக்கோடியாயுவும்
புரைதபுதவத்தின்யான்படைத்தபோதுமே
நிரைவளைமுன்கையினின்றநங்கையின்
உரையறுநன்னலக்கடற்கென்றுன்னினான். (௩௰)

தேவருமவுணருந்தேவிமாரொடும்
கூவல்செய்தொழிலினர்குடிமைசெய்திட
மூவுலகமுமிவர்முறையினாளயான்
ஏவல்செய்துய்குவெனினியென்றுன்னினான். (௩௧)

உளைவுறுதுயர்முகத்தொளியிதாமெனின்
முளையெயிறிலங்கிடுமுறுவலென்படும்
தளையவிழ்குழலிவட்கண்டுதந்தவென்
இளையவட்களிப்பெனென்னாசென்றெண்ணினான். (௩௨)

ஆண்டையானனையனவுன்னியாசைமேல்
மூண்டெழுசிந்தனைமுறையிலோன்றனைக்
காண்டலுங்கண்ணினீர்துடைத்தகற்பினாள்
ஈண்டெழுந்தருளுமென்றினையகூறினாள். (௩௩)

ஏத்தினளெய்தலுமிருத்திரீண்டென
வேத்திரத்தாசனம்விதியினல்கினாள்
மாத்திரிதண்டயல்வைத்தவஞ்சனும்
பூத்தொடர்சாலையினிருந்தபோழ்தினே. (௩௪)

நடுங்கினமலைகளுமரனுநாவுவிந்
தடங்கினபறவையும்விலங்குமஞ்சின
படங்குறைந்தொதுங்கினபாம்பும்பாதகக்
கடுந்தொழிலரக்கனைக்காணுங்கண்ணினே. (௩௫)

இருந்தவன்யாவதிவ்விருக்கையிங்குறை
அருந்தவன்பாவனீர்யாரையென்றலும்
விருந்தினரிவ்வழிவிரகிலாரெனப்
பெருந்தடங்கண்ணவள்பேசன்மேயினாள். (௩௬)

தயரதன்றொல்குலத்தலைவன்றம்பியோ
டுயர்குலத்தன்னைசொலுச்சியேத்தினான்
அயர்விலதிவ்வழியுறையுமன்னவன்
பெயரினைத்தெரிகுதிர்பெருமையீரென்றாள். (௩௭)

கேட்டனன்கண்டிலன்கெழுவுகங்கைநீர்
நாட்டிடையொருமுறைநண்ணினேன்மலர்
வாட்டடங்கண்ணினீர்யாவன்மாமகள்
காட்டிடையரும்பகல்கழிக்கின்றீரென்றான். (௩௮)

அங்கமாநெறிபடாரடிகளும்மலால்
நினைவதோர்தெய்வம்வேறிலாதநெஞ்சினான்
சனகன்மாமகள்பெயர்சனகிகாகுத்தன்
மனைவியானென்றனண்மறுவில்கற்பினாள். (௩௯)

அவ்வழியனையனவுரைத்தவாயிழை
வெவ்வழிவருந்தினிர்விளைந்தழப்பினிர்
இவ்வழியிருவினைகடக்கவெண்ணினிர்
எவ்வழிநின்றுமிங்கெய்தினீரென்றாள். (௪௰)

இந்திரற்கிந்திரனெழுதலாகலாச்
சுந்தரன்முகன்மரபிற்றோன்றினான்
அந்தகத்தோடுமெவ்வுலகுமாள்கின்றான்
மந்திரத்தருமறைவைகுநாவினான். (௪௧)

ஈசனாண்டிருந்தபேரிலங்குமால்வரை
ஊசிவேரொடும்பறித்தெடுக்குமூற்றத்தான்
ஆசைகள்சுமந்தபேரளவில்யானைகள்
பூசல்செய்மருப்பினைப்பொடிசெய்தோளினான். (௪௨)

நிற்பவர்களுடத்தலைநிறைந்துதேவரோ
சொற்பகுமற்றவன்பெருமைசொல்லுங்கால்
கற்பகமுதலியநிதியங்கையன
பொற்பதமானநீரிலங்கைப்பொன்னகர். (௪௩)

ஏனைகதிலோத்தமைமுதலவேழையர்
வானகந்துறந்துவந்தவன்றன்மாட்சியால்
ஊனமில்லடைப்பைகால்வருடலொண்செருப்
பானவைமுதற்றொழிலவராகுமே. (௪௪)

சந்திரனிரவிமயன்பவர்கடாமவன்
சிந்தனைவழிநிலைதிரிவர்தேசுண்ட
இந்திரன்முதலியவமரரீண்டவன்
கந்தடுகோயிலின்காவலாளரே. (௪௫)

பொன்னகரத்தினும்பொலங்கொணாகர்தம்
தொன்னகரத்தினுந்தொடர்ந்தமாநிலத்
தென்னகரத்தினுமினியவீண்டவன்
நன்னகரத்தனநவையிலாதன (௪௬)

தாளுடைமலருளான்றந்தவந்தமில்
நாளுடைவாழ்க்கையனாரிபாகத்தன்
வாளுடைத்தடக்கையன்வாரிவைத்தவெங்
கோளுடைச்சிறையினன்குணங்கண்மேன்மையான். (௪௭)

வெம்மைதீரொழுக்கினன்விரிந்தகேள்வியன்
செம்மையோன்மன்மதன்திசைக்குஞ்செவ்வியன்
எம்மையோரனைவருமிறைவனென்றெணும்
மும்மையோர்பெருமையுமுற்றும்பெற்றியான். (௪௮)

அனைத்துலகினுமழகமைந்தநங்கையர்
எனைப்பலரவன்றனதருளினிச்சையோர்
நினைத்தவருருகவுமுதவநேர்கிலன்
மனக்கினியாளொருமாதர்நாடுவான். (௪௯)

ஆண்டையானரசுவீற்றிருந்தவந்நகர்
வேண்டியான்சில்பகலுறையவேண்டினேன்
நீண்டனனிருந்தவற்பிரிந்தநெஞ்சினேன்
மீண்டனனென்றனன்வினையமுன்னுவான். (௫௰)

வேதமும்வேதியரருளும்வெஃகலாச்
சேதனைமன்னுயிர்தின்னுந்தீவினைப்
பாதகவரக்கர்தம்பதியின்வைகுதற்
கேதுவென்னுடலமுமிகையென்றெண்ணுவீர். (௫௧)

வனத்திடைமாதவர்மருங்குவைகலிர்
புனத்திருநாட்டிடைப்புனிதரூர்புக
நினைத்திலிரறநெறிநினைக்கிலாதவர்
இனத்திடைவைகினிரென்செய்தீரென்றாள். (௫௨)

(வேறு.)

மங்கையஃதுரைத்தல்கேட்டவரம்பிலான்மறுவிற்றீர்ந்தார்
வெங்கண்வாளரக்கரென்னவெருவலவெம்மைநோக்கின்
திங்கள்வாண்முகத்தினாய்த்தேவரிற்றீயரல்லர்
எங்கள்போலியர்க்குநல்லார்நிருதரேயாலுமென்றான். (௫௩)

சேயிழையன்னசொல்லத்தீயவர்ச்சேர்தல்செய்தார்
தூயவரல்லர்சொல்லிற்றென்னெறிதொடர்ந்தோரொன்றாள்
மாயவல்லரக்கர்வல்லர் வேண்டுருவரிக்கவென்ப
தாயவளறிந்தேற்றாளாகவினையலொன்றெண்ணாள். (௫௪)

அயிர்த்தனளாகுமென்றேயுறவகத்துக்கொண்டான்
பெயர்த்ததுதுடைக்கவெண்ணிப்பிறிதுறப்பேசலுற்றான்
மயக்கருமுலகமூன்றின்வாழ்பவர்க்கனையல்லோர்
இயற்கையிற்றிரியினல்லாவியற்றலாநெறியென்னென்றான். (௫௫)

திறந்தெரிவஞ்சனச்சொற்செப்பலுஞ்செப்பமிக்காள்
அறந்தருவள்ளலீண்டிங்கருந்தவமுயலுநாளுள்
மறந்தலைதிரிந்தவாழ்க்கையரக்கர்தம்வருக்கத்தோடும்
இறந்தனர்முடிவர்பின்னரிடரிலையுலகமென்றாள். (௫௬)

மானவனுரைத்தலோடுமானிடரரக்கர்தம்மை
மீனெனமிளிருங்கண்ணாய் வேரறவெல்வரென்னின்
யானையினினத்தையெல்லாமிளமுயல்கொல்லும்பின்னும்
கூனுகிர்மடங்கலேற்றைக்குருளைமான்கொல்லுமென்றான். (௫௭)

மின்றிரண்டனையபங்கிவிராதனும்வெகுளிபொங்கக்
கன்றியமனத்துவென்றிக்கரன்முதற்கணக்கிலோரும்
பொன்றியபூசலொன்றுங்கேட்டிலிர்போலுமென்றாள்
அன்றவர்க்கடுத்ததுன்னிமழைக்கணீரருவிசோர்வாள். (௫௮)

வாளரிவள்ளறன்னுவிலங்கைமாநிருதரெல்லாம்
கேளொடுமறியுமாறும்வானவர்கிளருமாறும்
நாளையேகாண்டிரன்றேநவையிலிருணர்கிலீரோ
மீளருந்தருமந்தன்னைவெல்லுமோபாவமென்றாள். (௫௯)

தேனிடையமுதளாயவன்னமென்சிலசொன்மாலை
தானுடைச்செவிகளூடுதவழுறத்தளிர்த்து[illegible]ங்கும்
ஊனுடையுடம்பினுண்ணுமுருகெழுமானமூன்ற
மானிடர்வலியொன்றமாற்றத்தாற்சீற்றம்வைத்தான். (௬௰)

சிறியனுரைசெய்வானச்சிலைவலிப்புல்லியோர்கட்
கொருமனிதன்செய்தானென்றெடுத்தியம்பினையேல்
தேறுதிநாளையேயவ்விருபதுதிண்டோள்வாளை
வீறியபொழுதுபூளைவீயெனவீவனன்றே. (௬௧)

மேருவைப்பறிக்கவேண்டின்விண்ணினையிடிக்கவேண்டின்
நீரினைக்கலக்கவேண்டினெருப்பினையவிக்கவேண்டின்
பாரினையெடுக்கவேண்டிற்பலவினைசிலசொல்லேழாய்
யாரெனக்கருதிச்சொன்னாயிராவணற்கரிதென்னென்றான். (௬௨)

அரண்டருதிரடோள்சாலவுளவெனினாற்றலுண்டோ
கரண்டநீரிலங்கைவேந்தைச்சிறைவைத்தகழற்கால்வீரன்
திரண்டதோள்வனத்தையெல்லாஞ்சிறியதோர்பருவந்தன்னில்
இரண்டுதோளொருவனன்றேமழுவினாலெறிந்தானென்றாள். (௬௩)

என்றிவளுரைத்தலோடுமெரிந்தனநயனந்திக்கிற்
சென்றனதிரடோள்வானந்தீண்டினமகுடந்திண்கை
ஒன்றொடொன்றடித்தமேகத்துருமெனவயிற்றினொளி
மென்றனவெகுளிபொங்கவிட்டதுமாயவேடம். (௬௪)

இருவினைதுறந்தமேலோரல்லன்கொலிவனென்றெண்ணி
அரிவையுமையமெய்தாவாரிவன்றானென்றொன்றும்
தெரிவருநிலையளாகத்திவிடத்தரவந்தானே
உருகெழுசீற்றம்பொங்கிப்பணம்விரித்துயர்ந்ததொத்தான். (௬௫)

ஆற்றவெந்துயரத்தன்னாளாண்டுற்றவளைக்கணோக்கின்
ஏற்றமென்னினைக்கலாகுமெதிரெடுத்தியம்பலாகும்
மாற்றமொன்றில்லைசெய்யும்வினையில்லைவரிக்கலாகாக்
கூற்றம்வந்துற்றகாலத்துயிரெனக்குலைவுகொண்டாள். (௬௬)

விண்ணவரேவல்செய்யவென்றவென்வீரம்பாராய்
மண்ணிடைப்புழுவின்வாழுமானுடர்வலியொன்றாய்
பெண்ணெனப்பிழைத்தாயன்றேலுன்னையான்பிசைந்துதின்ன
எண்ணுவெனெண்ணிற்பின்னையென்னுயிரிழப்பெனென்றான். (௬௭

குலைவுறலன்னமுன்னம்யாரையுங்கும்பிடாவென்
தலைமிசைமகுடமென்னத்தனித்தனியினிதுதாங்கி
அலகில்பூணரம்பைமாதரடிமுறையேவல்செய்ய
உலகமீரேழுமாளுஞ்செல்வத்துளுறைதியென்றான். (௬௮)

செவிகளைத்தளிர்க்கையாலேசிக்குறச்சேமஞ்செய்தாள்
கனினும்வெஞ்சிலைக்கைவென்றிக்காகுத்தன்கற்பினோனைப்
புவியிடையொழுக்கநோக்காய்பொங்கெரிப்புனிதரீயும்
அவியினைநாய்வேட்டதென்னவென்சொனாயரக்கவென்னா. (௬௯)

புன்னுனைநீரினாய்தாய்ப்போதலேபுரிந்துநின்ற
இன்னுயிரிழத்தலஞ்சியிற்பிறப்பழிகலுண்டே
மின்னுயிர்த்துருமிற்சீறும்வெங்கணைவிரவாமுன்னம்
உன்னுயிர்க்குறுதிநோக்கினொளித்தியாலோடியென்றாள். (௭௰)

என்றவளுரைக்கநின்றவிரக்கமிலரக்கனெய்த
உன்றுணைக்கணவனம்பவ்வுயர்திசைசுமந்தவோங்கல்
வன்றிரன்மருப்பினாற்றன்மடித்தவெண்மார்பின்வந்தால்
குன்றிடைதொடுத்துவிட்டபூங்கணைகொல்லதென்றான். (௭௧)

அணங்கினுக்கணங்கனாய்நின்னாசைநோயகத்துப்பொங்க
உணங்கியவுடம்பினேனுக்குயிரினையுதவியும்பர்க்
கணங்குழைமகளிர்க்கெல்லாம்பெரும்பதங்கைக்கொளென்னா
வணங்கினனுலகந்தாங்குமலையினும்வலியதோளான். (௭௨)

(வேறு.)

தறைவாயவன்வந்தடிதாழ்தலும்
கறைவாள்படவாவிகலங்கினள்போல்
இறைவாவிளையோவெனவேங்கினளால்
பொறைதானுயிர்போர்வதுபோற்புகல்வாள். (௭௩)

ஆண்டாயிடைதீயவனாயிழையைத்
தீண்டாலெனுமேலுரைசிந்தைசெயாத்
தூண்டானெனலாமுயர்தோள்வலியால்
கீண்டானிலம்யோசனைகீழொடுமேல். (௭௪)

கொண்டானுயர்தேர்மிசைகோல்வளையாள்
கண்டாடனதாருயிர்கண்டிலளால்
மண்டானுறுமின்னின்மயங்கினளால்
விண்டரின்வழியாவெழுவான்வினைவான்: (௭௫)

விடுதேரெனவெங்கனல்வெந்தழியும்
கொடிபோல்புரள்வாள்குலைவாளயர்வாள்
துடியாவிழுவாடுயராலெழுவாள்
கடிதாவறனேயிதுகாவெனுமால். (௭௬)

மலையேமரனேமயிலேகுயிலே
கலையேபிணையேகளிறேபிடியே
நிலையாவுயிரேனிலைதேறினிர்போய்
உலையாவலியாருழைநீருரையீர். (௭௭)

செஞ்சேவகனார்நிலைநீர்தெரிவீர்
மஞ்சேபொழிலேவனதேவதைகாள்
அஞ்சேலெனநல்குதிரோவடியேன்
உஞ்சாலதுதானிழிபோவுரையீர். (௭௮)

நிருதாதியர்வேரறநீண்முகில்போல்
சரதாரைகள்வீசினிர்சார்கிலிரோ
வரதாவிளையோய்மறுவேதுமிலாப்
பரதாவிளையோய்பழிபூணுதிரோ. (௭௯)

கோதாவிரியேகுளிர்வாய்குழைவாய்
மாதாவனையாய்மனனேதெளிவாய்
ஓதாதுணர்வாருழையோடினைபோய்
நீதான்வினையேனிலைசொல்லலையோ. (௮௰)

முந்துஞ்சுனைகாண்முழைவாளரிகாள்
இந்தந்நிலனோடுமெடுத்தகைநா
லைந்துந்தலைபத்துமலைந்துலையச்
சிந்தும்படிகண்டுசிரித்திடுவீர். (௮௧)

(வேறு.)

என்றின்னபலவும்பன்னியிரியலுற்றழற்றுவாளைப்
பொன்றுன்னுபுணர்மென்கொங்கைப்பொலங்குழாய்போரிலென்னைக்
கொன்றன்னைமீட்பர்கொல்லம்மானுடர்கொள்கவென்னா
வன்றிண்கையெறிந்துநக்கான்வாழ்க்கைநாள்வறிதுவீழ்வான் (௮௨)

வாக்கினாலன்னான்சொல்லமாயையால்வஞ்சமானான்
றாக்கினையாக்கியுன்னையாருயிருண்ணுங்கூற்றைப்
போக்கினைப்புகுந்துகொண்டுபோகின்றாய்பொருதுநின்னைக்
காக்குமாகாண்டியாயிற்கடவலுன்றேனாவென்றாள். (௮௩)

மீட்டுமொன்றுரைசெய்வாணீவீரனேல்விரைவின்மற்றுன்
கூட்டராமரக்கர்தம்மைக்கொன்றுங்கைகொங்கைமூக்கும்
வாட்டினார்வனத்திலுள்ளார்மானிடரென்றவார்த்தை
கேட்டுமிம்மாயஞ்செய்ததச்சத்தின்கிளர்ச்சியன்றோ. (௮௪)

மொழிதருமளவினங்கைகேளிதுமுரணில்யாக்கை
இருதருமனிதரோடேயான்செருவேற்பலென்றால்
விழிதருநெற்றியான்றன்வெள்ளிவெற்பெடுத்ததோட்குப்
பழிதருமதனிற்சாலப்பயன்றரும்வஞ்சமென்றான். (௮௫)

பாவையுமதனைக்கேளாத்தங்குலப்பகைஞர்தம்பால்
போவதுகுற்றம்வாளிற்பொருவதுநாணம்போலாம்
ஆவதுகற்பினாவஞ்சிக்குமாற்றலேயாம்
ஏவமென்பழிதானென்னையிரக்கமிலரக்கர்க்கென்றாள். (௮௬)

என்னுமவ்வேலையின்கணெங்கடாபோவதென்னா
நின்னிலென்றிடித்தசொல்லனெருப்பிடைப்பரப்புங்கண்ணன்
மின்னெனவிளங்கும்வீரத்துண்டத்தன்மேருவென்னும்
பொன்னெடுங்குன்றம்வானின்வருவதேபோலுமெய்யான். (௮௭)

பாறிவன்கிரிகளெல்லாம்பறித்தெழுந்தொன்றோடொன்று
பூழியினுதிரவிண்ணிற்புடையுறக்கிளர்ந்துபொங்கி
ஆழியுமுலகுமொன்றாயழிதரமுழுதும்வீசும்
ஊழிவெங்காற்றிதென்னவிருசிறையூதைமோத, (௮௮)

(வேறு.)

சாகைவன்றலையொடுமரமுந்தாழமேல்
மேகமும்விண்ணின்மீச்செல்லமீமிசை
மாகவெங்கலுழனும்வருகின்றானென
நாகமும்படமொளித்தொதுங்கிநையவே, (௮௯)

யானையும்யாளியுமுழுவையாவையும்
கானொடுமரத்தொடுதூறுகல்லிவை
மேனிறைந்திருசிறைவீச்சினேறலால்
வானமுங்கானமுமாறுகொண்டவே. (௯௦)

உத்தமன்றேவியையுலகொடோங்குதேர்
வைத்தனையேகுவதெங்குவானினோ
டித்தனைதிசையையுமறைப்பெனீண்டெனாப்
பத்திரச்சிறைகளைவிரிக்கும்பண்பினான், (௯௧)

வந்தனனெருவையின்மன்னன்மாண்பிலான்
எந்திரத்தேர்செலவழிக்குமெண்ணினான்
சிந்துரக்கால்சிரஞ்செக்கர்சூடிய
சுந்தரசகைலையைநிகர்க்குங்காட்சியான். (௯௨)

(வேறு.)

ஆண்டுற்றவணங்கினையஞ்சலெனாத்
தீண்டுற்றிலனென்றுணர்சிந்தையினான்
மூண்டுற்றெழுவெங்கதமுற்றிலனால்
மீண்டுற்றுரையாடலைமேயினனால். (௬௩)

கெட்டாய்கிளையோடுநின்வால்வையெலாம்
சுட்டாயிதுவென்னதொடங்கினைநீ
பட்டாயெனவேகொடுபத்தினியை
விட்டேகுதியால்விளிகின்றிலையால். (௬௪)

பேதாய்பிழைசெய்தனைபேருலகின்
மாதாவனையாளைமனக்கொடுநீ
யாதாகநினைத்தனையெண்ணமிலாய்
ஆதாரநினக்கினியாருளரோ. (௬௫)

உய்யாமன்மலைந்துமசாருயிரை
மெய்யாகவிராமன்விருந்திடவே
கையாரமுகந்துகொடந்தகனார்
ஐயாபுதிதுண்டதறிந்திலையோ. (௬௬)

கொடுவெங்கரிகொல்லியவந்ததன்மேல்
விடுமுண்டைகடாவவிரும்பினையே
அடுமென்பதுணர்ந்திலையாயினும்வன்
கடிவுண்டுயிரின்னிலைகாணுதியோ. (௬௭)

எல்லாவுலகங்களுமீந்திரனும்
அல்லாதவர்மூவருமந்தகனும்
புல்வாய்புலிகண்டதுபோல்வரலால்.
வில்லாளனைவெல்லுமிடுக்குளரோ. (௬௮)

இம்மைக்குறவோடுமிறந்தழியும்
வெம்மைத்தொழிலிங்கிதன்மேலிலையால்
அம்மைக்கருமாநரகந்தருமால்
எம்மைக்கிதமாகவிதெண்ணினைநீ. (௬௯)

முத்தேவரின்மூலமுதற்பொருளாம்
அத்தேவரிம்மானிடமாகவினால்
எத்தேவரொடெண்ணுவதெண்ணமிலாய்
பித்தேறினையாதல்பிழைத்தனையால். (௭௰)

புரம்பற்றியபோர்விடையோனருளால்
வரம்பெற்றவுமற்றுளவிஞ்சைகளும்
உரம்பெற்றனவாவனவுண்மையினேன்
சரம்பற்றியசாபம்விடுந்தனையே. (௱௧)

வானாள்பவன்மைந்தன்வளைத்தவிலான்
தானேவவினின்றுதடுப்பரிதால்
நானேயவனுய்ப்பெனிந்நன்னுதலைப்
போநீகடிதென்றுபுகன்றிடலும். (௱௨)

கேட்டானிருதர்க்கிறைகேழ்கிளர்தன்
வாட்டானைநெருப்புகவாய்மடியா
ஓட்டாயினிநீயுரைசெய்குநனைக்
காட்டாய்கடிதென்றுகனன்றுரையா. (௱௩)

வரும்புண்டரம்வாளியின்மார்புருவிப்
பெரும்புண்டிறவாவகைபேருதிநீ
இரும்புண்டநீர்மீள்கினுமென்னுழையிற்
கரும்புண்டசொன்மீள்கிலள்காணுதியால். (௱௪)

(வேறு.)

என்னும்மளவிற்பயமுன்னினிரட்டியெய்த
அன்னம்மயர்கின்றதுநோக்கியரக்கன்யாக்கை.
சின்னம்முறுமிப்பொழுதேசிலையேந்திநங்கள்
மன்னன்மகன்வந்திலனென்றுவருந்தலன்னை. (௱௫)

முத்துக்கனபோன்முகத்தாவிமுலைக்கண்வீழத்
தத்துற்றயரேறலைதாலபலத்தினேலும்
கொத்தொப்பனகொண்டிவன்கொண்டனவென்றவாசை
பத்திற்குமின்றேபலியீவதுபார்த்தியென்றான். (௱௬)

இடிப்பொத்தமுழக்கினிருஞ்சிறைவீசியெற்றி
முடிப்பத்திகளைப்படியிட்டுமுழங்குதுண்டம்
கடிப்பக்கடிதுற்றவன்காண்டகுநீண்டவீணைக்
கொடிப்புற்றியொடித்துயர்வானவராசிகொண்டான். (௱௭)

அக்காலையரக்கனரக்குருக்கன்னகண்ணன்
எக்காலமுமின்னதொரீடழிவுற்றிலாதான்
நக்கானுலகேழுநடுங்கிடநாதமன்ன
கைக்கார்முகத்தோடுகடைப்புருவங்குனித்தான். (௱௮)

சண்டப்பிறைவாளெயிற்றான்சரதாரைமாரி
மண்டச்சிறகாலடித்தான்சிலவள்ளுகிரால்
கண்டப்படுத்தான்சிலகாலனுங்காணவுட்கும்
துண்டப்படையாற்சிலதுண்டதுண்டங்கள்கண்டான். (௱௯)

மீட்டும்மனுகாநெடுவெங்கணநந்தநாகம்
வாட்டுங்கலுழனெனவன்றலைபத்தின்மீதும்
நீட்டுந்நெடுமூக்கெனுநேமியன்சேமவிற்கால்
கோட்டும்மளவின்மணிக்குண்டலங்கொண்டெழுந்தான். (௱௰)

எழுந்தான்றடமார்பினினேழினொடேழுவாளி
அழுந்தாதுகழன்றிடப்பெய்தெடுத்தார்த்தரக்கன்
பொழிந்தான்புகர்வாளிகண்மீளலும்போர்ச்சடாயு
விழுந்தானெனவஞ்சினர்விண்ணவர்வெய்துயிர்த்தார். (௱௰௧)

புண்ணிற்புதுநீர்பொழியப்பொலிபுள்ளின்வேந்தன்
மண்ணிற்கரனேமுதலோருதிரத்தின்வாரி
கண்ணிற்கடலென்றுநுகர்ந்ததுகான்றுமீள
விண்ணிற்பொலிகின்றதொர்வெண்ணிறமேகமென்ன. (௱௰௨)

ஒத்தானுடனேயுயிர்த்தானுருத்தானவன்றோள்
பத்தோடுபத்தினெடும்பத்தியிற்றத்திமூக்கால்
கொத்தாநகத்தாற்குடையாச்சிறையாற்புடையா
முத்தாரமார்பிற்கவசத்தையுமூட்டறுத்தான். (௱௰௩)

அறுத்தானையரக்கனுமைம்பதொடைம்பதம்பு
செறித்தான்றடமார்பிற்செறித்தலுந்தேவரஞ்சி
வெறித்தார்வெறியாமுனிராவணன்வில்லைப்பல்லால்
பறித்தான்பறவைக்கிறைவிண்ணவர்பண்ணையார்ப்ப. (௱௰௪)

கல்லிட்டவெள்ளிக்கைலைப்பொருப்பீசனோடும்
மல்லிட்டதோளாலெடுத்தான்சிலைவாயின்வாங்கி
வில்லிட்டுயர்ந்தநெடுமேகமெனப்பொலிந்தான்
சொல்லிட்டவன்றோள்வலியாருளர்சொல்லவல்லார். (௱௰௫)

மீளாநிறத்தாயிரங்கண்ணவன்விண்ணினோடை
வாளாலொறுத்தான்சிலைவாயிடைநின்றுவாங்கித்
தாளாலிறுத்தான்றழல்வண்ணன்றடக்கைவில்லைத்
தோளாலிறுத்தான்றுணைத்தாதைதனன்பிற்றோழன். (௱௰௬)

ஞாலம்மெடுப்பான்றனதாற்றலுக்கேற்றநல்வில்
மூலம்மொடிப்புண்டதுகண்டுமுனிந்தநெஞ்சன்
ஆலம்மிடற்றான்புரமட்டதொரம்புபோலும்
சூலம்மெடுத்தானெறிந்தான்மறந்தோற்றிலாதான். (௱௰௭)

ஆற்றானிவனென்றுணராதியெனாற்றல்காணென்
றேற்றானொருவைக்கிறைமுத்தலையெஃகமார்பின்
மேற்றானிதுசெய்பவர்யாரெனவிண்ணுளோர்கள்
தோற்றாதுநின்றார்தந்தோள்புடைகொட்டியார்த்தார். (௧௧௮)

பொன்னோக்கியர்தம்புலனோக்கியபுன்கணோரும்
இன்னோக்கியரில்வழியெய்தியநல்விருந்தும
தன்னோக்கியநெஞ்சுடையோகியர்தன்மைசார்ந்த
மென்னோக்கியர்நோக்கமுமாமெனமீண்டதவ்வேல். (௧௧௯)

வேகம்முடன்வேலிழந்தான்படைவேறெடாமுன்
மாகம்மறையும்படிநீண்டவயங்குமான்றேர்ப்
பாகன்றலையைப்பறித்துப்படர்கற்பினாள்பால்
மோகம்படைத்தானுளைவெய்தமுகத்தெறிந்தான். (௧௨௰)

எறிந்தானதுநோக்கியிராவணனெஞ்சினாற்றல்
அறிந்தான்முனிந்தாண்டதொராடகத்தண்டுவாங்கிப்
பொறிந்தாங்கெரியின்சிகைபொங்கியெழப்புடைத்தான்
மறிந்தானொருவைக்கிறைமால்வரைபோலமண்மேல். (௧௨௧)

மண்மேல்விழுந்தான்விழலோடும்வயங்குமான்றேர்க்
கண்மேலொளியுந்தொடராவகைதான்கடாவி
விண்மேலெழுந்தானெழுமெல்லியலாளும்வெந்தீப்
புண்மேனுழைபத்துடிக்கின்றனள்போற்புரண்டாள். (௧௨௨)

கொழுந்தேயனையாள்குழைந்தேங்கியகொள்கைகண்டான்
அழுந்தேலவலத்திடையஞ்சலையன்னையென்னா
எழுந்தானுயிர்த்தானடவெங்கினிப்போவதென்னா
விழுந்தானவன்றேர்மிசைவிண்ணவர்பண்ணையார்ப்ப (௧௨௩)

பாய்ந்தானவன்பன்மணித்தண்டுபறித்தெறிந்தான்
ஏய்ந்தார்கதித்தேர்ப்பரியெட்டினொடெட்டுமெஞ்சித்
தீந்தாசறவீசியத்திண்டிறற்றுண்டவாளால்
காய்ந்தான்கவர்ந்தானுயிர்காலனுங்கைவிதிர்த்தான். (௧௨௪)

திண்டோழித்தாங்கவன்றிண்புறஞ்சேர்ந்ததூணி
விண்டான்மறைப்பச்செறிகின்றனவில்லிலாமை
மண்டாரமர்தான்வழங்காமையின்வச்சைமாக்கள்
பண்டாரமொக்கின்றனவள்ளுகிராற்பறித்தான். (௧௨௫)

மாச்சிச்சிரம்பாய்ந்தவன்மார்பினுந்தோள்கண்மேலும்
ஓச்சிச்சிறகாற்புடைத்தான்கடித்தானுலையா
மூச்சிற்றவிராவணனும்முடிசாய்ந்திருந்தான்
போச்சித்தனைபோலுநின்னாற்றலெனப்புகன்றான். (௧௨௬)

அவ்வேலையினேமுனிந்தான்முனிந்தாற்றலன்ன
வெவ்வேலரக்கன்விடலாம்படைவேறுகாணான்
இவ்வேலையினேயிவனின்னுயிருண்பலென்னாச்
செவ்வேபிழையாநெடுவாளுறைதீர்த்தெறிந்தான். (௧௨௭)

வலியின்றலைதோற்றிலன்மாற்றருந்தெய்வவாளால்
நலியுந்தலையென்றஃதன்றியும்வாழ்க்கைநாளும்
மெலியுங்கடைசென்றுளதாகவின்விண்ணின்வேந்தன்
குலியம்மெறியச்சிறையற்றதோர்குன்றின்வீழ்ந்தான். (௧௨௮)

விரிந்தார்சிறைகீழுறவீழ்ந்தனன்மண்ணின்விண்ணோர்
இரிந்தாரிழந்தாடுணையென்னமுனிக்கணங்கள்
பரிந்தார்படர்விண்டுவினாட்டவர்பைம்பொன்மாரி
சொரிந்தாரதுநோக்கியசீதைதுளக்கமுற்றாள். (௧௨௯)

வெள்கும்மரக்கனெடுவிண்புகவார்த்துமிக்கான்
தொள்கின்றலையெய்தியமானெனச்சோர்ந்துநைவாள்
உள்கும்முயிர்க்குமுயங்கும்மொருசார்வுகாணாள்.
கொள்கொம்பொடியக்கொடிவீழ்ந்ததுபோற்குலைந்தாள். (௧௩௰)

(வேறு.)

வன்றுணையுளெனெனவந்தமன்னனும்
பொன்றினனெனக்கினிப்புகலெனென்கின்றாள்
இன்றுணைபிரிந்திரிந்தின்னலெய்திய
அன்றிலம்பெடையெனவாற்றினாளரோ. (௧௩௧)

பின்னவனுரையினைமறுத்துப்பேதையேன்
அன்னவன்றனைக்கடிதகற்றினென்பொரு
மன்னவன்சிறையறமயங்கினேன்விதி
இன்னமுமெவ்வினையியற்றுமோவெனா. (௧௩௨)

அல்லலுற்றேனைவந்தஞ்சலென்றவிந்
நல்லவன்றோற்பதேநரகன்வெல்வதே
வெல்வதும்பாவமோவேதம்பொய்க்குமோ
இல்லையோவறமெனவிரங்கியேங்கினாள். (௧௩௩)

நாணிலெனுனைகொடுநடந்தநம்பிமீர்
நீணிலையறநெறிநின்றுளோர்க்கெலாம்
ஆணியையுந்தையர்க்கமைந்தவன்பனைக்
காணியவம்மெனக்கலங்கிவிம்மினாள். (௧௩௪)

கற்பழியாமையென்கடமையாயினும்
பொற்பழியாவலம்பொருந்தும்போர்வலான்
விற்பழியுண்டதுவினையினேன்வந்த
இப்பழியுண்டதென்றிரங்கியேங்கினாள். (௧௩௫)

எல்லையில்விசும்பிடையிருந்தநேமியாய்
சொல்லியலாய்நெறிதொடர்ந்ததோழமை
நல்லியலருங்கடன்கழித்தநம்பியைப்
புல்லுதியோவெனப்பொருமிப்பொங்கினாள். (௧௩௬)

ஏங்குவாடன்மையுமிறகிழந்தவன்
ஆங்குறுதன்மையுமாக்கநோக்கினான்
வாங்கினன்றேரிடைவைத்தமண்ணொடும்
வீங்குதோண்மீக்கொடுவிண்ணினேகினான். (௧௩௭)

விண்ணிடைவெய்யவனேகும்வேகத்தால்
கண்ணொடுமனமமைவசுழன்றகற்பினாள்
உண்ணிறையுணர்வழிந்தொன்றுமோர்ந்திலள்
மண்ணிடைத்தன்னையுமறந்துசாம்பினாள். (௧௩௮)

ஏகினனரக்கனுமெருவைவேந்தனும்
மோகவெந்துயர்சிறிதாறிமூர்ச்சியா
மாகமேநோக்கினன்வஞ்சன்வல்லையில்
போகுதல்கண்டகம்புலர்ந்துசொல்லுவான். (௧௩௯)

வந்திலர்மைந்தர்நம்மருகிக்கெய்திய
வெந்துயர்துடைத்தனனொன்றுமெய்ப்புகழ்
தந்திலர்விதியினார்தருமவேலியைச்
சிந்தினர்மேலினிச்செயலெனுங்கொலோ. (௧௪௰)

வெற்றியருளரொளின் மின்னினுண்ணிடைப்
பொற்றொடிக்கின்றிலைபுகுதற்பாலதோ
உற்றதையின்னதென்றுணரகிற்றிலேன்
சிற்றவைவஞ்சனைமுடியச்செய்ததோ. (௧௪௧)

பஞ்சணைபாம்பணையாகப்பள்ளிசேர்
அஞ்சனவண்ணனேயிராமனுதலால்
வெஞ்சினவரக்கனல்வெல்லற்பாலனோ
வஞ்சனையிழைத்தனன்கள்ளமாயையால். (௧௪௨)

வேரறவரக்கரைவென்றுவெம்பழி
தீருமென்சிறுவனுந்தீண்டவஞ்சுமால்
ஆரியன்றேவியையரக்கனஞ்மலர்ப்
பேருலகளித்தவன்பிழைப்பில்சாபத்தால். (௧௪௩)

பருஞ்சிறையின்னனபன்னியுன்னுவான்
அருஞ்சிறையுற்றனளாமெனுமனம்
பொருஞ்சிறகிற்றதேபூவைக்கற்பெனும்
இருஞ்சிறகிறுதெனவிடருநீங்கினான். (௧௪௪)

அஞ்சிறைகுருதியாலழிந்துசோர்வுற
வஞ்சியைமீட்கிலேனென்னுமானமும்
செஞ்செவேமக்கள்பாற்சென்றகாதலும்
நெஞ்சுறத்துயின்றனனுணர்வுநீங்கலான். (௧௪௫)

வஞ்சியையரக்கனும்வல்லைகொண்டுபோய்ச்
செஞ்செவேதிருவுருத்தீண்டவஞ்சுவான்
நஞ்சியலரக்கியர்நடுவணுயிடைச்
சிஞ்சுபவனத்திடைச்சிறையவைத்தனரோ, (௧௪௬)

இந்நிலையினையவன்செயலியம்பினும்
பொன்னிலைமானின்பின்றொடர்ந்துபோகிய
மன்னிலையறிகெனமங்கையேவிய
பின்னிளையவனிலைபேசுவாமரோ. (௧௪௭)

ஒருமகடனிமையையுன்னியுள்ளுறும்
பருவரன்மீதிடப்பதைக்குநெஞ்சினன்
பெருமகன்றனைத்தனிப்பிரிந்துபேதுறும்
திருநகர்திருமப்பாதன்செய்கையான். (௧௪௮)

தெண்டிரைக்கலமெனவிரைவிற்செல்கின்றான்
புண்டரிகத்தடங்காடுபூத்தொரு
கொண்டல்வந்திழிந்தெனக்கோலத்தான்றனைக்
கண்டனன்மனமெனக்களிக்குங்கண்ணினான். (௧௪௯)

துண்ணெனுமவ்வுரைதொடரத்தோகையும்
பெண்ணெனும்பேதைமையயக்கப்பேதினால்
உண்ணிறைசோருமென்றாசலாடுமக்
கண்ணனுமிளவலைக்கண்ணுற்றனரோ. (௧௫0)

(வேறு,)

புன்சொற்கடந்தபகுவாயரக்கனைப்பொய்யெனாதுபுகல்வாள், வன்சொற்கடந்துமடமங்கையேவநிலைதேரவந்தமருளே, தன்சொற்கடந்துதளர்கின்றநெஞ்சுமுடையேன்மருங்குதனியே; என்சொற்கடந்துமனமுந்தளர்ந்தவிளவீரன்வந்தவியல்பே. (௧௫௧)

என்றுன்னியென்னைவிதியார்முடிப்பதெனவெண்ணிநின்றவிறையைப், பொன்றுன்னுவிற்கைவயவீரன்வந்துபுனைதாளிறைஞ்சுபொழுதில், மின்றுன்னுநூலின்மணிமார்பழுந்தவினைவோடுபுல்லியுருகா, நின்றுன்னிவந்தநிலையென்கொலென்றுநெடியோன்விளம்பநொடிவான்.

இல்லாநிலத்தினிசையாதவெஞ்சொலெழ்வஞ்சியேவமுறையால், வல்வாயரக்கனையாகுமென்னமதியாண்மறுக்கமுறுவாள், நில்லாதுமற்றிதறிபோதியென்னநெடியோய்புயத்தின்வலியென், சொல்லான்மனத்தினிடையாள்சினத்தின்முனிவோடுநின்றுதுவள்வாள். (௧௫௩)

ஏகாதுநிற்றியெனின்யானெருப்பினிடைவீழ்வெனென்றுமுடுகா
மாகானகத்தினிடையோடலோடுமனமஞ்சிவஞ்சவினையேன்
போகாதிருக்கினிறவாதிருக்கைபுணராளெனக்கொடுணரா
ஆகாதிறக்கையறனன்றெனக்கொடிவண்வந்ததென்னவமலன். (௧௫௪)

சாவாதிருத்தலிலளானதுற்றதஃதோதடுக்கமுடியா
ஆவாவலக்கணுறுவாளுரைத்தபொருளோவகத்தினடையாக்
காவாநிலத்தின்வருமேதமற்றதொழியாதுகைக்கொடகலப்
போவார்பிரிக்கமுயல்வார்புணர்த்தபொருளாமிதென்றுதெருளா. ()

வந்தாய்திறத்தினுளதன்றுகுற்றமடவாண்மறுக்கமுறுவாள்
சிந்தாகுலத்தொடுரைசெய்தசெய்கையதுதீருமென்றுதெளிவாய்
முந்தேதடுக்கவொழியாதெடுத்தவினையேன்முடித்தமுடிவால்
அந்தோகெடுத்ததெனவுன்னியுன்னியழியாதவுள்ளமழிவான். (௧௫௬)

பாணிக்கநின்றுடியனுவதென்னைபயில்பூவையன்னகுயிலைக்
காணிற்கரந்ததுயர்தீருமன்றியயவில்லையென்றுகடுகிச்
சேணுற்றகன்றநெறியூடுசென்றுசிலைவாளியன்னவிசைபோய்
ஆணிப்பசும்பொனனையாளிருந்தவவிர்சோலைவல்லையணுகா. (கருஎ)

( வேறு. )

ஓடிவந்தனன்சாலையின்சோலையினுதவும்
தோடிவர்ந்தபூஞ்சுரிகுழலாடனைக்காணான்
கூடுதன்னுடையதுபிரிந்தாருயிர்குறியா
நேடிவந்ததுகண்டிலதாமெனநின்றான். (கருஅ)

கைத்தசிந்தையன்கனங்குழையணங்கினைக்காணு
துய்த்துவாழ்தரவேறொருபொருளிலாஞ்செவ்
வைத்தமாநிதிமண்ணொடுமறைந்தனவாங்கிப்
பொய்த்துளோர்கொளத்திகைத்துநின்றானையும்போன்றான். ( )

மண்சுழன்றதுமால்வரைசுழன்றதும்தியோர்
எண்சுழன்றதுசுழன்றதவ்வெறிகடலேழும்
விண்சுழன்றதுவேதமுஞ்சுழன்றதுவிரிஞ்சன்
கண்சுழன்றதுசுழன்றதுகதிரொடுமதியும். (கசுய)

அறத்தைச்சீறுங்கொலருளையேசீறுங்கொலமர்ர்
சிறத்தைச்சீறுங்கொன்முனிவரைச்சீறுங்கொறீயோர்
மறத்தைச்சீறுங்கொலென்கொலோமுடிவென்றுமன்றயின்
நிறத்தைச்சீறுங்கொனெடுந்தகையோனென்றடுங்கா. (கசுக)

நீலமேனிநன்னெடியவன்மனநிலைதிரிய
மூலகாரணத்தவனொடுமுடிவுறமுற்றும்
காலமாமெனக்கடையிடுக்கணிக்கரும்பொருள்கள்
மேலசீழுறக்கீழனமேலுறும்வேலை. (கசுஉ)

தேரினாழியுந்தெரிந்தனன்றீண்டுதலஞ்சிப்
பாரினோடுகொண்டகழ்ந்ததும்பார்த்தனம்பயனின்
றோருந்தன்மையீதென்னென்பதுர்னிலாதவர்போல்
தூரம்போதன்முன்றொடர்துமென்றிளையவன்றொழுதும். (கசுங

ஆமதேயினியமைவதென்றமலனுமெய்யில்
தாமவார்கணைப்புட்டிலுமுதலியதாங்கி
வாமமால்வரைமானிவைமடிதரவயவர்.
பூமிமேலவன்றேர்சென்றநெடுநெறிப்போனார். (கசுச)

மண்ணின்மேலவன்றேர்சென்றசுவடெலாமாய்ந்து
விண்ணினோங்கியதொருநிலைமெய்யுறவெந்த
புண்ணினூடுறுவேலெனமனமிகப்புழுங்கி
எண்ணின்றினிச்செய்வதென்னிளவலேயென்றான். (௧௬௫)

தெற்குநோக்கியதெனும்பொருடெரிந்ததத்திண்டேர்
மற்குநோக்கியதிரள்புயத்தண்ணலேவானம்
விற்குநோக்கியபகழியினெடிதன்றுவிம்மி
நிற்குநோக்கியென்பயத்ததென்றிளையவனேர்ந்தான். (௧௬௬)

ஆகுமன்னதேக்கருமமென்றத்திசைநோக்கி
ஏகியோசனையிரண்டுசென்றாரிடையெதிர்ந்தார்
மாகமால்வரைகால்பொரமறிந்ததுமானப்
பாகவீணையின்கொடியொன்றுகிடந்ததுபார்மேல். (௧௬௭)

கண்டுகண்டகரோடுமக்காரிகைபொருட்டால்
அண்டராதியர்க்காரமர்விளைந்ததென்றயிர்த்தார்
துண்டவாளினிற்சுடர்க்கொடிதுணிந்ததென்றுணராப்
புண்டரீகக்கண்புனல்வரப்புரவலன்புகல்வான். (௧௬௮)

நோக்கினாலையநொய்திவணெய்தியநங்கை
மூக்கினோவிதுமுறிந்தமைமுடிந்ததான்மொய்ம்பின்
தாக்கினானடுவடுத்ததுதெரிகிலந்தமியேன்
யாக்கைதேம்பிடுமெண்ணரும்பருவங்களிறந்தான். (௧௬௯)

நன்றுசாலவுநடுக்கருமிடுக்கினனுமும்
சென்றுகூடலாம்பொழுதெலாந்தடுப்பதுதிடனால்
வென்றுமீட்கினுமீட்குமால்வேறுறவெண்ணி
நின்றுதாழ்ந்தொருபயனிலையென்றனனெடியோன். (௧௭0)

தொடர்வதேநலமாமெனப்படிமிசைச்சுற்றிப்
படருங்காலெனக்கறங்கெனச்செல்லுவார்பார்த்தார்
மிடல்கொள்வெஞ்சிலைவிண்ணிடுவின்முறிந்தென்னக்
கடலின்மாடுயர்திரையெனக்கிடந்ததுகண்டார். (௧௭௧)

சிலைகிடந்ததாலிலக்குவதேவர்சீர்கண்டந்த
மலைகிடந்தெனவலியதேவழிவினாமதியின்
கலைகிடந்தெனக்காட்சியவிதுகடித்தொடித்தான்
நிலைகிடந்தவாநோக்கெனநோக்கினனின்றான். (௧௭௨)

நின்றுபின்னருநெடுநெறிகடந்துறநிமிரச்
சென்றுநோக்கினர் திரிசிகைத்திணிநெடுஞ்சூலம்
ஒன்றுபல்கணைமழையுறுபுட்டிலோரிரண்டு
குன்றுபோலவட்கிடந்தனகுறுகினருற்றார். (௧௭௩)

மறித்துஞ்சென்றனர்வானிடைவயங்குறவழங்கி
எறிக்குஞ்சோதிகள்யாவையுந்தொக்கனவெனலாம்
நெறிக்கொள்கானகமறைதரநிருதர்கோனெஞ்சின்
பறித்துவீசியகவசமுங்கிடந்ததுபார்த்தார். (௧௭௪)

கான்கிடந்ததுமறைதரக்கால்வயக்கலிமா
தான்கிடந்ததுசாரதிகிடந்துழிச்சார்ந்தார்
ஊன்கிடந்ததோளுதிரமுங்கிடந்துளதுலகின்
வான்கிடந்ததுபோல்பவன்கிடந்துழிவந்தார். (௧௭௫)

கண்டலங்குதங்கைத்தலம்விதிர்த்தனர்கவினார்
விண்டலந்துறந்திறுதியின்விரிகதிர்வெய்யோன்
மண்டலம்பலமண்ணிடைக்கிடந்தனமணியின்
குண்டலம்பலகுலமணிப்பூண்களின்குவியல். (௧௭௬)

தோளணிக்குலம்பலவுளகுண்டலத்தொகுதி
வாளிமைப்பனபலவுளமணிமுடிபலவால்
நாளனைத்தையுங்கடந்தனன்றமையனந்தாதை
யாளிபோல்பவர்பலருளர்பொருதனரிளையோய். (௧௭௭)

திருவிளையகனுரைசெயச்சுமித்திரைசிங்கம்
தருவினீளியதோள்பலதலைபலவென்றால்
பொருதுதாதையையித்தனைநெறிக்கொடுபோனான்
ஒருவனேயவனிராவணனெனவுரைத்தான். (௧௭௮)

மடலுழுட்டியதாரிளையோன்றனைமதியா
மிடலுழுட்டங்கடையுகநோக்கினன்விரைவான்
உடலுழுட்டியகுருதியம்பரவையினும்பர்க்
கடலுழுட்டியவனையெனத்தாதையைக்கண்டான், (௧௭௯)

துள்ளியோங்குசெந்தாமரைநயனங்கள்சொரியத்
தள்ளியோங்கியவமலன்றன்றனியுயிர்த்தந்தை
வள்ளியோன்றிருமேனியிற்றழனிறவண்ணன்
வெள்ளியோங்கலிலஞ்சனமலையெனவீழ்ந்தான். (௧௮0)

உயிர்த்திலன்றொருநாழிகையுணர்விலன்கொல்லென்
றயிர்த்ததம்பிபுக்கங்கையினெடுத்தனனருவிப்
புயற்கலந்தநீர்தெளித்தலும்புண்டரிகக்கண்
வியர்த்துப்பைப்பையவயர்வுதீர்ந்தினையனவிளம்பும். (௧௮௧)

(வேறு.)

தந்தாதையரைத்தனையர்கொலைநேர்ந்தார்
முந்தாரேயுள்ளார்முடிந்தான்முனையொருவன்
எந்தாயோவெற்காகநீயுமிறந்தனையோ
அந்தோவினையேனருங்கூற்றமானேனே. (௧௮௨)

பின்னுறுவதோராதேபேதுறுவேன்பெண்பாலாள்
தன்னுறுவதீர்ப்பான்றனியுறுவதோராதே
உன்னுறவுநீதீர்த்தாயோருறவுமில்லாதேன்
என்னுறுவான்வேண்டியிடருறுவேனென்றாயே. (௧௮௨)

மாண்டேனையன்றேமற்றையோர்குறைமுடிப்பான்
பூண்டேன்விரதந்தனுலுயிர்பொறுப்பேன்
நீண்டேன்மரம்போலநின்றொழிந்தபுன்றொழிலேன்
வேண்டேனிம்மாமாயப்புன்பிறவிவேண்டேனே. (௧௮௩)

என்றாரம்பற்றுண்ணவென்றானையச்சான்றோனயக்
கொன்றானுநின்றான்கொலையுண்டுநீகிடந்தாய்
வன்றாட்சிலையேந்திவாளிக்கடல்சுமந்து
நின்றேனுநின்றேனெடுமரம்போனின்றேனே. (௧௮௫)

சொல்லுடையாரொன்போவினியுளரோதொல்வினையேன்
இல்லுடையாள்காணவிறகுடையாயெண்ணிலாப்
பல்லுடையாயுன்னைப்படையுடையான்கொன்றகல
வில்லுடையேனின்றேன்விறலுடையேனல்லேனோ. (௧௮௬)

அன்னாபலபலவும்பன்னியழுமயங்கும்
தன்னேரிலாதானுந்தம்பியுமத்தன்மையனாய்
உன்னாவுணர்வுசிறிதுண்முளைப்பப்புள்ளரசும்
இன்னாவுயிர்ப்பானிருவரையுநோக்கினான். (௧௮௬)

உற்றதுணராதுயிருலையவெய்துயிர்ப்பான்
கொற்றவனைக்கண்டான்றனுள்ளங்குளிர்ப்புற்றான்
இற்றவிருசிறகுமின்னுயிருமேழுலகும்
பெற்றனனேயொத்தான்பெயர்த்தேன்பழியென்றான். (௧௮௭)

பாக்கியத்தாலின்றென்பயனில்பழியாக்கை
போக்குகின்றேன்கண்ணுற்றேன்புண்ணியரோவம்மினென்று
தாக்கியரக்கன்மகுடத்தலைதுமித்த
மூக்கினாலுச்சிமுறைமுறையேமோக்கின்றான். (௧௫௯)

வஞ்சனையால்வந்தவரவென்பதென்னுடைய
நெஞ்சகமேமுன்னேநினைவித்ததானாலும்
அஞ்சொன்மயிலையருந்ததியைநீங்கினிரோ
எஞ்சலிலாவாற்றலிருவீருமென்றுரைத்தான். (௧௬௦)

(வேறு.)

என்றவனியம்பலுமிளையகோமகன்
ஒன்றுமாண்டுறுபொருளொழிவுறுவகை
வன்றிறன்மாயமான்வந்ததாதியா
நின்றதுநிகழ்ந்ததுநிரப்பினானரோ. (௧௬௧)

ஆற்றலோனவ்வுரையறையவாணையால்
ஏற்றுணர்ந்தெண்ணியவ்வெருவைவேந்தனும்
மாற்றருந்துயரவர்மனக்கொளாவகை
தேற்றுதனன்றெனவினையசெப்புவான். (௧௬௨)

அதிசயமொருவராலமைக்கலாகுமோ
துதியறுபிறவியினின்பதுன்பந்தான்
விதிவயமென்பதைமேற்கொளாவிடின்
மதிவலியான்விதிவெல்லவல்லமோ. (௧௬௩)

தெரிவுறுதுன்பம்வந்தூன்றச்சிந்தையை
இரிவுசெய்தொழியுமதிழுதைநீரதால்
பிரிவுசெய்துலகெலாம்பெறுவிப்பான்றனை
அரிவுசெய்விதியினார்க்கரிதுண்டாகுமோ. (௧௬௪)

அலக்கணுமின்பமுமணுகுநாளிவை
விலக்குவமென்பதுமெய்யிற்றாகுமோ
இலக்கமுப்புரங்களையெய்தவில்லியார்
தலைக்கலத்திரந்ததுதவத்தின்பாலதோ. (௧௬௫)

பொங்குவெங்கோளராவிசும்புபூத்தன
வெங்கதிர்ச்செல்வனைவிழுங்கிநீங்குமால்
அங்கண்மாஞாலத்தைவிளக்குமாய்கதிர்த்
திங்களுமொருமுறைவளருந்தேயுமால். (௧௬௬)

அந்தரம்வருதலுமனையதீர்தலும்
சுந்தரத்தோளினர்தொன்மைநீரவால்
மந்திரவிமையவர்குருவின்வாய்மொழி
இந்திரனுற்றனவெண்ணவொண்ணுமோ. (௧௬௭)

தடைக்கரும்பெருவலிச்சம்பரப்பெயர்க்
கடைத்தொழிலவுணனைக்குலிசக்கையினன்
படைத்தனன்பறியதுபகழிவில்வலாய்
துடைத்தனனுந்தைதன்குவவுத்தோளினால். (௧௬௮)

(வேறு.)

பிள்ளைச்சொற்கிளியனுளைப்பிரிவுறலுற்றபெற்றி
தள்ளுற்றவறமுந்தேவர் துயரமுந்தந்ததேயால்
கள்ளப்போரரக்கரொன்னுங்களையினைக்களைந்துவாழ்த்தி
புள்ளிற்கும்புலனில்பேய்க்குந்தாயன்னபுலவுவேலோய. (௧௬௯)

வடிக்கண்வார்கூந்தலாளையிராவணன்மண்ணினோடும்
எடுத்தனனேகுவானையெதிர்ந்தெனதாற்றல்கொண்டு
தடுத்தனெனவனதெல்லாந்தவத்தரன்றந்தவாளால்
படுத்தனனிங்குவீழ்ந்தேனிதுவின்றுபட்டதென்றான். (௨௱)

கூறினமாற்றஞ்சென்றுசெவித்தொளைகுறுகாமுன்னம்
ஊறினவுதிரஞ்செங்கணுயிர்த்தனவுயிர்ப்புச்செந்தீ
ஏறினபுருவமேன்மேலிரிந்தனசுடர்களெங்கும்
கீறினதண்டகோளங்கிழிந்தனகிரிகளெல்லாம். (௨௱௧)

மண்ணகந்திரியநின்றமால்வரைதிரியமற்றைக்
கண்ணகன்புனலுங்காலுங்கதிரொடுந்திரியக்காவல்
விண்ணகந்திரியமேலைவிரிஞ்சனுந்திரியவீரன்
எண்ணரும்பொருள்களெல்லாமென்பதுதெரிந்ததன்றே. (௨௱௨)

குறித்தவெங்கோபம்யார்மேற்கோளுறுங்கொல்லென்றஞ்சி
வெறித்துநின்றுலகமெல்லாம்விம்முறுகின்றவேலைப்
பொறிப்பிதிர்படலைச்செந்தீப்புகையொடுபொடிப்பம்பொம்மென்
றெறிப்பதோர்முறுவலோன்றவிராமனுமியம்பலுற்றான். (௨௱௩)

பெண்டனியொருத்திதன்னைப்பேதைவாளரக்கன்பற்றிக்
கொண்டனனேகநீயிக்கோளுறக்குலுங்கல்செல்லா
எண்டிசையுறுதியானவுலகங்களிவற்றையின்னே
கண்டவானவர்களோடுங்களையுமாறின்றுகாண்டி. (௨௱௪)

தாரகையுதிருமாறுந்தனிக்கதிர்பிதிருமாறும்
பேரகல்வானமெங்கும்பிறங்கெரிபிறக்குமாறும்
நீரோடுநிலனுங்காலுநின்றவுங்கிடந்தயாவும்
வேரொடுமெழியுமாறும்விண்ணவர்விளியுமாறும். (உ௱ரு)

இக்கணமொன்றினின்றவேழினோடேழுசான்ற
மிக்கனபோன்றுதோன்றுமுலகங்கள்விளியுமாறும்
திக்குடையண்டகோளப்புறத்தவுந்தீந்துநீரின்
மொக்குளினுடையுமாறுங்காணெனமுளியும்வேலை. (உ௱சு)

வெஞ்சுடர்க்கடவுண்மீண்டுமேருவின்மறையலுற்றான்
எஞ்சலிறிசையினின்றயானையுமிரியல்போய
துஞ்சினவுலகமெல்லாமென்பதென்றுணிந்தநெஞ்சின்
அஞ்சினனிளையகோவுமயலுளோர்க்கவதியுண்டோ. (உ௱எ)

இவ்வழிநிகழும்வேலையெருவைகட்கிறைவன்யாதும்
செவ்வியோய்முனியல்வாழிதேவருமுனிவர்தாமும்
வெவ்வலிவீரநின்றால்வெல்லுமென்றேமுற்றாய்வார்
எவ்வலிகொண்டுவெல்வாரிராவணன்செயலையென்றான். (உ௱அ)

நாட்செய்தகமலத்தண்ணனல்கினநவையிலாற்றல்
தோட்செய்தவீரமென்னிற்கண்டனைசொல்லுமுண்டோ
தாட்செய்தகமலத்தானேமுதலினர்தலைபத்துள்ளாற்
காட்செய்கின்றார்களன்றியறஞ்செய்கின்றார்கள்யாரோ. (உ௱கூ)

தெண்டிரையுலகந்தன்னிற்செறுநர்மாட்டேவல்செய்து
பெண்டிரின்வாழ்வரன்றேயிதுவன்றேதேவர்பெற்றி
பண்டுலகளந்தோனல்கப்பாற்கடலமுதமந்நாள்
உண்டிலராயினிந்நாளன்னவர்க்குய்தலுண்டோ (உ௱௰)

வம்பிழைகொங்கைவஞ்சிவனத்திடைத்தமியள்வைகக்
கொம்பிழைமானின்பின்போய்க்குலப்பழிகூட்டிக்கொண்டீர்
அம்பிழைவரிவிற்செங்கையையன்மீராயுங்காலை
உம்பிழையென்பதல்லாலுலகஞ்செய்பிழையுமுண்டோ. (உகக)

ஆகலான்முனிவாயல்லையருந்ததியனையகற்பின்
காதலாடுயரநீக்கித்தேவர்தங்கருத்துமுற்றி
வேதநூன்முறையின்யாவும்விதியுளிநிறுவிவேற்றும்
தீதுளதுடைத்தியென்றான்சேவடிக்கமலஞ்சேர்வான். (உகஉ)

புயணிறவண்ணனுண்டப்புண்ணியன்புகன்றசொல்லைத்
தயரதன்பணியிதென்னச்சிந்தையிற்றழுவிநின்றான்
ஆயவினிமுனிவதென்னையரக்கராவருக்கந்தீர்க்கும்
செயுலினிச்செயலென்றெண்ணிக்கண்ணியசீற்றந்தீர்ந்தான். (௨௧௩)

ஆயபின்னமலன்றானுன்மயநீயமைதியென்ன
வாயிடைமொழிந்ததன்றிமற்றொருசெயலுமுண்டோ
போயதவ்வரக்கனெங்கேபுகலெனப்புள்ளின்வேந்தன்
ஓய்வினனுணர்வுந்தேயவுரைத்திலனுயிருந்தீர்ந்தான். (௨௧௪)

சீதங்கொண்மலருளோனுந்தேவருமென்பதென்னே
வேதங்கள்காண்கிலாமைவெளிநின்றேமறையும்வீரன்
பாதங்கள்கண்ணிற்பார்த்தான்படிவங்கொணெடியபஞ்ச
பூதங்கள்விளியுநாளும்போக்கிலாவுலகம்புக்கான். (௨௧௫)

வீடவனெய்தும்வேலைவிரிஞ்சனேமுதலமேலோர்
ஆடவர்க்கரசனோடுதம்பியுமழுதுசோரக்
காடமர்மரமுமாவுங்கற்களுங்கரைந்துசாய்ந்த
சேடரும்பாரினோர்க்குங்கரிஞ்சிரஞ்சேர்ந்தவன்றே. (௨௧௬)

அறந்தலைநின்றிலாதவரக்கனினுண்மைதீர்ந்தேன்
துறந்தனனென்றவஞ்செய்கேனோதுறப்பெனோவுயிரைச்சொல்லாய்
பிறந்தனன்பெற்றுநின்றபெற்றியாற்பெற்றதாதை
இறந்தனனிருந்துளேன்யானென்செய்கேனிளவலென்றான். (௨௧௭)

என்றலுமிளையகோவவ்விறையினையிறைஞ்சியாண்டும்
வென்றியாய்விதியின்றன்மைபழியிலவிளைந்ததொன்றோ
நின்றினிநினைவதென்னைநெருக்கியவரக்கர்தம்மைக்
கொன்றபினன்றோவெய்யகொடுந்துயர்குளிப்பதென்றான். (௨௧௮)

எந்தைநீயிம்பிற்றென்னையெண்மையனாகியேழைச்
சந்தவார்குழலினாளைத்துறந்தனைதணிதியேனும்
உந்தையையுயிர்கொண்டானையுயிருண்ணுமூற்றமில்லாச்
சிந்தையையாகினின்றுசெய்தவஞ்செய்கையென்றான். (௨௧௯)

அவ்வழியிளவல்கூறவறிவனுமயர்வுநீங்கி
இவ்வழியினையவெண்ணினேழைமைப்பாலதென்று
செவ்வழிபொழியுங்கண்ணீர்விலக்கினன்விளிந்ததாதை
செவ்வழியுரிமையாவுந்திருத்துவஞ்சிறுவவென்றான். (௨௨0)

இந்தனமெனையவென்னக்காரகிலீட்டத்தோடும்
சந்தனங்குவித்துவேண்டுந்தருப்பையுந்திருத்திப்பூவும்
சிந்தினன்மணலின்வேதிதீர்தரவியற்றித்தெண்ணீர்
தந்தனன்றாதைதன்னைத்தடக்கையாலெடுத்துச்சார்வான் (௨௨௧)

ஏந்தினனிருகைதன்னாலேற்றினனீமந்தன்மேல்
சாந்தொடுமலருநீருஞ்சொரிந்தனன்றலையின்சாரல்
காந்தெரிகனலமூட்டிக்கடன்முறைகடவாவண்ணம்
நேர்ந்தனனிரம்புநன்னூன்மந்திரநெறியின்வல்லான். (௨௨௨)

இளித்தனகளித்தமேனிதாமரைக்கெழுவுசெம்பூத்
துளித்தனவனையவென்னத்துள்ளிசோர்வெள்ளக்கண்ணன்
குளித்தனன்கொண்டலாற்றுக்குளித்தபின்கொண்டனன்னீர்
அளித்தனனரக்கர்ச்செற்றசீற்றத்தானவலந்தீர்ந்தான். (௨௨௩)

மீட்டினியுரைப்பதென்னேவிரிஞ்சனேமுதலமேல்கீழ்
காட்டியவுயிர்களெல்லாமருந்தினகழித்தபோலர்ம்
பூட்டியகைகளாலப்புள்ளினுக்கரசைக்கொள்கென்
றூட்டியநன்னீரையனுண்டநீரொத்ததன்றே. (௨௨௪)

பல்வகைத்துறையும்வேதப்பலிக்கடன்பலவுமுற்றி
வெல்வகைக்குமானின்றவேலையின்வேலைசார்ந்தான்
தொல்வகைக்குலத்தின்வந்தான்றன்பத்தாற்புனலுந்தோய்ந்து
செல்வகைக்குரியவெல்லாஞ்செய்குவானென்னவெய்யோன்.. (௨௨௫)

அ-ஆவது. சடாயுவுயிர்நீத்தபடலம்முற்றிற்று, ஆக-திருவிருத்தம், ௱௩௨.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

## கூ-ஆவது-அயோமுகிப்படலம்,

அந்திவந்தணுகும்வேலையவ்வழிபவருநீங்கிச்
சிந்துரச்சென்னித்தாண்டோர்மைவிழாச்சேக்கைகொண்டார்
இந்திரர்க்கடங்கல்செல்லாவிராக்கதரொழுந்ததென்ன
வெந்துயர்க்கூற்றமாயவிரியிருள்வீங்கிற்றன்றே. (௧)

தேனுகவருவிசிந்தித்தெருமாலுற்றுவபோலக்
கானமுமலையுமெல்லாங்கண்ணினீருக்குங்கங்குல்
மானமுஞ்சினமுந்தாதைமரணமுமைந்தர்சிந்தை
ஞானமுந்துயருந்தம்முண்மலையெனநலிந்தவன்றே. (௨)

மெய்யுறவுணர்வுசெல்லா வறிவினை வினையினூக்கும்
பொய்யுறுபிறவிபோலப்போக்கரும்பொங்குகங்குல்
நெய்யுறுநெருப்பின்வீங்கி நிமிர்தரவுயிர்ப்புநீளக்
கையறவுறுகின்றானாற்காணலாங்கரையிற்றன்றே. (௩)

யாமதுதெரிதறேற்றா மின்னைகைச்சனகியென்னும்
காமருதிருவைநீத்தோர்முகமதிகாண்கிலாதே
தேமருதெரியல்வீரன்கண்ணெனத்தெரிந்தசெய்ய
தாமரைகங்குற்போதுங்குவியலர்தன்மையன்றே. (௪)

பெண்ணியற்றீபமன்னபேரெழிலாட்டிமாட்டு
நண்ணியபிரிவுசெய்தநவையிலாநனவயினுள்ளத்
தெண்ணியதறிதறேற்றாழிழைத்திலவிராமனென்னும்
புண்ணியன்கண்ணும்வன்றோட்டம்பிகண்போன்றவன்றே. (௫)

வண்டுளர்கோதைச்சீதைவாண்முகம்பொலியவானின்
கண்டனெனென்றுவீரற்காங்கொருகாதல்காட்டத்
தண்டமிழ்த்தென்றலென்னுங்கோளராத்தவழுஞ்சாரல்
விண்டலம்விளங்குஞ்செவ்விவெண்மதிவிரிந்ததன்றே. (௬)

களியுடையநங்கக்கள்வன்கரந்துறைகங்குற்காலும்
வெளிபடுத்துலகமெங்கும்விளக்கியநிலவின்வெள்ளம்
நளியிருட்பிழம்பொன்றீண்டுநஞ்சொடுகலந்தநாகத்
தொளையெயிற்றான்றலுற்றதாமெனச்சுட்டதன்றே. (௭)

இடம்படுமானத்துன்பமிருடரவெண்ணிற்றீர்ந்தான்
விடம்பரந்தனையதாயவெண்ணிலாவெதுப்பவீரன்
படம்பரந்தனையவல்குற்பால்பரந்தனையவின்சொற்
றடம்படுகண்ணினாடன்றனிநினைந்தினையலுற்றான். (௮)

(வேறு.)

மடித்தவாயன்வயங்குமுயிர்ப்பினன்
துடித்துவீங்கியொடுங்குறுதோளினன்
பொடித்ததண்டளிர்ப்பூவெரிடுமால்கரி
ஒடித்தகொம்பனையாடிறத்துன்னுவான். (௯)

வாங்கும்வில்லன்வரும்வருமென்றிரு
பாங்குநீணெறிபார்த்தனளோவெனும்
வீங்கும்வேலைவிரிதிரையாமென
ஓங்கியோங்கியொடுங்குமுயிர்ப்பினன். (௰)

தன்னினைந்திலளென்பதுசாலுமோ
மின்னினைந்தவிலங்குமெயிற்றினன்
நின்னிலென்றுநெருங்கியபோதவள்
என்னினைந்தனளோவெனவெண்ணுமால். (௰௧)

நஞ்சுகாலுநகைநெடுநாகத்தின்
வஞ்சவாயின்மதியெனமட்குவாள்
வெஞ்சினஞ்செயரக்கர்தம்வெம்மையை
அஞ்சினன்கொலென்றையுறுமாலென்பான். (௰௨)

பூண்டமானமும்போக்கருங்காதலும்
தூண்டநின்றிடைதோமுறுமாருயிர்
மீண்டுமீண்டுவெதுப்பவெதும்பினான்
வேண்டுமோவெனக்கின்னமும்வில்லென்பான். (௰௩)

வில்லைநோக்கிநகுமிகவீங்குதோட்
கல்லைநோக்கிநகுங்கடைக்கால்வரும்
சொல்லைநோக்கித்துணுக்கெனுந்தொன்மறை
எல்லைநோக்கினர்யாவருநோக்குவான். (௰௪)

கூதிர்வாடைவெங்கூற்றினைநோக்கினன்
வேதவேள்விவிதிமுறைமேவிய
சீதையென்வயிற்றீர்ந்தனளோவெனும்
போதகம்மெனப்பொம்மெனுயிர்ப்பினான். (௰௫)

நின்றுபல்லுயிர்காத்தற்குநேர்ந்தயான்
என்றுணைக்குலமங்கையொரேந்திழை
தன்றுயர்க்குத்தகவிலனாயினேன்
நன்றுநன்றென்வலியெனநாணுமால். (௰௬)

சாயுந்தம்பிதிருத்தியதண்டளிர்
தீயுமங்கவைதீர்கெனுஞ்செல்விருந்
தாயுமாவிபுழுங்கவழுங்குமால்
வாயுநெஞ்சும்புலரமயங்குவான். (௰௭)

பிரிந்தவேதுகொல்பேரபிமானங்கொல்
தெரிந்ததில்லைதிருமலர்க்கண்ணிமை
பொருந்தவாயிரங்கற்பங்கள்போக்குவான்
இருந்துகண்டிலன்கங்குலினீறரோ. (௰௮)

வென்றிவேற்கையிளவலைமேலெலாம்
ஒன்றுபோலவுலப்பிலநாள்கடாம்
நின்றுகாண்டியன்றேநெடுங்கங்குலுன்
இன்றுநீள்வதற்கேதுவெனென்னுமால். (௧௯)

நீண்டமாலைமதியினைநித்தமும்
மீண்டுமீண்டுமெலிந்தனைவெள்குவாய்
பூண்டபூணவள்வாண்முகம்போதரா
ஈண்டுசாலவிளங்கினையென்னுமால். (௨௰)

நீணிலாவினிசைநிறைதன்குலத்
தாணியாயபழிவரவன்னது
நாணிநாடுகடந்தனனுங்கொலோ
சேணுலாந்தனித்தேரவனென்னுமால். (௨௧)

சுட்டகங்குனெடிதெனச்சோர்கின்றான்
முட்டமைந்தநெடுமுடக்கோனொடு
கட்டிவாளரக்கன்கதிரோனையும்
இட்டனன்கொலிருஞ்சிறையென்னுமால். (௨௨)

துடியினேரிடைதோன்றலளாமெனின்
கடியகாரிருட்கங்குலின்கற்பம்போய்
முடியுமாகின்முடியுமிம்மூரிநீர்
நெடியமாநிலமென்னநினைக்குமால். (௨௩)

திறத்தினாதனசெய்தவத்தோருற
ஒறுத்துஞாலத்துயிர்தமையுண்டுழல்
மறத்தினார்கள்வலிந்தனர்வாழ்வரேல்
அறத்தினாலினியாவதெனென்னுமால். (௨௪)

தேனின்றெய்வத்திருநெடுநாட்சிலை
பூநின்றெய்யும்பொருகணைவீரனும்
மேனின்றெய்யவிமலனைநோக்கினான்
தானுந்தேர்கிலனாய்த்தடுமாறுவான். (௨௫)

உழந்தயோகத்தொருமுதல்கோபத்தால்
இழந்தமேனியுமெண்ணியிரங்கினான்
கெழுந்தகைக்கொருவன்மைகிடைக்குமேல்
பழந்துயர்க்குப்பரிவுறும்பான்மையால். (௨௬)

நீலமாயநிறத்தனிளைப்பிடைச்
சூலமாகத்தொலைவுறுமெல்லையின்
மூலமாமலர்முன்னவன்முற்றுறும்
காலமாமெனக்கங்குல்கழிந்ததே. (௨௭)

(வேறு.)

வெள்ளஞ்சிலம்புபாற்கடலின் விரும்புந்துயிலைவெறுத்தளிய
கள்ளுஞ்சிலம்பும்பூங்கோதைக்கற்பின்கடலிற்படிவாற்குப்
புள்ளுஞ்சிலம்பும்பொழில்சிலம்பும்புனலுஞ்சிலம்பும்புனைகோலம்
உள்ளுஞ்சிலம்புஞ்சிலம்பாவாலுயிருண்டாகும்வகையுண்டோ. (௨௮)

மயிலும்பெடையுமுடன்றிரியமானுங்கலையுமருவிவரப்
பயிலும்பிடியுங்கடகரியும்வருவதிரிவபார்க்கின்றான்
குயிலுங்கரும்புஞ்செழுந்தேனுங்குழலும்யாழுங்கொழும்பாகும்
அயிலுமமுதுஞ்சுவைநீத்தமொழியைப்பிரிந்தாலழியானே. (௨௯)

முடிநாட்டியகோட்டுதயத்துமுற்றவுற்றான்முதுகங்குல்
விடிநாட்கண்டுங்கிளிமிழற்றுமென்சொற்கேளாவீரற்காண்
டடிநாட்செந்தாமரையொதுங்குமன்னமிலளால்யானடைத்த
கடிநாட்கமலத்தெனவிழ்த்துக்காட்டுவான்போற்கதிர்வெய்யோன். ()

பொழிலைநோக்கும்பொழிலுறையும்புள்ளைநோக்கும்பூங்கொம்பின்
எழிலைநோக்குமிளமயிலினியல்பைநோக்குமியல்பானாள்
குழலைநோக்கிக்கொங்கையிணைக்குவட்டைநோக்கியக்குவட்டின்
தொழிலைநோக்கித்தன்னுடையதோளைநோக்கிநாள்கழிப்பான். (௩௧)

அன்னகாலையிளவீரனடியின்வணங்கிநெடியோயப்
பொன்னைநாடாதிண்டிருத்தல்பொருளோவென்னப்புகலோனும்
சொன்னவரக்கனி ருக்குமிடந்துருவியறிதுந்தொடர்ந்தென்னா
மின்னுஞ்சிலையார்மலைதொடர்ந்தவெயில்வெங்கானம்போயினரால். ()

(வேறு.)

ஆசைசுமந்தநெடுங்கிரியன்னார்
பாசிலைதுன்றுவனம்பலபின்னாக்
காசறுகுன்றினொடாறுகடந்தார்
யோசனையொன்பதொடொன்பதுசென்றார். (௩௩)

மட்படிசெய்ததவத்தினின்வந்த
கட்படிகோதையைநாடினர்கண்ணார்
உட்படிகோபமுயிர்ப்பொடுபொங்கப்
புட்படியுங்குளிர்கார்ப்பொழில்புக்கார். (௩௪)

ஆரியர்சிந்தையலக்கணறிந்தான்
நாரியையெங்கணுநாடினனாடிப்
பேருலகெங்குமுழன்றனன்பின்னா
மேருவைவெங்கதிர்மீளமறைந்தான். (௩௫)

ஆரண்டருகுஞ்செறியஞ்சனபுஞ்சம்
முரண்டனபோலிருளெங்கணுமுந்தத்
தெருண்டறிவில்லவர்சிந்தையின்முந்தி
இருண்டனமாதிரமெட்டுமிரண்டும். (௩௬)

இளிக்கறையின்சொலியைந்தனபூவை
கிளிக்கறையும்பொழில்கிஞ்சுகவேலி
ஒளிக்கறைமண்டிலமொத்துளதாங்கோர்
பளிக்கறைகண்டதில்வைகல்பயின்றார். (௩௭)

அவ்விடையெய்தியவண்ணலிராமன்
வெவ்விடைபோலிளவீரனைவீர
இவ்விடைநாடினைநீர்கொணர்கென்றான்
தெவ்விடைவில்லவனுந்தனிசென்றான். (௩௮)

எங்கணுநாடினனீரிடைகாணான்
சிங்கமெனத்தமியன்றிரிவானை
அங்கவனத்துளயோமுகியான
வெங்கணரக்கிவிரும்பினள்கண்டாள். (௩௯)

நன்மதியோர்புகன்மந்திரநாமச்
சொன்னமதியாவரவிற்றொடர்கிற்பாள்
தன்மதனோடுதன்வெம்மைதணிந்தாள்
மன்மதனாமிவனென்னுமனத்தாள். (௪௦)

அழுந்தியசிந்தையரக்கியலக்கண்
எழுந்துயர்காலின்வந்தெதிர்நின்றாள்
புழுங்குமென்னோவொடுபுல்லுவெனன்றி
விழுங்குவெனோவெனவிம்மலுழன்றாள். (௪௧)

இரந்தனெனெய்தியபோதிசையாது
கரந்தனைனனிகொண்டுகடந்தேன்
முரஞ்சினின்மேவிமுயங்குவெனென்று
விரைந்தெதிர்வந்தனளுயிரினும்வெய்யாள். (௪௨)

உயிர்ப்பினெருப்புமிழ்கின்றனளொன்ற
எயிற்றின்மலைக்குலமென்றினிதுண்ணும்
வயிற்றுவயக்கொடுமாசுணம்வீசு
கயிற்றினிசைத்தமுலைக்குழிகண்ணாள். (௪௩)

பற்றியகோளரியாளிபணிக்கண்
தெற்றியபாதசிலம்புசிலம்ப
இற்றுகயாவையுமீறுறுமந்நாள்
முற்றியஞாயிறுபோலுமுகத்தாள். (௪௪)

ஆழிவறக்கமுகக்கவமைந்த
மூழையெனப்பொலிமொய்பிலவாயாள்
கூழைபுறத்துவிரிந்ததொர்கொட்பால்
ஊழிநெருப்பினுருத்தனையொப்பாள். (௪௫)

தடிதடவத்தலைபலதழுவத்தாள்
நெடிதடையக்குடர்கெழுமுநிணத்தூண்
படிதடவப்பலபாவமிசைக்கும்
கடிதடவத்தினளுருமுகறிப்பாள். (௪௬)

இவையிறையொப்பனவென்னவிழிப்பாள்
அவைகுளிரக்கடிதழலுமெயிற்றாள்
குவைகுலையக்கடல்குவியவலைப்பாள்
நவையில்புவித்திருநாணநடப்பாள். (௪௭)

நீளரவச்சரிதாழ்கைநிரைத்தாள்
ஆளரவப்புலியாரமணைத்தாள்
யாளியினைப்பலதாலியிசைத்தாள்
கோளரியைக்கொடுதாழ்குழையிட்டாள். (௪௮)

நின்றனளாசையினீர்கலுழுங்கண்
குன்றிநிகர்ப்பகுளிர்ப்பவொளிப்பாள்
மின்றிரிகின்றவெயிற்றின்விளக்காள்
கன்றிருளிற்றிரிகோளரிகண்டான். (௪௯)

பண்டையினாசியிழந்துபதைக்கும்
திண்டிறலாளொடுதாடகைசீராள்
கண்டகராயவரக்கர்கணத்தோர்
ஒன்றொடியாமிவளென்பதுணர்ந்தான். (௫௦)

பாவியராமிவர்பண்பிலர்நம்பால்
மேவியகாரணம்வேறிலையென்பான்
மாவியல்கானின்வயங்கிருள்வந்தாய்
யாவளடியுரைசெய்கடிதென்றான். (௫௧)

பேசினனங்கவள்பேசுறநாணா
ஊசலுழன்றழிசிந்தையளுந்தான்
நேசமிலன்பினளாயினுநின்பால்
ஆசையின்வந்தையோமுகியென்றான். (௫௨)

பின்னுமுரைப்பவள்பேர்மொழில்வீரா
முன்னமொருத்தர்தொடாமுலையோடும்
பொன்னின்மணித்தடமார்புபுணர்ந்தென்
இன்னுயிரைக்கடிதீகுதியென்றாள். (௫௩)

ஆறியசிந்தையளஃதுரைசெய்யச்
சீறியகோளரிகண்கள்செவந்தான்
மாறிலவார்கணையிவ்வுரைவாயில்
கூறிடினின்னுடல்கூறிடுமென்றான். (௫௪)

மற்றவளவ்வுரைசெப்பமனத்தால்
செற்றிலள்கைத்துணைசென்னியின்வைத்தாள்
கொற்றவநீயெனைவந்துயிர்கொள்ளப்
பெற்றிடினின்றுபிறந்தனெனென்றாள். (௫௫)

வெங்கதமில்லவள்பின்னருமேலோய்
இங்கூறும்புனலூடுதியேனும்
அங்கையினுல்லையஞ்சலென்றால்
கங்கையினீர்கொணர்வென்கடிதென்றாள். (௫௬)

சுமித்திரைசேயவள்சொன்னசொலன்ன
கமித்திலனின்னிருகாதொடுகூசி
துமிப்பதன்முன்பகலென்பதுசொல்ல
இமைத்திலனின்றனளின்னநினைந்தாள். (௫௭)

எடுத்தனனேகினனென்முறைதன்னுள்
அடைத்திவன்வெம்மையகற்றியபின்னை
உடற்படுமாலுடனேயுறுநன்மை
திடத்திதுவேலனென்றயல்சென்றாள். (௫௮)

மோகனையென்பதுமுந்திமுயன்றாள்
மாகநெடுங்கிரிபோலியையவ்வா
ஏகினளும்பரினிந்துவொடேகும்
மேகமெனும்படிநொய்தினின்வெய்யாள். (ருகூ)

மந்தரம்வேலையில்வந்ததும்வானத்
திந்திரனூர்பிடியென்னலுமானாள்
வெந்திறல்வேல்கொடுசூரடும்வீரச்
சுந்தரனூர்தருதோகையுமொத்தாள். (சு௰)

ஆங்கவண்மார்பொடுகையினடங்கிப்
பூங்கழல்வார்சிலைமீளிபொலிந்தான்
வீங்கியவெஞ்சினவீழ்மதவெம்போர்
ஓங்கலுரிக்குமுருத்திரனொத்தான். (சுக)

இப்படியேகினளன்னவளிப்பால்
அப்பிடைதேடிநடந்தவனுவித்
துப்புடைமால்வரைதோன்றலனென்று
வெப்புடைமெய்யுடைவீரன்விரைந்தான். (சுஉ)

( வேறு. )

வெய்தாகியகானிடைமேவருநீர்
ஐதாதலினேவயலொன்றுளதோ
நொய்தாய்வரவேகமுநொய்திலனால்
எய்தாதொழியானிதுவென்னைகொலாம். (சுங)

நீர்கண்டனையிவ்வழிநேடினைபோய்ச்
சார்கொண்டெனவித்துணைசார்கிலனால்
வார்கொண்டணிகொங்கையையவ்வினர்பால்
போர்கொண்டனனோபொருளுண்டிதனை. (சுச)

அஞ்சொற்கிளியன்னவணங்கினைமுன்
வஞ்சித்தவிராவணன்வவ்வினனோ
நஞ்சிற்கொடியானடலைத்தொழிலால்
துஞ்சுற்றனனோவிதியின்றுணிவால். (சுரு)

வரிவிற்கையெனுருயிர்வந்திலனால்
தருசொற்கருதேனொருதையலையான்
பிரிவுற்றனனென்பதொர்பீழைபெருந்
தெரிவுற்றிடவாவியிழந்தனனோ. (சுசு)

உண்டாகியகாரிருளோ டொருவென்
கண்டானயல்வேறொருகண்ணிலனால்
புண்டானுறு நெஞ்சுபுழுங்குறுவெவ்
வண்டானிலெனெங்ஙனநாடுகெனோ. (௬௭)

தள்ளாவினையேன்றனியாருயிராய்
உள்ளாயொருநீயுமொளித்தனையோ
பிள்ளாய்பெரியாய்பிழைசெய்தனையால்
கொள்ளாவுலகுன்னையிதோகொடிதே. (௬௮)

போராவிடர்வந்தனபேர்க்கவலாய்
தீராவிடர்தந்தனைதெவ்வர்தொழும்
வீராவெனையிங்ஙன்வெறுத்தனையோ
வாராய்புறமித்துணைவைகுதியோ. (௬௯)

என்னைத்தருமெங்கையையென்னையரைப்
பொன்னைப்பொருகின்றபொலன்குழையாள்
தன்னைப்பிரிவேனுளனாவதுதான்
உன்னைப்பிரியாதவுயிர்ப்பலவோ. (௭௰)

பொற்றேடிவர்கின்றபொலங்குழையாள்
தற்றேடிவருந்துதவம்புரிவேன்
நிற்றேடிவருந்தநிரப்பினையோ
எற்றேடினைவந்தவிளங்களிறே. (௭௧)

இன்றேயிறவாதொழியேனெமரோ
பொன்றாதொழியார்புகல்வாருளரோ
ஒன்றாகியவுன்கிளையோர்களையெலாம்
கொன்றாய்கொடியாயிதுவுங்குணமோ. (௭௨)

மாந்தாமுதன்மன்னவர்தம்வழியில்
வேந்தாகைதுறந்தபின்மெய்யுறவோர்
தாந்தாமொழியத்தமியேனுடனே
போந்தாயெனைவிட்டனைபோயினையோ. (௭௩)

என்னாவுரையாவெழும்வீழுமிருந்
துன்னாவுணர்வோய்வுறுமொன்றலவால்
மின்னாதிடியாதிருள்வாய்விளைவீ
தென்னோவெனுமென்றனிநாயகனே. (௭௪)

நாடும்பலசூழல்கடோறுநடந்
தோடும்பெயர்சொல்லியுளைந்துயிர்போய்
வாடும்வகைசோருமயங்குறுமால்
ஆடுங்களிமாமதயானையனான். (௭௫)

கமையாளொடுமென்னுயிர்காவலினின்
றிமையாதவனித்துணைதாழ்வுறுமோ
சுமையாவுலகூடுழறெல்வினையேன்
அமையாதுகொல்வாழ்வறியேனெனுமால். (௭௬)

அறப்பாலுளதேலவன்முன்னவனைப்
பிறப்பானுறின்வந்துபிறக்கவெனா
மறப்பால்வடிவாள்கொடுமன்னுயிரைத்
துறப்பானுறுகின்றதொடர்ச்சியின்வாய். (௭௭)

போந்தானெடுமாயையினிற்பிரியா
சூர்ந்தானவனைச்சிபிடித்திளையோன்
சேர்ந்தாளிடுபூசல்செவித்தொளையில்
சேர்ந்தார்தலுமேதிருமாறெருளா. (௭௮)

( வேறு. )

பாற்றருகானகத்தரக்கர்பல்கழல்
முற்றருவெஞ்சமமுயல்கின்றதொதிர்
ஊற்றியவோசையன்றெருத்தியூறுபட்
டாற்றியகுரலவளரக்கியேகொலாம். (௭௯)

அங்கியினெடும்படைவாங்கியங்கது
செங்கையிற்கரியவன்றிரிக்குமெல்லையில்
பொங்கிருளப்புறத்துலகம்புக்கது
கங்குலும்பகலெனப்பொலிந்துகாட்டிற்றே. (௮௰)

நெடுவரைபொடிபடநிவந்தமாமரம்
ஒடிவுறநிலமகளுலையவூங்கெலாம்
சடசடவெனுமொலிதழைப்பத்தாக்குமா
முடுகினனிராமன்வெங்காலின்மும்மையான். (௮௧)

ஒருங்குயர்ந்துலகின்மேலுயிழிப்பேர்ச்சியுள்
கருங்கடல்வருவதேயனையகாட்சித்தான்
பெருந்துணைத்தம்முனைநோக்கிப்பின்னவன்
வருந்தலைவருந்தலைவள்ளியோவெனா. (௮௨)

வந்தனையடியனேன்வருந்தல்வாழிநின்
அந்தமிலுள்ளமென்றறியக்கூறுவான்
சந்தமென்றளிர்புரைசரணஞ்சார்ந்தனன்
சிந்தனையனம்வந்தனையசெய்கையான். (அ௩)

ஊற்றுறுகண்ணினீர்சொரிகநின்றவன்
ஏற்றிளங்கன்றினைப்பிரிவுற்றெங்கணும்
ஆற்றலினாற்றுவதரிதினெய்திய
பாற்றிளம்பான்முலையாவின்பான்மையான். (அ௪)

தழுவினன்பன்முறைதாரைக்கண்ணினீர்
கழுவினனாண்டவன்கனகமேனியை
வழுவிலாயெனமனக்கொடேங்கினேன்
எழுவெனமலையெனவியந்ததோளினாய். (அ௫)

என்னையங்கெய்தியதியம்புவாயென
அன்னவனஃதெலாமறியக்கூறலும்
இன்னலுமுவகையுமிரண்டுமெய்தினான்
தன்னலாதொருபொருட்டனக்குமேலிலான். (அ௬)

ஆய்வுறுபெருங்கடலகத்துளேயவன்
பாய்திரைவருதொறும்பரிதற்பாலனும்
தீவினைப்பிறவிவெஞ்சிறையிற்பட்டயாம்
நோயுறுதுயரெனநுடங்கனோன்மையோ. (அ௭)

மூவகையமரருமுலகமும்மையும்
மேவரும்பகையெனக்காகமேல்வரின்
ஏவரோகடப்பவரெம்பிநீயுளை
ஆவதேவலியினியாணும்வேண்டுமோ. (அ௮)

பிரிபவர்யாவரும்பிரிகபேரிடர்
வருவனயாவையும்வருகவார்கழற்
செருவலிவீரநிற்றீருமல்லது
பருவரலென்வயிற்பயிலற்பாலதோ. (அ௯)

வன்றொழில்வீரபோர்வலியரக்கியை
வென்றுபோர்மீண்டனையெனவிளம்பினாய்
புன்றொழிலனையவள்புகன்றசீற்றத்தால்
கொன்றிலைபோலுமாற்கூறுவாயென்றான். (௯௰)

தொளைபடுமூக்கொடுசெவிதுமித்துகத்
துளைவயினகிலொடுதடிந்துநீக்கிய
அளவையிற்பூசலிட்டரற்றினளென
இளையவன்விளம்பிநின்றிருகைகூப்பினன். (௬௧)

தொல்லிருடனைக்கொலத்தொடர்கின்றாளையும்
கொல்லலைநாசியைக்கொய்துநீக்கினாய்
வல்லைநீமனுமுதன்மரபினோயெனப்
புல்லினனுவகையிற்பொருமிவிம்முவான். (௬௨)

பேருந்துயரறப்பேர்ந்துளோரென
வீரனுந்தம்பியும்விடிவுநோக்குவார்
வாருணநினைந்தனர்வானநீரினால்
தாரணித்தங்கொருகிரியிற்றங்கினார். (௬௩)

கல்லகல்வெள்ளிடைக்கானகத்துள
பல்லவமலர்கொடுபடுத்தபாயலின்
எல்லையிற்றுயரினோடிருந்துசாய்ந்தனன்
மெல்லடியிளையவன்வருடவீரனே. (௬௪)

மயிலியல்பிரிந்தபின்மானனோயினால்
அயில்விலனொருபொருளவலமெய்தலால்
துயில்விலனென்பதுசொல்லற்பாலதோ
உயிர்நெடிதுயிர்ப்பினிடையூசலாடுவான். (௬௫)

மானவன்மெய்யிறைமறக்கலாமையின்
ஆனதோவன்றெனினரக்கர்மாயமோ
கானகமுழுவதுங்கண்ணினோக்குங்கால்
சானகியுருவெனத்தோன்றுந்தன்மையே. (௬௬)

கருங்குழற்சேயரிக்கண்ணிற்கற்பினோர்க்
கருங்கலமருங்குவந்திருப்பவாசையால்
ஒருங்குறத்தழுவுவானென்றுங்காண்கிலன்
மருங்குல்போலானதோவடிவுமெல்லவே. (௬௭)

புண்டரிகப்புதுமலரிற்றேன்பொதி
தொண்டையஞ்சேயொளித்துவர்த்தவாயமு
துண்டனனீண்டவளுழையளல்லளால்
கண்டுயிலன்றியுங்கனவுண்டாகுமோ. (கூஅ)

மண்ணினும்வானினுமற்றைமூன்றினும்
எண்ணினும்பெரியதோரிடர்வந்தெய்தினல்
தண்ணறுங்கருங்குழற்சனகன்மாமகள்
கண்ணினுநெடியதோகொடியகங்குலே. (கூகூ)

அப்புடையலங்குமீனமருமார்கலி
உப்புடையிந்துவென்றுதித்தவூழித்தீ
வெப்புடைவிரிகதிர்விரிப்பமெய்யெலாம்
கொப்புளம்பொடித்ததோகொதிக்கும்வானமே. (க00)

இன்னனவின்னனபன்னியீட்டழி
மன்னவர்மன்னவன்மதிமயக்கினன்
அன்னதுகண்டனனல்கினனெனத்
துன்னியசெங்கதிர்ச்செல்வன்றோன்றினன். (க0க)

கூ-வது, அயோமுகிப்படலம்முற்றிற்று. ஆகதிருவிருத்தம் - ககஙரு

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

## ய - ஆவது, கவந்தன்படலம்.

நிலம்பொறையிலதெனநிமிர்ந்தகற்பினுள்
நலம்பொறைகூர்தருமயிலைநாடிய
அலம்புறுபறவையுமழுவவாமெனப்
புலம்புறுவிடியலிற்கடிதுபோயினர். (க)

( வேறு. )

ஐயைந்தடுத்தயோசனையினிரட்டியடவிபுடைபடுத்த
வையந்திரிந்தார்கதிரவனும்வானிறைப்பண்வந்துற்றான்
எய்யுஞ்சிலைக்கையிருவருஞ்சென்றிருந்தேதீட்டியெவ்வுயிரும்
கையின்வளைத்துவயிற்றடக்குங்கவந்தன்வனத்தின்கண்ணுற்றார். (உ

(வேறு.)

எறுப்பினங்கடையுறயானையேமுதல்
உறுப்புடையுயிரெலாமுலைந்துசாய்ந்தன
வெறிப்புறுநோக்கினவெருவுகின்றன
பறிப்பருவலையிடைப்பட்டபான்மைய. (௩)

மரபுளிநிறுத்திலன்புரக்குமாண்பிலன்
உரனிலானொருவனாட்டுயிர்கள்போல்வன
வெருவுவசிந்துவகுவிவவிம்மலோ
டிரிவனமயங்குவவியல்புநோக்கினார் (௪)

மால்வரையுருண்டனவருவமாமரம்
கால்பறிந்திடுவனகானயாறுகள்
மேலுளதிசையொடுவெளிகரப்பன
சூன்முதிர்மேகங்கள்சுருண்டுவீழ்வன. (௫)

நாற்றிசைப்பரவையுமிறுதிநாளுறக்
காற்றிசைத்தெழவெழுந்துலகைக்கால்பரந்
தேற்றிசைத்துரந்துவந்திடுங்குகின்றன
போற்றிசைசுற்றியகரத்துப்புக்குளார். (௬)

தேமொழிதிறத்தினாலரக்கர்சேனைவந்
தேமுறவளைந்ததென்றுவகையெய்தினார்
நேமிமால்வரைவரநெருக்குகின்றதே
ஆமெனலாயகைம்மதிட்குளாயினார். (௭)

இளவலைநோக்கினனிராமனேழையை
உளைவுசெயிராவணனுறையுங்குமிவ்
வளைவயதாகுதலறிதியையநம்
கிளர்பெருந்துயரமுங்கீண்டதாமென. (௮)

முற்றியவரக்கர்தமுழங்குதானையேல்
எற்றியமுரசொலியேங்குஞ்சங்கிசை
பெற்றிலதாகலிற்பிறிதொன்றுமெனச்
சொற்றனனிளையவன்றொழுதுமுன்னினான். (௯)

தெள்ளியவமுதெழத்தேவர்வாங்கிய
வெள்ளெயிற்றரவந்தான்வேறோர்நாகந்தான்
தள்ளருவாலொடுதலையினால்வரைத்
துள்ளுறக்கவர்வதேயொக்குமூழியாய். (௰)

என்றிவைவிளம்பியவிளவல்வாசகம்
நன்றெனநினைந்தனனடந்தநாயகன்
ஒன்றிரண்டியோசனையுள்புக்கோங்கருன்
நின்றெனவிருந்தவக்கவந்தனோர்சென்றார். (௰௧)

வெயிற்சுடரிரண்டினைமேருமால்வரை
குயிற்றியவாமெனக்கொதிக்குங்கண்ணினன்
எயிற்றிடைக்கிடையிருகாதமீட்டிய
வயிற்றிடைவாயெனுமகரவேலையான். (௰௨)

ஈண்டியபுலவரோடவுணரிந்துவைத்
தீண்டியநெடுவரைத்தெய்வமத்தினைப்
பூண்டுயர்வடமிருபுடையும்வாங்கலின்
நீண்டெனக்கிடந்தனநிமிர்ந்தகையினான். (௰௩)

தொகைக்கனற்கருமகன்துருத்தித்தூம்பெனப்
புகைக்கொடிகளொடுபொடிக்குமூக்கினான்
பகைத்தகைநெடுங்கடற்பருகும்பாவகன்
சிகைக்கொழுந்திதுவெனத்திருகுநாவினான். (௧௪)

புரண்டுபாம்பிடைவரவெருவிப்புக்குறை
அரண்டனைநாடியோரருவிமால்வரை
முரண்டொகுமுழைநுழைமுழுவெண்டிங்களை
இரண்டுகூறிட்டெனவிலங்கெயிற்றினான். (௰௫)

ஓதநீர்மண்ணிவைமுதலவோதிய
பூதமோரைந்தினிற்பொருந்திற்றன்றியே
வேதநூல்வரன்முறைவிதிக்கும்பெரும்
பாதகந்திரண்டுயிர்படைத்தபுண்பினான். (௰௬)

வெய்யவெங்கதிர்களைவிழுங்குவெவ்வராச்
செய்தொழிலிலைதுயில்செவியின்றுள்ளையான்
பொய்கிளர்வன்மையிற்புரியும்புன்மையோர்
வைகுறுநகையுநகும்வயிற்றினான். (௰௭)

முற்றியவுயிரெலாமுருங்கவாரித்தான்
பற்றியகரத்தினன்பணைத்தபண்ணையில்
துற்றியபுகுதருந்தோற்றத்தீல்யமன்
றொற்றவாய்தற்செயல்குறித்தவாயினான். (௰௮)

ஓலமார்கடலெனமுழங்குமோதையான்
ஆலமேயெனவிருண்டழன்றவாக்கையான்
நீலமாமேனியிற்றலையைநீக்கிய
காலநேமியிற்பெருங்கவந்தக்காட்சியான், (௰௯)

தாக்கியதனைப்பில்காலெறியத்தன்னுடை
மேக்குயர்கொடுமுடியிழந்தமேருநேர்
ஆக்கையினிருந்தவன்றன்னையவ்வழி
நோக்கினரிருவருநுணங்குகேள்வியார். (௨௰)

நீர்புகுநெடுங்கடலடங்குநேமிசூழ்
பார்புகுநெடும்பகுவாயைப்பார்த்தனர்
சூர்புகலரியதோரரக்கர்தொன்மதில்
ஊர்புகுவாயிலோவீதுவென்றுன்னினர். (௨௧)

அவ்வழியிளையவனமர்ந்துநோக்கிய
வெவ்வியதொருபெரும்பூதமில்லவலாய்
வவ்வியதன்கையின்வளைத்துவாய்ப்பெய்யும்
செய்வதெனிவனெனச்செம்மல்சொல்லுவான். (௨௨)

பாரிடமேயிதுபரவைசுற்றுறும்
பாரிடமரிதெனப்பரந்தமெய்யது
பாரிடம்வலம்வரப்பரந்தகையது
பாரிடங்கெடுத்தமாவளையபாழியாய். (௨௩)

தோகையும்பிரிந்தனளெந்தைதுஞ்சினன்
வேகவெம்பழிசுமந்துழலவேண்டலேன்
ஆகலின்யானினியிதனுக்காமிடம்
ஏகுதியீண்டுநின்றிளவலேயென்றான். (௨௪)

ஈன்றவரிடர்படவெம்பிதுன்புறச்
சான்றவர்துயருறப்பழிக்குஞ்சார்வுமாய்த்
தோன்றலினென்னுயிர்துறந்தபோதலால்
ஊன்றியபெரும்பழிதுடைக்கவொண்ணுமோ. (௨௫)

இல்லியல்புடையநீசனித்தலின்சொலாம்
வல்லியவரக்கர்தம்மனையுளாளெனச்
சொல்லினன்மலையெனச்சுமந்ததூணியன்
வில்லினோன்செல்வனேமிதிலைவேந்தன்பால். (௨௬)

தலையவிழ்கோதையைத்தாங்கலாற்றலென்
இலைபுரிந்தளித்தன்மேலிவர்ந்தகாதலேன்
உளனெனவுரைத்தலினும்பரானென
விளிதனன்றாதலின்விளிதனன்றென்றான். (௨௭)

(வேறு.)

ஆண்டானின்னனபன்னிடவைபற்கிளைவீரன்
ஈண்டியானும்பின்னேகியபின்னிவ்விடர்வந்து
மூண்டான்முன்னேயாருயிரோடுமுடியாதே
மீண்டேபோதற்காமெனினன்றென்வினையென்றான். (௨௮)

என்றானென்னுப்பின்னுமிசைப்பானிடர்தன்னை
வென்றாரன்றேவீரர்களாவார்விரவாரின்
தன்றாய்தந்தைதம்முனெனுந்தன்மையர்முன்னே
பொன்றாரொன்றாநீங்குவதன்றேபுகழம்மா. (௨௯)

மானேயன்னாடன்னொடுதம்முன்வனையாரும்
கானேவைகக்கண்டுயில்கொள்ளாதயல்காத்தற்
கானேனென்னேயென்றவர்முன்னேயவரின்றித்
தானேவந்தேனென்றலின்வேறோர்தவறுண்டோ. (௩௰)

என்றாயுன்முன்னேவியயாயுமிசையின்னல்
பின்றாதெய்திப்பேரிசையாளற்கழிவுண்டேல்
பொன்றாமுன்னம்பொன்றுதியென்றானாவொய்யர்
நின்றாலன்றோநிற்பதுவாய்மைநிலையம்மா. (௩௰௧)

எற்பெற்றாளும்யானுமெனைத்தோர்வகையாலும்
நிற்பெற்றாற்குநிற்குநினைப்புப்பிழையாமல்
நற்பொற்றோளாய்நல்லவர்பேணநனிநிற்கும்
சொற்பெற்றான்மற்றாருயிர்பேணித்துறவேமால். (௩௰௨)

ஓதங்காலப்பல்பொருளும்முற்றுற்றொருவாத
வேதஞ்சொல்லுந்தேவரும்வீயுங்கடைவீயாய்
மாதங்கந்தின்றுய்ந்திவ்வனத்தின்றலைவாழும்
பூதங்கொல்லப்பொன்றுதிபோலும்பொருளுண்டோ. (௩௰௩)

கேட்டார்கொள்ளார்கண்டவர்பேணார்கிளர்போரில்
தோட்டார்கோதைச்சோர்குழறன்னைத்துவளாமல்
மீட்டானென்னும்பேரிசைகொள்ளான்செருவல்ல
மாட்டான்மாண்டானென்றபின்மேலும்வசையுண்டோ. (௩௰௪)

தணிக்குந்தன்மைத்தன்றெனினன்றித்தகைவாளால்
கணிக்குந்தன்மைத்தல்லவிடத்திற்கனல்பூதம்
பிணிக்குங்கையும்பெய்பிலவாயும்பிழையாமல்
துணிக்கும்வண்ணங்காணுதிதுன்பந்துறவென்றான். (௩௰௫)

என்னாமுன்னேசொல்லுமிளங்கோவிறையோற்கு
முன்னேசெல்லமுன்னவனன்னானினுமுந்தத்
தன்னேரில்லாத்தம்பிதடுப்பான்பிறரில்லை
அன்னோகண்டாரும்பரும்வெய்துற்றழுதாரால். (௩௰௬)

( வேறு. )

இனையராகியவிருவருமுகத்திருகண்போல்
கனையும்வார்கழல்வீரர்சென்றணுகலுங்கவந்தன்
வினையினெய்தியவீரர்நீர்யாவர்கொலென்ன
நினையுநெஞ்சினரிமைத்திலருருத்தனர்நின்றார், (௩௰௭)

அழிந்துளாரலரிகழ்ந்தனரென்னையென்றழன்றுன்
பொழிந்தகோபத்தன்புதுப்பொறிமயிர்ப்புறம்பொடிப்ப
விழுங்குவேனெனவிங்கலும்விண்ணுறவீரர்
எழுந்ததோள்களைவாள்களாலரிந்தனரிட்டார். (௩௮)

கைகளற்றுகுருதியாறொழுகியகவந்தன்
மெய்யின்மேற்கொடுகிழக்குறப்பெருந்திவிரவும்
மையமாநெடுந்தாழ்வரைக்தனிவரைதன்னோ
டையநீங்கியபேரொழிலுவமையனானான். (௩௯)

ஆனநாயகனங்கையிற்றீண்டியவதனால்
மூனுஞ்சாபத்தின்முந்தியதீவினைமுடித்தான்
தோளும்வாங்கியதோமுடையாக்கையைத்துறவா
நீளநீங்கியபறவையின்விண்ணுறநிமிர்ந்தான். (௪0)

விண்ணினின்றவன்விரிஞ்சனேமுதலினர்யார்க்கும்
கண்ணினின்றவனிவனெனக்கருத்துறவுணர்வான்
எண்ணிலன்னவன்குணங்களைவாய்திறந்திசைத்தான்
புண்ணியம்பயக்கின்றுழியரியதெப்பொருளே. (௪௧)

(வேறு.)

ஈன்றவனேயெப்பொருளுமெல்லைதீர்நல்லறத்தின்
சான்றவனேதேவர்தவத்தின்றனிப்பயனே
மூன்றாகவடாய்முளைத்தெழுந்தமூலமோ
தோன்றியிருவினையேன்சாபத்திடர்துடைத்தாய். (௪௨)

மூலமேயில்லாமுதல்வனேநீமுயலும்
கோலமேயார்க்குந்தெரிவரியகொள்கைத்தால்
ஆல்மேல்வாலினடையோவடைகிடந்த
பாலனேவாதிப்பரனேபகராயே. (௪௩)

காண்பார்க்குங்காணப்படுபொருட்குங்கண்ணாகிப்
பூண்பாய்போலிற்றியால்யாதொன்றும்பூணாதாய்
மாண்பாலுலகைவயிற்றொளித்துவாங்குதியால்
ஆண்பாலோபெண்பாலோவப்பாலோவெப்பாலோ. (௪௪)

ஆதிப்பிரமனுநீயாதிப்பரமனுநீ
ஓதியுறுபொருளுக்கப்பாலுண்டாயினுநீ
சோதிச்சுடர்ப்பிழம்புநீயென்றுசொல்லுகின்ற
வேதமுனாசெய்தால்வெள்காரோவேறுள்ளார். (௪௫)

எண்டிசையுந்திண்சுவராவேழ்நிலைவகுத்த
அண்டப்பெருங்கோயிற்கெல்லாமழகுடைய
மண்டலங்கண்மூன்றின்மேலென்றுமலராத்
புண்டரிகமொட்டின்பொகுட்டேபுரையம்மா. (௪௬)

பண்பாலமரர்வரம்பாருங்காணாத
எண்பாலுயர்ந்தவெறியோங்குநல்வேள்வி
உண்பாய்நீயூட்டுவாய்நீயிரண்டுமொக்கின்ற
பண்பாரறிவார்பகராய்பரமேட்டி. (௪௭)

நிற்குநெடுநீத்தநீரின்முளைத்தெழுந்த
மொக்குளேபோல்முரணிற்றவண்டங்கள்
ஒக்கவுயர்ந்துளவேதோன்றியொளிக்கின்ற
பக்கமறிதற்கெளிதோபரம்பரனே. (௪௮)

நின்செய்கைகண்டுநினைந்தனவோநீண்மறைகள்
உன்செய்கையன்னவைதான்சொன்னவொழுக்கினவோ
என்செய்தேன்முன்னமறஞ்செய்கையெய்தினார்
பின்செல்வதில்லாப்பெருஞ்செல்வநீதந்தாய். (௪௯)

மாயப்பிறவிமயனீக்கிமாசிலாக்
காயத்தைநல்கித்துயரின்கரையேற்றிப்
பேயொத்தேன்பேதைப்பிணக்கறுத்தவெம்பெருமான்
நாயொத்தேனென்னலனிழைத்தேனென்றான். (௫௦)

என்றாங்கினிதியம்பியின்றறியக்கூறுவெனேல்
ஒன்றாதுதேவருந்திக்கெனவுண்ணாத்
தன்றாயைக்கண்ணுற்றகன்றனையதன்மையனாய்
நின்றானைக்கண்டானெறிநின்றார்நேர்நின்றான். (௫௧)

பாராயிளையவனேபட்டவிவன்வேறேயோர்
பேராளன்றுணையொளிபோங்கும்பெற்றியஞ்ய்
நேராகாயத்தின்மிசைநிற்கின்றானீயிவனை
ஆராயெனவவனுமார்கொலோநீயென்றான். (௫௨)

(வேறு.)

சந்தப்பூணலங்கல்வீரதனுவெனுநாமத்தேனோர்
கந்தர்ப்பன்சாபத்தாலிக்கடைப்படுபிறவிகண்டேன்
வந்துற்றீர்மலர்க்கைதீண்டமுன்னுடைவடிவம்பெற்றேன்
எந்தைக்குமெந்தைநீரோயிசைப்பதுகேண்மினென்றான். (௫௩)

கணை புலர்ந்திலையினீரைக்காக்குநரின்மையேனும்
இணை ... டர்ளைநாடற்கே ... யசெய்தற்கேற்றும்
புணையிலாதவற்குவேலைபோக்கரிதன்னதேபோல்
துணையிலாதவற்குமின்றுபகைப்புலந்தொலைத்துநீக்கல் (௫௪)

பழிப்பறுநிலைமையாண்மைபகர்வதென்பதுமயீடத்
துழிப்பெருந்தகைகைசான்றவந்நணறுயிர்த்தவெல்லாம்
அழிப்பதற்கொருவனுனவண்ணலுமறிதிரன்றே
ஒழிப்பருந்திறற்பல்பூதகணத்தொடுமுறையுமுண்மை (௫௫)

ஆயதுசெய்கையென்பதறந்துறைநெறியினெண்ணித்
தீயவர்ச்சேர்கிலாதுசெவ்வியோர்ச்சேர்ந்துச்செயதல்
தாயினுமுயிர்க்குநல்குஞ்சவரியைத்தலைப்பட்டன்றன்
ஏயதோர்நெறியினைப்போயினைபின்குன்றமேறி. (௫௬)

கதிரவன்சிறுவனுபகனகவாளிறத்தானை
எதிரொதிர்தழுவிநட்பினினிதமர்ந்தவனினீண்ட
வெதிர்பெருந்தோளினானைநாடுதல்விழுமிதென்றான்
அதிர்கழல்வீரர்தாமுமன்னதேயமைவதானார். (௫௭)

ஆனவன்றொழுதுவாழ்த்தியந்தரமெழுந்துபோனான்
மானவக்குமரர்தாமுமத்திசைவழிக்கொண்டேகிக்
கானமுமலையுநீங்கிக்கங்குல்வந்திறுக்குங்காலை
யானையினிரட்டையென்னமதங்கனதிருக்கைசேர்ந்தார். (௫௮)

௧௦-வது-கவந்தன்படலம்முற்றிற்று. ஆக-திருவிருத்தம்-ககசுக.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்.

## கக-ஆவது·சவரிபிறப்புநீங்குபடலம்.

கண்ணியதருதற்கொத்தகற்பகத்தருவுமென்ன
உண்ணியநல்குஞ்செல்வமுறுநறுஞ்சோலைஞாலம்
எண்ணியவின்பமன்றித்துன்பங்களில்லையான
புண்ணியம்புரிந்தோர்வைகுந்துறக்கமேபோன்றதன்றே. (க)

அன்னதாமிருக்கைநண்ணியாண்டுநின்றளவில்காலம்
தன்னையேநினைந்துநோற்குஞ்சவரியைத்தலைப்பட்டண்ணாட்
மின்னுணாயருளித்தீதின்றிருந்தனைபோலுமென்றான்
முன்னிவற்கிதுவென்றெண்ணலாவதோர்மூலமில்லான். (உ)

ஆண்டவளன்பினேத்தியழுதிழியருவிக்கண்ணள்
மாண்டதென்மாயப்பாசம்வந்ததுவரம்பில்காலம்
பூண்டமாதவத்திற்செல்வம்போயதுபிறவியென்பாள்
வேண்டியகொணர்ந்துநல்கவிருந்துசெய்திருந்தவேலை. (ங)

ஈசனுங்கலத்தோனுமிமையவர்யாருமெந்தை
வாசவன்றானுமீண்டுவந்தனர்மகிழ்ந்துநோக்கி
ஆசறுதவத்திற்கெல்லையணுகியநிராமற்காய
பூசனைவிரும்பியெம்பாற்போதுதியென்றுபோனார் (ச)

இருந்தனையென்னைநீயீண்டேய்த்துதியென்னுந்தன்மை
பொருந்தி வின்றுதானென்புண்ணியம்பூத்ததென்ன
அருந்தவத்தரசிதன்னையன்புறநோக்கிநங்கள்
வருந்துறுதுயரந்தீர்த்தாயம்மனைவாழியென்றார். (ரு)

அங்கனுமிளையகோவுமன்றவணுறைந்தபின்றை
வினையறுநோன்பினாளுமெய்ம்மையினோக்கிவெய்ய
துனைபரித்தேரோன்மைந்தனிருந்தவத்துளக்கில்குன்றம்
நினைவரிதாயற்கொத்தநெறியெலாநினைந்துசொன்னாள். (சா)

வீட்டினுக்கமைவதானமெய்ஞ்ஞெறிவெளியிற்றாகக்
காட்டுறுமறிஞரொன்னவன்னவள்கழறிற்றெல்லாம்
கேட்டனனென்பமன்னோகேள்வியாற்செவிகண்முற்றும்
தோட்டவருணர்வினுண்ணுமமுதத்தின்சுவையாய்நின்றான். (எ)

பின்னவளுழன்றுபெற்றயோகத்தின்பெற்றியாலே
தன்னுடறுறந்துதானத்தனிமையினினிதுசார்ந்தாள்
அன்னதுகண்ட வீரர்திசயமளவின்றெய்திப்
பொன்னடிக்கழல்களார்ப்பப்புகன்றமாநெறியிற்போனார். (அ)

தண்ணெனுங்கானுங்குன்றுந்திசைகளுந்தவிரப்போனார்
மண்ணிடைவகரேறும்வரம்பிலாமாக்களாடக்
கண்ணியவினைகளென்னுங்கட்டழல்கதுவலாலே
புண்ணியமுருகிற்றன்னபம்பையாம்பொய்கைபுக்கார். (கூ)

கக-வது.. வரிபிறப்புநீங்குபடலம்முற்றிற்று. ஆக-திருவிருத்தம்-கஉ00

## ஆரணியகாண்டம்.

## முற்றிற்று.

பாலகாண்டம்-க-க்கு-படலம்-உங-க்கு-திருவிருத்தம்-கசகஎ.

அயோத்தியாகாண்டம்-க-க்கு-படலம்-கஉ-க்கு-திருவிருத்தம்-கஉ0அ.

ஆக-காண்டம்-ங-க்கு-படலம்-சசா-க்கு-திருவிருத்தம்-ஙஅஉரு.

கம்பநாட்டாழ்வார்திருவடிகளேசரணம்: